# வந்து பாருங்கள்!

17



## உயிர்த்தெழுதல்

S. சக்தி தேவதாஸ்

BOOKS AVAILABLE AT
S.JEEVANRAJ
No.80, First Floor, 6th Street
E.B. Colony, Khajamalai
Tiruchirappalli - 620023
Ph: 9944005799



# வந்து பாருங்கள்

S.சக்தி தேவதாஸ்

கிறிஸ்தவ நூல் பதிப்பகம்
125–19/2 இரண்டாவது தெரு,
தேவராயநகர்,
கே.கே.நகர் ரோடு
திருச்சி – 620 021.

# COME AND SEE
(TAMIL)


*FIRST EDITION : 24 DECEMBER 1988*

*SECOND EDITION : 27 JULY 2010*

*COPIES : 1000*

*PUBLISHED : No. 7, 17*



*COPY RIGHT : S.SAKTHI DAVADOSS*



*Publisher :*

CB PUBLICATIONS



S.SAKTHI DEVADOSS
C B P
125-19-2, 2nd Street, Devaraya Nagar,
K.K.Nagar Road,
TRICHY - 620 021.

# முகவுரை

இயேசுவானவரின் உயிர்த்தெழுதலைக்குறித்து சுவிசேஷங்களிலே எழுதிய, அப்போஸ்தலர்கள் முன்னுக்கு பின் முரனாக எழுதி, அவர் உயிர்த்தெழுந்தார் என்று கதை கட்டி இருக்கிறார்கள் என்றும், இவைகளில் நம்பத்தகுந்த ஆதாரங்கள் இல்லையென்றும் ஆகவே இயேசுவானவர் உயிர்த்தெழவில்லை என்றும் சில பக்கவழிப்பேர்வழிகளில் சிலர் இவ்விதமாக எழுதி தங்களின் நாத்தீக கொள்கைகளை நிலைநிறுத்த முயற்சித்திருக்கிறார்கள்.

இயேசுவானவர் உயிர்த்தெழுந்த வரலாற்றை சுவிசேஷங்களில் ஒழுங்காக எழுதவேண்டும் என்ற நோக்கத்தோடு அப்போஸ்தலர்கள் எழுதவில்லை. அதற்கு பதிலாக அவரவர்கள் தாங்கள் எவைகளைக் கண்டார்களோ அவைகளை அப்படியே எழுதி இருக்கிறபடியால், நாலு சுவிசேஷங்களிலும் வரலாறு சிதைந்திருப்பதை நாமும் காணமுடியும். அதனால் அவர் உயிர்த்தெழவில்லை என்று கூறுவது, ஒரு விதை வெடித்து, துளிர்த்து, அது செடியாக வில்லை. அது நம்பக் கூடாத காரியம் என்பது போலாகும்.

இயேசுவானவரின் உயிர்த்தெழுதலின் சம்பவங்களை இந்த சிறு புத்தகத்திலே வரிசைப்படுத்த மிகவும் முயற்சித்திருக்கிறேன். இதன் பலனாக சந்தேகம் நீங்கி, இயேசுவானவர் மெய்யாகவே உயிர்தெழுந்தார் என்று அறியவும், அவரை விசுவாசிக்கவும், அவரை அறியாதவர்கள் அவருடைய இரட்சைப் பாக்கியத்தைச் சுதந்தரிக்கவும் வழியாக அமையும் என்று நம்புகிறேன்.

விதைக்கிறவனுக்கு விதையும், புசிக்கிறவனுக்கு ஆகாரத்தையும் அருளும், நம்முடைய நல்ல பிதாவாகிய தேவனும், சவுலைபவுலாக்கிய கர்த்தராகிய இயேசுவும், சிறுமைப்பட்டவர்களுக்கு ஆறுதல் செய்கிற பரிசுத்த ஆவியானவருமாகிய திரியேக தெய்வமானவர் ஏழை அடியானுக்கு அளித்த கிருபையானது விருதாவாகப் போகாதபடி, அற்ப முயற்சியான இந்த சிறுபுத்தகத்தை ஆசீர்வதித்து கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் வல்லமையை விளங்கச் செய்வாராக! ஆமென்!

S.சக்திதேவதாஸ்

உத்தமபாளையம்
1.4.1988

# அணிந்துரைகள்

Dear Bro, Thank you for the book **"COME AND SEE"** you sent. it is a good book. let the Lord bless you and help you in this good work for him. I pray.

**Mr.M.E.CHERIAN**

(10.1.89) Madurai

This is a very good book with valuable spritual nourishment.

**Mr.K.V.Thamos**

(31.1.89) Chennai - 40

நீங்கள் வால்பாறைக்கு வந்த போது ஒருமணி நேரம் இதுபற்றி பிரசங்கம் உங்கள் மூலம் கேட்டேன். அருமையான விளக்கம். கர்த்தர் உங்கள் இலக்கிய ஊழிய பிரயாசங்களை ஆசீர்வதிப்பாராக!

**திரு.ஜான் முத்துசாமி**

(30.12.88)வால்பாறை

நூல் கிடைத்தது, தலையங்கங்களைப் படித்தேன். பலமாத கடினமான தியானம். அத்துடன் தியானமும் கூட அநேகருக்கு ஆசீர்வாதமாக அமையும். சந்தேகமில்லை. வருகையின் காலத்திற்குரிய பயனுள்ள நூல்! நன்றி மகிழ்ச்சி.

**திரு.ராஜேந்திரன்**

(31.12.92) திருவாரூர்.

நீங்கள் அனுப்பின வந்துபாருங்கள் என்ற அருமையான புத்தகம் கிடைத்தது. மிக்க நன்றி, இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைப் பற்றி எல்லா சந்தேகங்களையும் நீக்கி மிக அருமையாக உங்கள் நடையில் எழுதியுள்ளீர்கள். விசுவாசிகளுக்கு மிகவும் பிரயோசனப்படும். இந்த இலக்கியப் பணிகளை தொடர்ந்து செய்யுங்கள். கர்த்தர் தாமே உங்களை இவ்வூழியத்திலே கரம்பிடித்து பலப்படுத்துவாராக!

**திரு.ஜேம்ஸ் ஆபிரகாம்**

(3.1.89) ராஜபாளையம்

கர்த்தர் நாமத்திலே வந்து பாருங்கள் என்ற புத்தகம் அனுபினதற்காக நன்றி. உடனே பதில் எழுதாமைக்கு காரணம் : புத்தகம் வாசித்த பின்பு எழுதலாம் என்று இருந்து விட்டேன். காரணம் : வேதவசனத்தின் அடிப்படையில் வராத எந்த வாசகத்தையும், உபதேசத்தையும் நான் விரும்பி ஏற்றுக்கொள்வதில்லை. கர்த்தர் உங்களுக்கு வேத வசனத்தின் அடிப்படையில் எழுத பரிசுத்த ஆவியானவரின் வரத்தைத் தந்திருப்பதால் அவர் நாமத்திற்கே நன்றி.

**சகோதரி.சற்குணா**

(28.1.89) மேல் சேவர்

தாங்கள் எனது வேண்டுகோளுக்கிணங்கி வந்து பாருங்கள் என்ற புத்தகத்தை அனுப்பியது கிடைத்தது. சுவிசேஷத்தைப் படித்து மிக்க மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன். காரணம் தற்காலத்து கிறிஸ்துவின் சீஷராக தாங்கள் இருக்கிறீர்கள்.

புதிய ஏற்பாட்டு காலத்தில் சுவிசேஷங்களை எழுதியவர்களில் மிக முக்கியமாக கருதப்படும் மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் போன்றவர்களுக்குள் நீங்கள் ஐந்தாவதாக விளங்குகிறீர்கள் போலத் தோன்றுகிறது. அந்த அளவிற்கு இரத்தினச் சுருக்கமாக சுவிசேஷ விளக்கங்களை வரிசைப்படுத்தி பழைய, புதிய ஏற்பாடுகளின் வசன எடுத்துக்காட்டுகளும் என் உள்ளத்தைத் தொட்டது. பின் பகுதியில் கொடுத்த அறிவுரைகள் மிகச் சிறப்பாக உள்ளது.

**திரு.குப்புசாமி**

(22.7.89) தாழநல்லூர்)

தாங்கள் அன்புடன் அனுப்பி வைத்த இனிய புத்தகங்கள் கிடைக்கப் பெற்றேன். சத்தியவழியில் ஏறுநடைபோட தாங்கள் நூல்கள் வழிகாட்டும் எனில் மிகையாகாது. நூல்களில் படிப்பவைகளை பிறரோடு உரையாடவும் பகிர்ந்து கொள்வதற்குமேற்ற தலைப்புகளைப் பொருத்தி நன்றே நூல்களை எழுதியிருக்கிறீர்கள். பாராட்டுகள், நன்றி.

**திரு.தாமஸ்**

(21.7.93) சென்னை 112.

# இரண்டாம் பதிப்புரை

இயேசுவானவரின் உயிர்த்தெழுதலைப் பற்றி ஏறக்குறைய இருபத்திரண்டு வருசங்களுக்கு முன்பு முதற்பதிப்பாக வெளியிட்டேன். இரண்டாம் பதிப்பாக இந்த புத்தகத்தை வெளியிட வேண்டும் என்று நினைத்தது இல்லை.

நான் ஊழியத்திற்காக வந்து நாற்பது வருசங்கள் நிறைவுபெற போகிறபடியால் என்னுடைய சகல ஊழியங்களும் முடிவுக்கு வந்தது என்று எண்ணினேன்.

ஆனால் சற்றும் எதிர்பாராத நிலைமையில் இரு சகோதரர்கள்; புத்தக ஊழியத்திற்காக என தங்களின் வலது கரத்தினை கொடுத்தனர். இதனால் ஏதாகிலும் புதிய செய்திகளை வெளியிட வேண்டுமோ என எண்ணி கர்த்தரின் சமூகத்தில் காத்திருந்த போது இந்த உயிர்த்தெழுதலின் செய்திகளாகிய **"வந்து பாருங்கள்"** என்ற புத்தகத்தை வாசிக்க நேர்ந்தது. அதனால் மீண்டும் மக்களிடையே கர்த்தரின் வல்லமை விளங்கும் படியாக இந்த புத்தகத்தையே அச்சிடக் கொடுத்து வந்தேன். மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்த நம்முடையநல்ல ஆண்டவர்; இச்சிறு புத்தகத்தை ஆசீர்வதித்து தமது வல்லமையையும், மகிமையையும் விளங்கச் செய்வாராக! ஆமென்.

திருச்சி - 21
27.7.2010

உங்களன்பன்:
**S.சக்திதேவதாஸ்**



## சமர்ப்பணம் !

உயிர்த்தெழுந்த கர்த்தருக்கு
தங்கள் நேசத்தின்
கரம் நீட்டிய
அன்பர்களின் அன்புக்கும்
நேசத்தின் பிறப்பிடமான
கர்த்தரின் பொற்பாதங்களுக்கும்
இம்மலர்
சமர்ப்பணம் !
**(C.B.P.)**



## பொருளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| 1. கலிலேயா ஸ்திரீகள் | 1 - 10 |
| 2. யூதேயா ஸ்திரீகள் | 11-18 |
| 3. எம்மாவு சீஷர்கள் | 19 - 25 |
| 4. மேலறை சீஷர்களும், ஸ்திரீகளும் | 26 - 30 |
| 5. பதினொரு அப்போஸ்தலர்கள் | 31 - 34 |
| 6. அப்போஸ்தலர்கள் | 35 - 39 |
| 7. அப்போஸ்தலர்களும், சீஷர்களும் | 40 - 42 |
| 8. பரமேறுதல் | 43 - 46 |
| 9. உயிர்தெழுதலின் சாட்சிகள் | 47 - 60 |
| 10. உயிர்தெழுதலின் காரணங்கள் | 61 - 65 |
| 11. உயிர்தெழுதல்கள் | 66 - 74 |
| 12. கட்டளைகள் | 75 -80 |




# 1 கலிலேயா ஸ்திரீகள் (எருசலேம்)

**1.மகதலேனா மரியாள்:-(மக்தலா)**

இந்த மரியாள் மக்தலா ஊரைச் சேர்ந்தவள். ஆதலால் இவளை மகதலேனா மரியாள் என்று சீஷர்கள் அழைத்தனர். இவளுக்கு ஏழு பிசாசுகள் பிடித்திருந்தது என்று தெரிகிறது. இவள் எங்கு வைத்து நமதாண்டவரால் குணமாக்கப்பட்டாள் என்று தெரியவில்லை. இந்த அருமையான மாதும், பரிசேயன் வீட்டில் வைத்து, ஆண்டவருக்கு தைலம் பூசிய பாவியான ஸ்திரீயும் ஒருவர்தான் என்று சிலர் நினைக்கிறார்கள். எப்படியாயிருப்பினும், இந்த நேசகுணவாட்டி சுயவெறுப்பென்னும் ஆபரணம் தரித்து அது முதல் தன் ஆண்டவரைப் பின்பற்ற துவங்கினாள். அவளுடைய மென்மையான இருதயத்தை அறிந்த நல்ல எஜமான் அவள் தன்னைப் பின்பற்றும் போது, அவளை தடைசெய்யவில்லை. நொறுங்குண்ட இருதயமுள்ள இந்த மரியாள் சிலுவைக்கடியில் இயேசுவானவரின் தாயோடுக் காணப்படுகிறாள். அவரின் அடக்கம் முடிந்த பின்பு, இவள் போய், மற்ற ஸ்திரீகளோடு ஓய்ந்திருந்து, வாரத்தின் முதல்நாள் அதிகாலையில் அவருக்கு சுகந்த வர்க்கமிட மற்ற ஸ்திரீகளோடு சேர்ந்து வந்தாள், என்ன நடந்ததோ அறியோம்! இவள் கல்லறையினிடத்திற்குத் தனித்து வந்து சேர்ந்தாள். அங்கு கல்லறையை அடைத்திருந்தகல் எடுத்துப் போட்டிருக்கக் கண்டு அதிர்ச்சியுற்றாள். கல்லறைக்குள்ளே குனிந்து பார்த்து, கர்த்தரின் சரீரத்தை காணாமல் உடனே அவள் ஊருக்குள்ளே ஓடிவந்து “கர்த்தரை கல்லறையில் இருந்து எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். அவரை வைத்த இடம் எங்களுக்கு தெரியவில்லை” என்று யோவானுக்கும், பேதுருவுக்கும் அறிவித்தாள்.

யோவானும் பேதுருவும் கல்லறைக்கு ஓட, இந்த மகதலக்காரத்தியும் பதைபதைத்து அவர்களுக்கு பின்னாக ஓடினாள். இருந்தாலும் அவர்களை போல விரைவாக ஓட முடியவில்லை. அவள் கல்லறைக்கு வந்து சேரும் முன்னே பேதுருவும், யோவானும் திரும்பி இருந்தார்கள். அங்கு யாரையும் காணாததினால் அவளுடைய மனச்சுவர் இடிந்து நம்பிக்கையின் வீடு தகர்ந்து விழுந்தது, காட்டாற்றுவெள்ளம்

கரைபுரண்டு ஒடுவது போல, அவளுடைய கண்களில் கண்ணீர் ஆறு கரை புரண்டு ஓடியது. கண்களில் நீர் திரைகள் மறைக்க அவள் கல்லறையைக் குனிந்து நோக்கினாள்.

அங்கு அதிசயம் அவளுக்கு காத்திருந்தது. இப்போழுது அங்கு அமர்ந்திருந்த இருதூதர்கள் அவளிடத்தில் பேச ஆரம்பித்து “ஸ்திரீயே ஏன் அழுகிறாய்” என்றார்கள். அதற்கு அவள் என் ஆண்டவரை எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள். அவரை வைத்த இடம் எனக்கு தெரியவில்லை என்றாள். அதற்க்கப்புரம் அவர்கள் மறுமொழி அவளுக்கு சொல்லவில்லை. பின்பு பின்னால் ஏதோ ஆளரவம் கேட்டு அவள்திரும்பி, ஒருவர் நிற்பதை கண்டாள். அவரும் அவளிடம் பட்சமாக “ஸ்திரீயே ஏன் அழுகிறாய் யாரைத் தேடுகிறாய்” என்றார். துக்கமும் கலக்கமும் என்ற கார்மேகம் அவளுடைய நீதியின் கதிரவனை மறைத்துக் கொண்டபடியால் பேசினவர் இன்னார் என்று அவளுக்கு தெரியவில்லை. அவள் அவரை தோட்டக்காரர் என்றெண்ணி “ஐயா நீர் அவரை எடுத்துக்கொண்டு போனதுண்டானால் அவரை வைத்த இடத்தை எனக்குச் சொல்லும் நான் போய் அவரை எடுத்துக் கொள்வேன்” என்றாள். அவர் என்றால் எவர்? அந்த அம்மாளுக்குத் தெரிந்த ஆள் ஊருக்கெல்லாம் தெரிந்திருக்க வேண்டுமோ? பின்னே தன் நேச ஆண்டவரைப் பற்றி அவரிடம் எப்படிக் கூறுவது? அவர்தானே வந்து நிற்கிறார் என்று அவளுக்கு இன்னும் தெளிவு ஏற்படவில்லை. குனிந்த தலை நிமிரவில்லை போலும்! இது ஸ்திரீகளுக்குள்ள இயல்புதானே!

அன்பரசர் “ மரியாளே” என்றார். ஆ! அந்த பரிவின் குரல் இருதயத்தை ஊடுருவிப் பாய்ந்து, மயக்கமும், அந்த காரமுமான மேகத்தை அப்புறப்படுத்தியது. அவள் திடுக்கிட்டாள். திரும்பிப் பார்த்து ரபூனி என்றாள். அதற்கு மேல் வார்த்தைகள் இல்லை. அவர் பாதங்களில் விழுந்தாள்.

அன்பரசர் அவளை நோக்கி “என்னை தொடாதே” என்றார். ஏன்? நான் இன்னும் என் பிதாவிடத்திற்கு ஏறிப் போகவில்லை என்றார். நீ என் சகோதரரிடதிற்குப் போய் “ நான் என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும், உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப் போகிறேன் என்று அவர்களுக்குச் சொல்லு” என்றார். அவள்

போய் கர்த்தரை கண்டதையும் அவர் தன்னுடனே சொன்னவைகளையும் சீஷர்களுக்கு அறிவித்தாள்.

இவ்விதமாக நமது அன்பரசர் முதன் முதலில் மகதலேனா மரியாளுக்கு தரிசனமாகி, தம்மை உயிருள்ளவராக காண்பித்தார். இது தகுமோ? இது என்ன நியாயம்? அன்பான உயிருக்குயிரான சீஷனும் பாறையான பேதுருவும் ஓடி வந்திருக்க , அவர்களை வெறுமையாக அனுப்பிவிட்டு, அன்பரசர் இந்த மகதலக் காரத்திக்கு மட்டும் தரிசனமாக ஏதாகிலும் காரணமுண்டோ? அன்புள்ள தாயார் வியாகுல மாதாவாக தவித்துப் புலம்பிக் கொண்டிருக்க அவர்களை விடுத்து இவளுக்கு தரிசனமானது சரியோ? மேலும் அவருடைய அடக்கத்திற்காக பெத்தானியா மரியாள், அவருக்கு தைலம் பூசி அனுப்பியிருக்கும் போது முதலாவது அவளுக்கு தரிசனமாகி இருந்தால் அதை இந்த உலகம் தவறு என்று சொல்லப்போகிறதா? அன்பரசருக்கு இவைகளெல்லாம் தெரியாதா? தெரியும்! பின்னே மகதலக் காரத்திக்கு தரிசனம் ஆனது என்ன?

நேசமாதா வியாகுலம் என்ற துன்பக் கடலில் மூழ்கி மயக்கமாகியிருந்தாள். அவளுக்கு யார்? எப்படி? ஆறுதல் கூறமுடியும்? ஆகவே நேசமகன் மீண்டும் வருவார் என்று அறியாது துக்க சாகரத்தில் மூழ்கியிருந்தபடியால் இப்போழுது அம்மாளுக்கு வெளிப்படுத்துவது அவ்வளவு உகந்ததாக இருக்காது. இரண்டாவது: பெத்தானியா மரியாள் பற்றி ஒரு குறிப்பும் தெரியவில்லை அவளும் தன் நேச ஆண்டவரை பறி கொடுத்த ஏக்கத்தில் பெத்தானியாவிலே இருந்து விட்டதாக தெரிகிறது. ஆனால் மகதலேனா மரியாள் இவர்களை விட சற்று தைரியமும், உறுதியும் உள்ள குணசாலி. எனவே அதிகாலையில் தன் நேசஆண்டவரைத் தேடிக் கொண்டு கல்லறைக்கு வந்துவிட்டாள். அவருடைய சரீரத்தை காணவில்லை என்றதும் பதறி நொருங்கிப் போனாள். இனி காலதாமதம் செய்தால் அவள் ஜீவனுக்கு ஏதாகிலும் மோசம் நேரிடும் என்று அறிந்த நல்ல அன்பரசர் அவளை ஆறுதல் படுத்தும்படி அவளுக்கு முதல் முதல் தரிசனமானார். மேலும் மரணத்தை ஜெயிக்கும் படியாக ஸ்திரீயின் வித்தாக பிறந்து, ஒரு ஸ்திரீயின் மூலமாக மரணத்திற்கு அனுப்பப்பட்டவர்; அவர் மரணத்தை ஜெயித்து திரும்ப உயிர்த்தெழுந்து

வரும்போது, ஒரு ஸ்திரீக்கே தன் வெற்றியை அறிவிப்பது அவருக்கு ஏற்றதாக இருந்தது. அப்படி இல்லாவிடில் தாய்குலம் நொந்து மடிந்திருப்பார்கள். எனவே வெற்றி சிறந்த கர்த்தரின் முதல் வார்த்தைகளைக் கேட்கும்படி, மற்ற ஸ்திரீகளை விட இந்த மகதலேனா மரியாள் முந்திக் கொண்டாள். அன்புச் சகோதரியினுடைய இந்த நேசம்போல், தாய்குலத்தின் நேசம் கர்த்தர்பேரில் பெருகுவதாக!

(யோவா 19=25, மத் 27=61, -28=1, மாற் 16=1, 9,10, யோவா 20=1,2,11,18.)

2.சலோமே (பெத்சாயிதா)

இந்த அருமையான அம்மாள் செபதேயுவின் மனைவியாகும். இவளுடைய மக்களே பெரிய யாக்கோபும், அன்பான சீஷனுமாகிய யோவானுமாகும். இவர்கள் ஊர் பெத்சாயிதா; இவர்கள் நல்ல நேசமுள்ள குடும்பத்தினராகும். நமதெஜமான் உலகத்தில் பிரவேசித்த போது, இந்த அருமையம்மாள் தன்பிள்ளைகள் இருவரையும் அவருக்கு ஊழியம் செய்ய அனுப்பி வைத்தாள்.

இக்காலத்தில் தன் ஒருமகன் ஊழியத்திற்குப் போனாலோ மருகித்தவிக்கும் அன்பற்ற மாதுக்கள் இருக்கும்போது, சலோமியம்மாள் தன் இரு செல்வப் புதல்வர்களையும் கர்த்தரோடு அனுப்புவது என்ன லேசான காரியமோ? உலக மேன்மை, கல்வி, உத்தியோகம் இவைகளில் தன் பிள்ளைகள் தேறி கைநிறைய பொருள் சம்பாதிக்க வேண்டும் என்று இன்றைய தாய்மார்கள் இலட்சியமாக இருக்கும் போது அம்மாள் தன் செல்வப் புதல்வர்களை தன் ஆண்டவருக்கு காணிக்கையாக கொடுத்து விட்டாள். தாயைப்போல பிள்ளை நூலைப்போல சேலை என்பதற்கிணங்க அம்மாளுடைய பிள்ளைகள் என்ன சளைத்தவர்களா? அவர்களுடைய நேசம் ஆண்டவரை கவர்ந்தது. அவர்களை தம் மார்பில் சாய்ந்து கொள்ள அனுமதித்தார். அவர்களோ எரிந்து பிரகாசிக்கும் விளக்குப்போல், இடிமுழக்க மக்களாகவும், தீப்பொறி கக்கும் வீரர்களாகவும் விளங்கினர். எஜமான் அவர்களிடத்தில் அதிக பட்சமாக இருந்தார். அதைக்கண்ட அம்மாள் மனம் குளிர்ந்து போனாள்.

எஜமானருடைய புகழ் எங்கும் பரவியது. அவர் தேவராஜ்யத்தை ஸ்தாபிக்கப் போகிறார் என்ற பேச்சு எங்கும் பரபரப்பாக பேசி கொள்ளப்பட்டது. ஜனங்களில் அநேகர் அவரை ராஜாவாக்க மனதாயிருந்தனர்.

இவைகளை அறிந்த சலோமியம்மாள் வீட்டில் நிலையாக அமர்ந்திருக்க முடியவில்லை. தன் நேசமக்களோடு சேர்ந்து கர்த்தருக்கு பணிவிடை செய்வதே சிறந்த மெய்பாக்கியம் என்று அறிந்து தன்னுடைய பர்த்தாவினுடைய பணிவிடைகளை நிறுத்திவிட்டு கர்த்தருக்கு பணிவிடை செய்ய வந்து விட்டாள்.

கர்த்தருக்கு தன் பிள்ளைகளை கொடுத்த அம்மாள்; தன்பிள்ளைகள் கர்த்தரால் மேன்மை பெற வேண்டும் என்று விரும்பின அந்த நேசம்மாள்; எஜமானரிடம் வந்து உமதடியாள் வேண்டுவதை மறுக்காமல் செய்வதாக வாக்கு கொடுக்க வேண்டும் என்றாள். நேசம்மாளின் இருதயத்தை அறிந்த நல்ல எஜமான்; தம்முடைய பரமராஜ்யத்தை இவ்வுலக காரியமாக எண்ணின அம்மாளிடம் பட்சமாக பேசி, உங்களுக்கு என்ன வேண்டும் என்றார். அதற்கு நீர் உமது சிங்காசனத்தில் உட்கார்ந்து ஆளுகை செய்யும்போது என் பிள்ளைகள் இருவரும் உமது வலது, இடதுபுறம் அமர்ந்து ஆளுகை செய்ய அருள்புரிய வேண்டும் என்றாள். ஆண்டவருடைய பிரதியுத்தரம் அம்மாளுக்கு விளங்க வில்லை. ஆனாலும் கர்த்தருக்கு பணிவிடை செய்து வந்தாள். தேவராஜ்யத்தை நம்பியிருந்த அம்மாளுக்கு ஆண்டவர் சிலுவையில் தொங்கி இரத்தம் சிந்திய போது அவருடையதாயாகிய மரியாளோடு அருகில் நின்று சொல்லொன்னா துயரத்தில் ஆழ்ந்தாள். அவள் நம்பிக்கைத்தகர்ந்த நிலையில் இருந்த போதிலும் வாரத்தின் முதல்நாள் அதிகாலையில் மற்ற ஸ்திரீகளோடு சேர்ந்து தன்நேச ஆண்டவருக்கு சுகந்த வர்க்கமிடும்படிக்கு கல்லறைக்கு வந்து சேர்ந்த அந்த நேசம்மாள் ஏமாற்றத்துடன் திரும்பிப் போகவில்லை. கர்த்தர் மற்ற ஸ்திரீகளோடு அவளையும்கண்டு வாழ்க என்று வாழ்த்தினார்.

சலோமியம்மாள் தன்நேச மக்கள் இருவரையும் கர்த்தருக்கு கொடுத்து தானும் பணிவிடை செய்த பலன்களை இன்று கர்த்தரிடம் பெற்று, சமாதானமாக வாழ்ந்துகொண்டிருப்பாள். அந்தநேச அம்மாளைப் போல

இன்றும் ஆயிரக்கணக்கான நேசம்மாக்கள் இந்த உலகத்திற்கு வேண்டும்.

(மாற் 15=40, -16=1,-3, மத் 20=20)

3.யோவன்னாள் (திபேரியா)

கலிலேயாவின் தலைநகரம் திபேரியா, இங்கே தங்கி ஏரோது ஆட்சி புரிந்து வந்தான். இவனுடைய காரியக்காரனாகிய கூசாவின்மனைவியே யோவன்னாள். சூசன்னாள் என்ற அருமையான சகோதரியைப்பற்றிய விபரங்கள் இல்லை. இவர்கள் இருவரும் இயேசுவானவரின் கீர்த்தியை கேள்விப்பட்டு தங்கள் வீடு, வாசலை விட்டு தங்கள்அருமையான எஜமானருடைய சேவையில் மகிழ்ந்து அவரை பின்பற்றினார்கள். அதோடு மாத்திரமல்ல, அவர்கள் பெற்ற உலக ஆஸ்தியை தங்கள் எஜமானருக்கும் அவருடைய சீஷர்களுக்கும் செலவிட்டு ஊழியம் செய்து மகிழ்ந்தனர், இவர்களில் சூசன்னாளின் வரலாறு நமக்குத் தெரியாவிடினும் யோவானாள் இறுதிவரை தன் எஜமானரைப் பின்பற்றி அவர் உயிர்த்தெழுந்த அன்று காணப்பட்டாள். கர்த்தர் உயிர்த் தெழுந்ததைக் குறித்து சீஷர்களுக்கு போய் அறிவித்தாள். (லூக் 8=3, - 24=10)

இந்த அருமையான சகோதரிகளின் ஊழியங்கள் திரைமறைவில் இருக்கின்றன. நாம் அதிகமாக அறிந்து கொள்ள வாய்ப்பில்லை. நமது எஜமானரின் ஊழியத்தின் ஆரம்பகாலத்தில் சீஷர்கள் பசியும், தாகமுமாக அலைந்து சுற்றித் திரிந்துகொண்டு ஊழியம் செய்தார்கள். இந்த அன்பின் சகோதரிகள் நமது எஜமானரைப்பின்பற்றி வந்ததிலிருந்து அந்த துன்பம் நீங்கியது என்று சொல்ல வேண்டும்! மேட்டிமையும், பெருமையும் இல்லாதவர்களும் புகழ்ச்சியை விரும்பாதவர்களுமான இந்த அன்பரசிகள் நமதாண்டவரின் இரு கண்விழிகளை போல இருந்து, அவருடைய சீஷர்களுக்கும், அவரை பின்பற்றின மற்ற ஸ்திரீகளுக்கும் யாதொரு குறைவும் வராதபடி தங்கள் ஆஸ்திகளால் கவனித்து கொண்டார்கள். இவர்களைப் போன்ற உத்தம ஸ்திரீகள் இன்றும் இருக்கிறார்கள். யோவான்னாள் என்ற பிரிய சகோதரியோ,, தன்னுடைய நேச பர்த்தாவினுடைய பாதசேவையை விட்டு விட்டது மாத்திரமல்ல, தன்னுடைய

ஞான பர்த்தாவினுடைய சேவையில் இறுதிவரை இருந்து சிலுவையில் பறிகொடுத்த தன் நேச ஆண்டவரை இறுதிவரை உயிருள்ளவராக கண்டு ஆறுதல்அடைந்தாள்.அம்மாளின் இந்த அருமையான சேவையால் திருச்சபையில் புகழ்ச்சிக்குரியவளாக விளங்கினாள். அம்மாளின் அமைதியான இந்த ஊழியம் இன்றும் அநேக உத்தமிகளின் இருதயத்தை தட்டும் கோபுர மணியின் சத்தமாக தொனித்துக் கொண்டிருக்கிறது.

### 4. அநேக ஸ்திரீகள்

அநேக ஸ்திரீகள் என்று அநேக இடங்களில் குறிப்பிடப்படும் இந்த குணவதிகளின் பெயர்கள் தெரியவில்லை. ஆனால் வாழ்க்கை போராட்டத்தில் வெற்றி பெற்று இறுதிவரை தங்கள் ஆண்டவரை பின்பற்றினார்கள். அப்படியானால் பெயர் குறிக்கப்பட்ட மற்ற ஸ்திரீகள் தோல்வியடைந்தார்களா? அப்படியல்ல! இவர்கள் தங்கள் பெயர் தெரியாதபடிக்கு திரைமறைவில் மறைந்து கொண்டார்கள். அப்படியானால் மற்ற ஸ்திரீகள் புகழ்ச்சியை விரும்பினார்களா? இல்லை! இல்லை! நமதாண்டவரை பின்பற்றின ஸ்திரீகள் எல்லாம் மிகவும் நேசமுள்ளவர்கள் என்பதற்கு எவ்வித சந்தேகமுமில்லை. ஆனால் ஒவ்வொருவரும் ஒவ்வொருவகையில் தங்கள் எஜமானனுடைய சேவையில் சிறப்புப் பெற்றார்கள்.

நமது எஜமானனுடைய ஊழியத்தில் ஒரு பகுதி ஸ்திரீகளும் சம்பந்தப்பட்டனர். அவர்களில் சமாரியா ஸ்திரீயும், விபசாரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஸ்திரீயும் பாவியான ஸ்திரீயும், மகதலேனா மரியாளும், கானானிய ஸ்திரீயும், கூனியான ஸ்திரீயும், பெரும்பாடு ஸ்திரீயும், பேதுருவின் மாமியும், ஜெப ஆலயத்தலைவனின் மனைவியும், மரித்த வாலிபனின் விதவையான தாயும், மார்த்தாளும், மரியாளும், யோவானாளும், சூசன்னாளும், சலோமியும், கிலோயோப்பா மரியாளும், அவருடைய தாயாகிய மரியாளும், எருசலேமின் குமாரத்திகளும், பெயர் தெரியாத கலிலேயா ஸ்திரீகளும் அடங்குவர். ஆனால் நமதாண்டவர் சிலுவையில் மரணமடைந்த போது எல்லோருமே அங்கு இருந்திருப்பார்களோ என்று சொல்வதற்கு ஏதுக்களில்லை.

ஆனால் அவரைஅதிகமாக நேசித்த ஸ்திரீகள் மட்டுமே அங்கு இருந்தார்கள். இவர்கள் தங்கள் தேவராஜ்ய நம்பிக்கைத் தகர்ந்தவர்களாக கல்லறைக்கு எதிராக உட்கார்ந்தார்கள். (லூக் 23=49, - 24=1, 10)

வாரத்தின் முதல்நாள் விடிந்து மகதலேனா மரியாளும் கிலேயோப்பா மரியாளும், சலோமியும், யோவன்னாளும் கர்த்தருக்கு சுகந்தவர்க்கமிட புறப்பட்ட போது இந்த சில ஸ்திரீகளும் அவர்களோடு சேர்ந்து கொண்டார்கள். இவர்கள் எல்லோரும் ஓரே வீட்டில் தங்கியிருந்திருக்க வேண்டும். அவர்கள் புறப்பட்டு கல்லறை தோட்டத்திற்கு வந்த பொழுது, இன்னும் சற்று இருள் இருந்தது. கல்லறையின் வாசலில் பெரிய கல்ஒன்று புரட்டி வைத்ததை ஏற்கனவே இவர்கள் பார்த்திருந்தார்கள். இப்போழுது யார் அதை தள்ளக்கூடும் என்று பேசிக்கொண்டே தோட்டத்திற்குள் பிரவேசித்தார்கள். இந்த கல்லறை தோட்டம் மரம், செடி, கொடிகள் மிகவும் அடர்த்தியாகவும் விசாலமான நிலையில் பலகிளை வழிகள் உள்ளதாகவும் இருந்திருக்க வேண்டும். தோட்டத்திற்குள் நுளைந்த சகோதரிகள் யாவருக்கும் கல்லறை அடையாளம் தெரியவில்லை. இந்நிலையில் அவர்கள் மூன்று பிரிவினராக பிரிந்து கல்லறையை தேடிக் கொண்டு தோட்டத்தின் வழிகளில் சுற்ற ஆரம்பித்தார்கள். அங்கு ஏராளமான கல்லறை குகைகள் இருந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. சகோதரிகள் அங்குமிங்குமாக அலைந்து திரிந்தார்கள். இந்நிலையில்

முதல்பிரிவு சகோதரிகள் கர்த்தரை வைத்த கல்லறையிடமாக வந்தார்கள். அங்கு பிரதான ஆசாரியர்களின் காவல்சேவகர்கள் இருந்தனர். இது தான் என்று உறுதிப்படுத்திக் கொண்டு அவர்கள் முன்னேறும் போது வானத்திலிருந்து வந்த தூதன் அந்த கல்லை புரட்டித்தள்ளி, அதன் மீது ஏறிஉட்கார்ந்தான். உடனே காவல் சேவகர்கள் செத்தவனைப் போல் விழுந்தார்கள். உடனே அந்த தூதன் கர்த்தர் உயிர்த் தெழுந்த செய்தியை அவர்களுக்கு அறிவித்து அவருடைய சீஷர்களுக்கு அறிவிக்க கட்டளையிட்டான். அவர்கள் பயத்தோடும், நடுக்கத்தோடும் ஓடின பின்பு, மகதலேனா மரியாள் மட்டும் அவ்வழியே வந்து, கல்லறையை கண்டு திகைத்தாள். அவள் வருவதற்கு முன் காவல் சேவகர்

எழுந்து ஓடிவிட்டார்கள். அவர்களுமில்லை. தூதர்களும் மறைந்து கொண்டார்கள். அவள் கல்லறையை குனிந்து பார்த்துவிட்டு கர்த்தரின் சரீரத்தை காணாமல் அப்போஸ்தலர்களுக்கு அறிவிக்க ஓடினாள்.
(மத்28=1-8, யோவா 20=1,2)

இவர்கள் எல்லோரும் போனபின்பு இரண்டாம் பிரிவு சகோதரிகள் அந்தப்பக்கம் வந்தார்கள். அப்போழுது கல் புரட்டி தள்ளப்பட்டிருப்பதை கண்டனர். அவர்கள் கல்லறைக்குள் எட்டிப்பார்த்தனர். அப்போழுது தூதர்கள் கல்லறைக்குள் உட்கார்ந்திருந்தனர். அவர்கள் ஸ்திரீகளை கண்டவுடன் இயேசுவானவர் உயிர்த்தெழுந்த செய்தியை மறுபடியும் அறிவித்தனர். இந்த சகோதரிகள் பயம் நிறைந்தவர்களாய் திரும்பிப் போய், இந்த செய்தியை ஒருவருக்கும் அறிவிக்கவில்லை. (மாற்கு 16=1-8)

பின்பு மூன்றாம்பிரிவு சகோதரிகள் அவ்வழியாக வந்து கல்லறையின் கல் புரட்டித் தள்ளப்பட்டிருக்கிறதை கண்டனர். அவர்கள் கல்லறைக்குள் குனிந்து பார்த்தபோது இதே தூதர்கள் நின்று கொண்டிருந்தனர். இந்த ஸ்திரீகளின் கலக்கத்தை கண்ட தூதர்கள் மூன்றாம் முறையாக இயேசுவானவரின் உயிர்த்தெழுதலைப்பற்றி அவர்களுக்கு அறிவித்தனர். இவைகளை கேட்டு அவர்கள் சீஷர்களுக்கு அறிவிக்க ஓடினர். (லூக் 24=1-10)

இவ்விதமாக இந்த மூன்று பிரிவுகளையும் சேர்ந்த சகோதரிகள் யாவரும் ஒன்றாக மறுபடியும் சேர்ந்தார்களோ இல்லையோ நமக்குத் தெரியவில்லை. அவர்கள் சீஷர்களுக்கு அறிவிக்க ஓடுகிறபொழுது அன்பரசர் எதிர்ப்பட்டு வாழ்க என்றார். நேசத்தின் கண்மணிகளாக விளங்கிய அந்த யூதர்குல மாதர்கள் தங்கள் ஆண்டவரின் இனிய சத்தத்தை கேட்டு உள்ளம் நெகிழ்ந்து அவரின் பாதங்களில் விழுந்தனர். அவர்களுடைய நேச விழிகளிலிருந்து நீர் முத்துக்கள் உதிர்ந்து அன்பரசரின் பாதங்களில் விழுந்து கரைந்தன. அவருடைய குத்துண்ட பாதங்களைக் கண்டு உள்ளம் பொங்கிய நேச மாதரசிகள், மேலும் தங்கள் விழிமுத்துக்களை சிதறவிட்டு அவருடைய பாதங்களை தழுவி பணிந்து முத்தி செய்தனர். மகதலேனா மரியாளிடம் என்னை தொடாதே என்றவர், இங்கு தம்முடைய பாதங்களைத் தழுவிபணியும் படி அருள்புரிந்தார்.

ஏன்? அவர் கண்இமைக்கும் நேரத்திற்குள் தம்முடைய பிதாவிடம் சென்று தமது இரத்தத்தினால் நமக்காக மகா பிரதான ஆசாரியர் என்ற நிலைமையில் பாவ நிவர்த்தி செய்தார். இதோ நேச உள்ளங்கள் சிதறிப் போகுமுன் திரும்ப வந்து வாழ்க என்றார். மீண்டும் அன்பரசர் பேசினார். நீங்கள் என் சகோதரரிடத்திற்கு போய், கலிலேயாவுக்குப் போகும்படி சொல்லுங்கள். அங்கே அவர்கள் என்னைக் காண்பார்கள் என்றார். அந்தப்படி அவர்கள் சென்று அப்போஸ்தலர்களை கலிலேயாவுக்குப் போகும்படி துரிதப்படுத்தி மகிழ்ச்சியாயிருந்தனர்.





## ❷ யூதேயா ஸ்திரீகள் (எருசலேம்).

### 5. கிலேயோப்பா மரியாள் (எம்மாவு)

சுவிசேஷங்களில் மரியாள் என்ற பெயரில் நமக்கு நான்குபேர் அறிமுகப் படுத்தப்படுகிறார்கள். முதலாவது இயேசுவானவரின் தாயாகிய மரியாளும், இரண்டாவது இவளுடைய சகோதரியாகிய கிலேயோப்பா மரியாளும், மூன்றாவது பெத்தானியா மரியாளும், நாலாவது மகதலேனா மரியாளுமாகும், நம்முடைய நல்ல ஆவியானவர் இவர்களை நாம் பிரித்தறியும்படி அவர்களுடைய பெயர்களை பிரித்து நமக்கு எழுதிக் கொடுத்தது எவ்வளவு அருமையாக இருக்கிறது. ஒரு மண்டபத்திற்கு நான்கு தூண்களைப் போலவும் ஒரு இரதத்திற்கு நான்கு சக்கரங்களை போலவும், இந்த நான்கு மாது சிரோமணிகளும் விளங்குகிறார்கள்.

கிலேயோப்பா மரியாள், இயேசுவானவரின் தாயாகிய மரியாளோடு உடன் பிறந்த சகோதரியாக இருக்க முடியாது. பெரியம்மா, சின்னம்மா மக்களாக இவர்கள் இருக்க வேண்டும் என்று சிலர் கருதுகிறார்கள். அதற்கு காரணம் இருவருடைய பெயரும் ஒன்றாக இருப்பது தான். ஒரே குடும்பத்தில் ஒரே பெயரை இருவருக்கு வைக்கமாட்டார்கள் என்பது இவர்களுடைய கருத்தாகும். நாம் வீண் ஆராய்ச்சி செய்ய விரும்பவில்லை. எப்படியோ, இயேசுவானவரின் தாயாகிய மரியாளின் சகோதரி கிலேயோப்பா மரியாள் என்பதே நமக்கு கிடைத்த செய்தியாகும்.

கிலேயோப்பா மரியாளுக்கு யாக்கோபு, யோசே, யூதா, சீமோன் என்ற நான்கு ஆண் மக்களும் சில பெண்மக்களும் இருந்ததாக பரிசுத்த ஆவியானவர் கூறுகிறார். இந்த கிலேயோப்பா மரியாளின் பிள்ளைகள் இயேசுவானவரோடு சேர்ந்து வளர்ந்ததினால் இயேசுவானவருக்கு உடன் பிறந்தவர்களாகவும், இயேசுவானவரின் தாயாகிய மரியாளின் மக்களாகவும் எண்ணப்பட்டார்கள். (மத் 27=56, -13=55)

இயேசுவானவரின் தாயாகிய மரியாளும், கிலேயோப்பா மரியாளும் சிறுவயது முதற்கொண்டு, உயிருக்குயிராய், ஒருவரையொருவர் நேசித்து வளர்ந்திருக்கிறார்கள். இதனால் இயேசுவானவரோடு சேர்த்து தன் சகோதரியின்

பிள்ளைகளையும் மரியம்மாள் வளர்க்க காரணமாயிற்று.

இயேசுவானவரோடு சேர்ந்து கிலேயோப்பா மரியாளின் பிள்ளைகளும் கர்த்தருடைய வழிகளில் நன்கு வளர்க்கப்பட்டார்கள். இதன் காரணமாக யாக்கோபும், யூதாவும் இயேசுவானவரின் உயிர்த்தெழுதலின் பின்பு அவருக்கு ஊழியர்களாக மாறி யாக்கோபும் யூதாவும் நமக்கு அருமையான இரு நிருபங்களை எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். யாக்கோபு என்ற பெயர் அப்போஸ்தலர்களுடைய பெயர் பட்டியலில் இருவர் பெயர் வருகிறது. ஒன்று அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபு, இவன் மத்தேயுவின் சகோதரன் போல் தெரிகிறது.(மத் 10:3, மாற் 2:14)

இரண்டாவது : செபதேயுவின் குமாரன் யாக்கோபு; இவன் அன்பான சீஷனாகிய யோவானின் சகோதரன்; இவர்களுடைய தாய் சலோமே என்பவளாகும்.
(மாற் 3:17, -15:40, -16:1)

மூன்றாவது : இந்த கிலேயோப்பா மரியாளின் மகன் யாக்கோபு, இவன் இயேசுவானவரின் சகோதரனாகவும், ஊழியக்காரனாகவும், சின்ன யாக்கோபு என்றும் நமக்கு அறிமுகம் செய்யப்படுகிறான். செபதேயுவின் மகன் யாக்கோபு நமக்கு பெரிய யாக்கோபு என்று அறிமுகம் செய்யப்படுகிறான்.

இந்த மரியாளின் புருஷனின் பெயர் கிலேயோப்பா, இவர் மிகவும் அருமையானவர். இதனால் இவர் பெயரையும் இணைத்து கிலேயோப்பா மரியாள் என்று அம்மாள் அழைக்கப்படுகிறாள். இவர்கள் எம்மாவு ஊரில் குடியிருந்தார்கள். எம்மாவு எருசலேமிருந்து ஏழு அல்லது எட்டு மைல் தூரத்தில் இருந்தது. இவர்கள் அடிக்கடி இயேசுவானவரிடத்தில் வந்து மகனின் தீர்க்கமான காரியங்களை கண்டு விசுவாசித்து அவரை பின் பற்றினார்கள். இதனால் சிலுவையினடியில் அம்மாள் பிரமித்தவளாக தன் சகோதரியோடு கூட நின்று கொண்டிருந்தாள்.

பின்பு அவருடைய அடக்கம் முடிந்ததும் திரும்பிப்போய் வாரத்தின் முதல்நாள் அதிகாலையில் இயேசுவானவருக்கு சுகந்தவர்க்கமிட மற்ற ஸ்திரீகளோடு சேர்ந்து வந்து அவர் உயிர்த்தெழுந்தார் என்று தூதன் சொன்ன

செய்தியைக் கேட்டு வேகமாக ஓடிக்கொண்டிருக்கும் போது, இயேசுவானவர் எதிர்ப்பட்டு வாழ்க என்று வாழ்த்தினார். மெய்பாக்கியம் பெற்ற அம்மாள் வீட்டிற்குச் சென்று தன் சகோதரியாகிய மரியம்மாளுக்கு தாங்கள் எல்லோரும் கர்த்தரை கண்ட செய்தியைக் கூறி அவளை ஆறுதல் படுத்தினாள். அந்நாளிலே தானே அம்மாளுடைய புருஷனாகிய கிலேயோப்பாவும், மகன் யாக்கோபும், எம்மாவுக்கு போகும்போது, இயேசுவானவர் அவர்களுக்கு தரிசனமாகி தம்மை வெளிப்படுத்தினார். இவ்விதமாக இயேசுவானவரின் மகிமையை அறிந்த இந்த உயர்குல குடும்பத்தினர் தம் மக்கள் யாக்கோபையும் யூதாவையும் அவருடைய உயிர்த்தெழுதலுக்குச் சாட்சியாக ஒப்புக்கொடுத்து ஊழியத்திற்கு அனுப்பி வைத்தனர்.

6.மரியாள் (பெத்தானியா)

7.1.நற்கிரியை:- யூதர்களுக்குள்ளே விருந்தினர்களுக்கு தைலம்பூசுவது வழக்கமாக இருந்தது. விருந்து கொடுக்கும் வீட்டுஎஜமான் விருந்தினருக்கு தைலம் பூச வேண்டும். மிகுந்த கௌரவத்திற்கு உரியவர்கள் தாங்கள் செய்ய மனதற்று இதற்காக அடிமைகளை பயன்படுத்தினர். நெருங்கிய இனத்தவராக இருந்தால் வீட்டில் உள்ள வயோதிக விதவைகள் வந்து இக்காரியங்களை செய்வர். ஆனால் இளம் மங்கைகள் இவ்விதம் செய்வது அபூர்வ காரியமாகும்.

நமதெஜமானர் ஏற்கனவே ஒரு பரிசேயன் வீட்டில் பந்தியிருந்தபோது ஒரு பாவியான ஸ்திரீ வந்து இவ்விதமாக அவருக்கு தைலம் பூசினாள். வெளித்தோற்றத்தை கண்ட பரிசேயனைப் போல நமது நல்ல எஜமான் இல்லாதபடி அவளுடைய நொறுங்குண்ட இதயத்தைக் கண்டு அவள் தன்னை தொட்டு தைலம் பூசும்போது அவளை தடைசெய்ய வில்லை.

இப்பொழுது இரண்டாவது முறையாக மரியாள் விலையேறப் பெற்ற நளதம் என்னும் உத்தம தைலமுள்ள வெள்ளைக்கல் பரணியைக் கொண்டு வந்து, அதை உடைத்து அந்த தைலத்தை அவர் சிரசின்மேல் ஊற்றினாள். நளதம் என்ற தைலம் நளது என்று செடியில் இருந்து தயாரிக்கப்படுகிறது. இந்த நளதுச் செடி நமது இந்து தேசத்தில் கங்கைநதி

ஓரங்களிலும், குஷ் மலையடிவாரத்திலும் விளைவதாக ஒரு பழைய புத்தகக் குறிப்பு ஒன்றில் காணப்படுகிறது. ஆ! நாம் எவ்வளவு பாக்கியம் செய்தவர்கள். நமது தேசத்திலிருந்து நமது கர்த்தருக்கு சுகந்தவாசனை உண்டாக செய்திருக்கிறோம். நமது ஆவிக்குரிய நிலைமையோ இன்னும் சுகந்தம் வீசாமல் நமது வாழ்க்கை என்னும் பரணி உடைக்கப்படாமல் இருக்கிறது. இது சீஷர்களுக்கு அதிக விசனமாக இருந்தது. இந்த தைலத்தை விற்றுத் தரித்திரருக்கு கொடுக்கலாமே என்று முணுமுணுத்தனர். அப்போழுது எஜமான் இவளை விட்டு விடுங்கள், என்னை அடக்கம்பண்ணும் நாளுக்காக இவள் இதை வைத்திருந்தாள் என்றார். மரியாள் இந்த வெள்ளைக்கல் பரணியை வாங்கி, ஒருவேளை பலநாட்கள் ஆகியிருக்கக் கூடும். ஆனால் சரியான சமயத்தில் அதை உடைத்தாள். அதை கண்ட நமது எஜமான், இவள் என்னிடத்தில் நற்கிரியை செய்திருக்கிறாள் என்றார். விலையேறப் பெற்ற இந்த தைலம் சரீரம் கெட்டுப் போகாமல் பாதுகாப்புச் செய்யக்கூடியது. நமது எஜமானர் மரணத்திற்காக போகும்போது இருநாள் வரையிலும் அவருடை சரீரத்தை பாதுகாக்க மரியாள் தைலம் பூசினாள். இது அவள் அறிந்து செய்ததல்ல தன்னை அறியாமல் ஏற்ற சமயத்தில் செய்து கர்த்தரிடத்திலும் சபைகளிலும் புகழ்ச்சி பெற்றாள். எப்படி?

ஏவாளினால் முதல் ஆதாமின் சரீரம் அழிவுறக் காரணமாயிற்று மரியாளினால் இரண்டாம் ஆதாமின் சரீரம் அழிவில்லாமல் காக்கப்பட்டது. ஆ! இது எவ்வளவு பெரிய காரியம்! இவளை மறக்க முடியுமோ? நாமும் கர்த்தருக்குச் செய்ய வேண்டிய காரியங்களை சரியான நேரத்தில் செய்வோமாக!

(யோவா 12=3-7, லூக் 7=36-46, மாற் 14=1-6.)

**8.2.இவள் செய்தது:-** மேலும் மரியாள் நமதாண்டவரின் சிரசினிலே தைலம் வார்த்தது, அவர் அபிஷேகம் பண்ணப்படுவதற்கு எத்தனமான செய்கையாயிருக்கிறது. இது என்ன விசித்திரமான போதனை என்று எண்ணுகிறீர்களா? அபிஷேகம் செய்வது ஒரு தீர்க்கதரிசியோ அல்லது ஓர் ஆசாரியனோ தானே செய்ய வேண்டும். இங்கே ஒரு ஸ்திரீ செய்தான் என்றாள் இது தகுமோ? இது போல தைலஅபிஷேகம் ஆண்டவருக்கு

அவசியமா? என்றெல்லாம் எண்ணுகிறோம். நல்லது! அவசியமில்லைதான். ஆனால் இது ஒரு மாதிரி நிகழ்ச்சி என்று நினைத்துக் கொள்வோம்.

எப்படி? நமதாண்டவர் மரணத்தின் அதிகாரியான பிசாசானவனின் தலையை நசுக்கும்படியாக ஸ்திரீயின் வித்தாகப் புறப்படப் போகிறார். அவர் அறிவார். ஆனால் அவரை அனுப்புவதற்கு அவருடைய தாயார் வரவேண்டும். அவள் வந்து தன்மகனை உச்சிமுகர்ந்து என்மகனே! என் சிரேஷ்ட புத்திரனே! என் முதற் பெலனே போய் வெற்றியோடு திரும்பிவா என்று கூறி தலைக்கு என்னை வார்த்து அனுப்ப வேண்டும். ஆனால் அவருடைய தாயாரின் நிலைமை இன்னதென்று நமக்கு புரியவில்லை. மேலும் அவள் இங்கு வரவுமில்லை. ஆகவே இந்த மரியாள் இவருக்குத் தைலம் பூசி அனுப்புவது அவருக்கு ஏற்றதாக இருந்தது. ஆகையினால் அவள் தைலம் பூசும்போது இம்முறையும் நமதாண்டவர் அவள் தம்மைத் தொடும்படி அனுமதித்து அவளை தடைசெய்யாதிருந்தார்.

மேலும், இவ்விதமாக மரியாள் அவர் சிரசில் தைலம் வார்த்தது; எதிர்காலமாகிய இன்று நடைபெறும் ஆவிக்குரிய நிகழ்ச்சிக்கு முன் மாதிரியாக அமைந்தது. எப்படியெனில் தலையாகிய கிறிஸ்துவிடமிருந்து புறப்பட்ட ஆனந்த தைலமாகிய பரிசுத்த ஆவியானவர் அவருடைய சரீரமாகிய சபைக்கு வந்து பாதுகாப்புச் செய்கிறார். அவருடைய சரீரம் பூமியின் இருதயத்தில் இருநாள் வைக்கப்பட்டது போல சபையும் இருநாளுக்கு அடையாளமான இரண்டாயிரம் வருசங்கள் இந்த பூமியில் வைக்கப்பட்டிருக்கிறது. இயேசுவானவரின் சரீரம் மூன்றாம் நாளின் அதிகாலையில் உயிர்த்தெழுந்தது போல சரீரமாகிய சபையும் மூன்றாம்நாள் அதிகாலைக்கு அடையாளமான முவாயிர வருசத்தின் துவக்கத்தில் உயிர்த்தெழ வேண்டும். இதற்காக ஆனந்த தைலமாகிய பரிசுத்த ஆவியானவர் சரீரமாகிய சபையில் பூசப்பட்டு பாதுகாப்புச் செய்து கொண்டிருக்கிறார். ஆ! என்ன அருமையான காரியமாக மரியாள் செய்திருக்கிறாள். ஸ்திரீகளுக்குள்ளே அவள் ஆசீர்வதிக்கப்பட்டவள் அல்லவா! (மாற் 14=3, எபேசி 1=3,-4=3, 1நெச 4=14-16)

9.3.முந்திக் கொண்டாள்:- மரியாள் தைலம் பூசியது பற்றி, நமதாண்டவர் சீஷர்களுக்குக் கூறும்போது இவள் தன்னால் இயன்றதை செய்தாள். நான் அடக்கம் பண்ண படுவதற்கு எத்தனமாக என் சரீரத்தில் தைலம் பூச முந்திக் கொண்டாள் என்றார்.

அவருடைய தாசனாகிய யாக்கோபு மரணமடைந்த போது அவனுக்காக எழுபது நாள் சுகந்த வர்க்கமிட்டு துக்கங் கொண்டாடினர். அவனுக்காக எகிப்தின் இராஜரீக ராணுவ பரிவாரமே பின் சென்று அடக்கம் செய்தனர். ஆனால் நம்முடைய அருமையாண்டவருக்கு, அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பும் நிக்கெதோமும் ஒருசில ஸ்திரீகளும் சேர்ந்து மிக எளிமையான நிலமையில் சுகந்த வர்க்கமிட்டு அடக்கம் செய்தனர். ஆனால் அதற்குமுன் சுகந்த தைலத்தை பூசும்படி இந்த அருமையான மரியாள் முந்திக் கொண்டாள். ஸ்திரீயின் வித்தானவரின் சரீரத்தை ஒரு புருஷன் பாதுகாத்தான் என்ற சொல் தாய்குலத்திற்கு இழிவாக தோன்றாதபடி இந்த மரியாள் தைலம் பூச முந்திக் கொண்டாள். சத்துருவினால் வஞ்சிக்கப்பட்ட ஸ்திரீயே சத்துருவின் தலையை நசுக்க தன் குமாரனை அனுப்பி, வெகுண்டு எழுந்து தன்னால் இயன்ற காரியத்தைச் செய்ய முந்திக்கொண்டது. தாய்குலத்திற்கே கிடைத்த பெரிய வெற்றியாகும்.

10.4.இவளை நினைப்பதற்காக:- “இந்த சுவிசேஷம் உலகத்தில் எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ, அங்கங்கே இவளை நினைப்பதற்காக இவள் செய்ததும் சொல்லப்படும் என்று மெய்யாகவே சொல்லுகிறேன்” என்று உலகத்தை இரட்சிக்கும் சுவிசேஷத்தில் ஒரு இளமங்கையின் பெயரையும் நமதாண்டவர் சேர்த்துக் கொண்டார். ஆ! என்ன அதிசயம்! சுவிசேஷ ஊழியர்கள் தங்கள் ஆண்டவரை சுவிசேஷமாக அறிவிக்கும் போது, இந்த மரியாளையும் நினைத்துக் கொண்டு, இவள் செய்ததையும் கூறவேண்டுமாம்! அப்படி இவள் என்ன செய்துவிட்டாள். ஒரு தைலப் புட்டியை உடைத்து, தைலத்தை அவர் சிரசிலே ஊற்றினாள் அவ்வளவு தானே! அதற்காக இவ்வளவு புகழ்ச்சியாக இவளைப் பேசவேண்டுமா? உலகம் முடியும் வரை இவளை நினைக்க வேண்டுமா? இவளை விட சிறந்த உத்தம ஸ்திரீகள் வேதாகமத்தில் அநேகர் இருக்க இவள் மட்டும் இத்தனை

சிறப்புப் பெற்றதென்ன? அப்படி என்னதான் இவள் செய்ததில் மேன்மை இருக்கிறது?

"அப்பொழுது மரியாள் விலையேறப் பெற்ற கலங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தில் ஒரு இராத்தல் கொண்டு வந்து அதை இயேசுவின் பாதங்களில் பூசி தன் தலைமயிரால் அவருடைய பாதங்களை துடைத்தாள். அந்த வீடு தைலத்தின் பரிமளத்தினால் நிறைந்தது. (யோவா 12=3.)

மரியாள் அவர் சிரசினில் தைலம் வார்த்தது மாத்திரமல்ல, அவர் பாதங்களில் பரிமளதைலம் பூசி, தன் சிரத்தை கர்த்தரின் பாதங்ககளில் தாழ்த்தி தன் தலைமயிரால் அவருடைய பாதங்களை துடைத்தாள். சத்துருவின் மேல் வெற்றி சிறந்து, உலகத்தை தனக்கு கீழ்ப் படுத்த போகும் கர்த்தருக்கு முன்கூட்டியே தன் சிரத்தை சாய்த்து தன்னைக் கீழ்ப்படுத்தி விட்டாள்.

ஏவாளின் கீழ்ப்படியாமையினால் அல்லவோ உலகத்தில் மரணம் பிரவேசித்தது. ஆனால் மரியாளின் கீழ்ப்படிதலின் மூலமாக உயிர்த்தெழுதலும், ஜீவனும் விளங்கக் காரணமாயிற்று.

"வீசும் கமழ் கொண்ட வாசனைத் தைலத்தை
ஆசையுடன் மரிப் பூசிப் பணிந்தப் பொற் -
- பாதம் ஒன்றே வேண்டும்!

என்றல்லோ இன்று அவளுடைய சாயலில், நாம் கர்த்தரின் பாதங்களில் நமது சிரத்தைத் தாழ்த்துகிறோம்.

**11.5.பரமேறுதல்:-** வாரத்தின் முதல்நாளில், கர்த்தரைக் கண்ட மாதரசிகள் வந்து, அப்போஸ்தலர்களை கலிலேயாப் போகும்படித் துரிதப்படுத்தினர். பதினொருவரும் கலிலேயா போனபின்பு அன்று இரவு மேல்வீட்டில் வைத்து கர்த்தர் அவர்களுக்கு தரிசனமாகி உங்களுக்கு சமாதானம் என்றார். அவருடைய தாயாகிய மரியாளும் அங்கு இருந்தாள். தன்னுடைய நேச மகனை உலகத்தை உய்விக்கும் இரட்சகராக கண்டு உள்ளம் பொங்கினாள். அங்கிருந்த நேசமாதர்கள் எல்லோரையும் அப்போஸ்தலர் இல்லாத பிற சீஷர்களையும் நமதாண்டவர் வெளியே அழைத்துக் கொண்டு வந்தார். அவர்கள் எருசலேமின் குறுக்கு நெடுக்கான தெருக்களில் இருளின் அமைதிக்குள் மகிழ்ச்சிக் கடலில் நீந்தி ஊருக்கு

வெளியே நடந்தனர். எஜமான் வெற்றி சிறந்த கர்த்தராக முன்செல்ல அவர்கள் நிழல் தொடருவது போல பின் சென்று பெத்தானியா அடைந்தனர். அன்பரசரின் வருகையை அறிந்த பெத்தானியாவின் அருமை சகோதரிகள் எதிர்கொண்டு வந்து அவர் பாதங்களில் விழுந்து ஆனந்தக்கண்ணீரைப் பொழிந்திருப்பர். அப்போழுது ஐநூறுக்கு மேற்பட்டவர்கள் கூடி வந்து அன்பரசரைக் கண்டு உள்ள பூரித்தனர். இவர்களில் அவரை பின்பற்றின யூதர்குல கண்மணிகளான மாதர்களே அதிகம் இருந்திருப்பர். தங்கள் நேசஆண்டவருக்காக அவமானம், நிந்தைகள், பாடுகள், தீமைகள் எல்லாவற்றையும் சகித்து தியாகத்தோடு இறுதிவரை பின்பற்றினார்கள். யூதத்தாய் குலத்தினரின் உருக்கமான நேசத்திற்கு அன்பரசர் நன்றி செலுத்தும் வகையில் தம்முடைய கரங்களை உயர்த்தி நீங்கள் வாழ்க என்று ஆசீர்வதித்தார். பெண்மைக்கு சிகரமாக விளங்கிய யூதர்குல சிரோமணிகளான அந்த மாதரசிகள் அன்பரசருக்கு விழிநீர் முத்துக்களை காணிக்கையாக அருளினர். அன்பரசர் முகமலர்ந்து பிரகாசித்து அவர்கள் பார்த்துக்கொண்டிருக்க அவர் வானமுகில் வாகனமேறி பரலோகம் சென்றார். அவர்கள் அவரைப் பணிந்து கொண்டு மிகுந்த சந்தோசத்துடன் திரும்பி போய் அப்போஸ்தலர்களுடன் சேர்ந்து நாடோரும் அன்பரசரை போற்றிக் கொண்டிருந்தனர். ஆமென்.



## 3 எம்மாவு சீஷர்கள் (எம்மாவு)

12.1.செய்தி:- வாரத்தின் முதல்நாள் விடிந்தது. அன்று அதிகாலையில் கல்லறைக்குச் சென்ற பிரிய சகோதரிகள்திரும்ப வந்து, கர்த்தர் உயிர்த்தெழுந்தார் என்று சொன்ன தேவதூதர்களை கண்டோம் என்றனர். (சில சகோதரிகள்கர்த்தரையும் நாங்கள் கண்டோம் என்று அவர் கூறியதை அறிவித்தனர்) இவ்வார்த்தைகளை கேட்ட அப்போஸ்தலர்களுக்கும், சீஷர்களுக்கும் வீண்பேச்சாகத் தோன்றியது. அவர்கள் நம்பவில்லை. ஆகிலும் யோவானும் பேதுருவும் கல்லறைக்கு ஓடிப்போய் பார்த்துவிட்டு வந்து சகோதரிகள் சொன்னமாதிரி ஆண்டவருடைய சரீரத்தை காணாதபடி பிரமித்து நின்றனர். ஆனால் துக்கத்திலிருந்த சகோதரிகளுடைய முகங்களில் மலர்ச்சி காணப்பட்ட படியால் அவர்களுக்குப் புரியாத புதிராக இருந்தது. சகோதரிகளும் விட்டபாடில்லை. அப்போஸ்தலர்களை கலிலேயாவுக்கு போகும்படி துரிதப்படுத்தினர். அப்போஸ்தலர்களோ அரை குறை மனதோடு புறப்பட்டனர். கிலேயோப்பா மரியாள் தான் கர்த்தரை கண்டதைக்குறித்து தன் தமக்கையை ஆறுதல்படுத்திக் கொண்டிருந்தாள். இந்நிலையில் அப்போஸ்தலர்களும் கலிலேயாவுக்கு புறப்பட்ட படியினால் வீட்டிலிருந்த கிலேயோப்பாவும், மகன் யாக்கோபும் எம்மாவு ஊரில் தங்கள் வீடுவரை சென்று திரும்பலாம் என்று புறப்பட்டனர். என்ன காரியமோ அறியோம்! அவர்களின் கலக்கமும் துன்பமும் நீங்கின பாடில்லை (லூக் 24=13-18)

13.2.விசாரணை:- தந்தையும் தனயனும் சாலேமின் துக்கம் மாறும் என்ற நம்பிக்கையோடு எம்மாவு நோக்கி நடந்தனர். அவர்கள் மிகுந்த துக்கமுடையவர்களாய் இந்த வர்த்தமானங்கள் யாவையும் குறித்து ஒருவரோடோருவர் பேசிக் கொண்டார்கள், இப்படி அவர்கள் சம்பாசித்துக் கொண்டு போகும்போது, நமதாண்டவர் அவர்களுடனே சேர்ந்து நடந்துபோனார். தம் சொந்தக் குடும்பத்தை முதலாவது ஸ்திரப்படுத்த வேண்டும் என்று ஆண்டவர் எண்ணினார் போலும்! அருகே ஆளரவம் கேட்டும் அருகே நடந்து வருவதையும் கண்ட அருமைசீலர்கள் யாரோ அந்நியர் என்று எண்ணிக்கொண்டனர். அருமை ஆண்டவரை

அறியக்கூடாத படிக்கு அவர்கள் கண்கள் மறைக்கப்பட்டிருந்தது. ஆண்டவர் அவர்களிடத்தில் பட்சமாக நீங்கள் ஒருவருக்கொருவர் சொல்லிக் கொள்ளுகிற காரியங்கள் என்னவென்று விசாரித்தார். (லூக் 24=14-17)

14.3.அவிசுவாசம்:- ஜன்னலை இருக மூடிக்கொண்டு இருளிலே அமர்ந்திருக்கிறவர்களைப் போல இருக்கும் இந்த நல்ல குணசீலர்கள்; பேசினவர் யார் என்றும் சரியாக கவனிக்கவில்லை. ஊரேல்லாம் நாசரேத்து இயேசு சிலுவையில் அடிக்கப்பட்ட காரியத்தை பேசிக்கொண்டிருக்கும் போது, இந்த வினோதமான மனுஷன் அறியாமலிருக்கிறானே என்று எண்ணிக் கொண்டார்கள் அவர்களில் கிலேயோப்பா பிரதியுத்தரமாக இந்நாட்களில் எருசலேமில் நடந்தவைகள் அறியாதபடிக்கு நீர் என்ன அந்நியரா என்றான்? ஞானமுள்ள ஆண்டவர் அவர்கள் மனதை திறக்கும்படி எவைகள் என்றார்? அதற்கு அவர்கள் நசரேயனாகிய இயேசுவைக் குறித்தவைகளே அவர் தேவனுக்கு முன்பாகவும் ஜனங்களெல்லாருக்கும் முன்பாகவும் செய்கையிலும் வாக்கிலும் வல்லமையுள்ளத் தீர்க்க தரிசியாக இருந்தார். என்ன சொல்லுவோம்! நம்முடைய பிரதான ஆசாரியரும் அதிகாரிகளும் அவரை மரண ஆக்கினைக்குட்படுத்தி சிலுவையில் அறைந்தார்கள். அவரே இஸ்ரவேலை மீட்டு இரட்சிப்பார் என்று நாங்கள் நம்பியிருந்தோம். எங்கள் நம்பிக்கையெல்லாம் தகர்ந்தது. இவைகள் சம்பவித்து மூன்று நாட்கள்களாகின்றன. ஆனாலும் எங்கள் கூட்டத்தை சேர்ந்த சில ஸ்திரீகள் அதிகாலமே கல்லறையிடத்திற்கு போய் அவருடைய சரீரத்தை காணாமல், திரும்ப வந்து அவர் உயிரோடிருக்கிறார் என்று சொன்னார்கள். எங்களில் சிலர் கல்லறையினிடத்திற்கு போய் அவர்கள் சொன்னபடியே அவருடைய சரீரம் இல்லை என்று கண்டார்கள். நாங்கள் என்ன சொல்லுவோம்? அவரை எப்படி தேடுவோம்? பொல்லாத எங்கள் சொந்தஜனங்களின் காதுகளுக்கு இந்த செய்தி எட்டினால் அது என்னமாய் முடியுமோ? என்று கவலையாய் இருக்கிறது. அதனால் இதோ எங்கள் ஊர்வரைக்கும் போய்விட்டு வரலாம் என்று போகிறோம் என்றனர். (லூக் 24=17-24)

**15.4.கடிந்து கொள்ளுதல்:-** ஆண்டவருக்கு அவர்களுடைய பிரதியுத்தரம் ஆழ்ந்த வருத்தத்தை ஏற்படுத்தியது. கிலேயோப்பா தன்னுடைய சிறிய தகப்பன் எனப்பட்டவராகும். ஆதிமுதல் தங்களுடைய குடும்ப இரகசியங்களை யெல்லாம் நன்றாக அறிந்தவர். கடந்த மூன்று வருசத்திற்கு மேலாக தன் மூலமாக ஏற்பட்ட பிதாவின் மகிமையை அறிந்தவர். தேவராஜ்ய போதனைகளை பலமுறை கேட்டவர். மற்றவர்களுடைய விசுவாசத்திற்கு அவர்கள் குடும்பமாக எவ்வளவேனும் குறைந்தவர்களல்ல! அப்படியிருக்கும் போது தன்னுடைய சொந்தக்குடும்பமே தன்னுடைய உயிர்த்தெழுதலைக் குறித்து அவிசுவாசத்துடன் இருந்தால் மற்றவர்களைக் குறித்து என்ன சொல்வது? நமது ஞானமுள்ள ஆண்டவர் அவர்களை நோக்கி: அறிவு கெட்டவர்களே நீங்கள் புத்தியில் பேதலித்து போனது என்ன? இப்போதும் என்னை யார் என்று உற்றுப் பாருங்கள் என்று அதட்டி, தம்முடைய கரங்களையும் பாதங்களையும் உடனே காண்பித்திருக்கலாம். ஆனால் அவர்கள் உடனே அதிர்ச்சியுற்று மோசம் போயிருப்பார்கள். அவர்களுடைய பரிதாபமான மனநிலையை அறிந்த நல்ல ஆண்டவர் தமது வசனமே அவர்களுடைய கண்களைத் திறக்க வேண்டும் என்று முடிவு கொண்டார். சூரியனை மறைத்திருக்கும் மேகத்தை போல இருக்கும் அவர்களின் அவிசுவாசத்தை நீக்குவதே சரி என்று உணர்ந்தார். அவர்களிடம் அவர் மிகவும் இதமாக தீர்க்கதரிசிகள் சொன்ன யாவையும் விசுவாசிக்கிறதற்கு புத்தியில்லாத மந்த இருதயம் உள்ளவர்களே என்று கடிந்து கொண்டார். எஜமானனுடைய கடிந்துக் கொள்ளுதலைக் கேட்டு அவர்கள் தொட்டவுடன் வாடும் செடியைப் போல தங்களைத் தாழ்த்தி அவர் சொல்லியவற்றை கவனிக்கிறதிற்கு ஆயத்தமானார்கள். (லூக் 24=25)

**16.5.விவரித்தல்:-** நமதாண்டவர் அவர்களை நோக்கி கிறிஸ்து இவ்விதமாக பாடுபடவும் தமது மகிமையில் பிரவேசிக்கவும் வேண்டியதில்லையா என்று சொல்லி மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேதவாக்கியங்கள் எல்லாவற்றிலும் தம்மைபற்றி சொல்லியதை விவரித்து காண்பித்தார். எம்மாவுடைய குணசீலர்கள் தாங்கள் புறப்படும்போது ஞானமாக வேத தோல் சுருள்களை கையில்எடுத்துக்கொண்டு வந்தது போல் தெரிகிறது. எஜமான்

ஒருவேளை அவர்கள் கைகளிலிருந்து வாங்கி வேதவாக்கியங்களை விவரித்திருக்கலாம் போல் தெரிகிறது. அப்படியில்லாவிட்டால் ஞானமுள்ள யூதர்கள் எல்லா வேத ஆகமங்களையும் மனப்பாடம் செய்வது, அக்காலத்தில் வழக்கத்திலிருந்தது. இவைகளை அறிந்த ஆண்டவர் அவர்களுக்கு ஒவ்வொரு ஆகமத்திலிருந்து வேத வாக்கியங்களை ஞாபகப்படுத்தி உணர்த்தினாரோ என்று எண்ணத்தோன்றுகிறது. வேதவாக்கியங்கள் மூலமாகவே தமது உயிர்த்தெழுதலை அவர்கள் விசுவாசிக்க வேண்டும் என்று ஆண்டவர் நோக்கம் கொண்டார். பழைய உடன்படிக்கையின் ஆகமங்கள் தோறும், இயேசுவானவரின் மரணத்திற்கு ஒப்பான மரணம் குறிக்கபடுகிற இடங்களெல்லாம் அவருடைய உயிர்தெழுதலும் குறிக்கப் படுகிறதைக் காணமுடிகிறது.

ஆதாமிற்கு மரணம் குறிக்கப்பட்ட இடத்தில் ஒரு மிருகம் பலியானதால் அதன் தோல் உடைகளை ஆதாம் தரித்து இதோ உயிர்தெழுந்த பாவனையாக புறப்பட்டு போகிறான். உலகமெல்லாம் ஆக்கினைக்குள்ளாக்கப்பட்ட போது நோவாவின் பேழை தேவகுமாரனின் மரணத்திற்கு ஒப்பாக அலைக்கழிக்கப்பட்டு ஜலத்தில் மூழ்கி, அவர் உயிர்த்தெழுந்த பாவனையாக, பேழையானது அரராத் மலையில் நின்றது. விசுவாசத்தினாலே ஆபிரகாம் தன்னுடைய ஒரே பேறானவனையே பலியாக ஒப்புக் கொடுத்தான். ஆனால் மரித்தோரிலிருந்து எழுந்த பாவனையாக அவனை மீண்டும் பெற்றுக்கொண்டான். விசுவாசத்தினாலே மோசே முதற்பேறனவைகளை சங்கரிக்கிறான். இஸ்ரவேலரைத் தொடாதபடிக்கு அவன் பஸ்கா ஆட்டுக்குட்டியை அடித்து அதன் இரத்தம் பூசுதலாகி நியமத்தை ஆசாரித்தான். ஆனால் ஆட்டுக்குட்டி உயிர்த்தெழும் பாவனையாக அதன் எலும்புகள் முறிக்கப்படவில்லை. தேவனுடைய நீதியை நிறைவேற்ற இஸ்ரவேலர்கள் பறவைகளை பலியிட்ட போது அதன் தலை கிள்ளப்பட்டது. ஆனால் அது உயிர்த்தெழும் நம்பிக்கையை காட்டுவதற்காக அதன் உடல்கள் இரண்டாக வகுக்காமல் தகனம் செய்யப்பட்டது. தேவனோடு ஒப்புரவாக்கும் பலிகளின் மார்க்கண்டங்கள் உயிர்த்தெழுந்த பாவனையாக தேவ சமூகத்தில் அசைவாட்டப்பட்டது. சுத்திகரிப்பிற்குரிய பலியாக கொண்டுவரப்பட்ட இரு பறவைகளில் ஒன்று

பலியிடப்பட்டது. மற்றொன்று உயிர்த்தெழுந்த பாவனையாக பறக்கவிடப்பட்டது. பாவநிவாரணத்திற்காக கொண்டு வரப்பட்ட இரண்டு ஆடுகளில் ஒன்று பலியிடப்பட்டது. மற்றொன்று உயிர்த்தெழுந்த பாவனையாக வனாந்திரத்தில் போக்காடாக அனுப்பப்பட்டது. தேவனுடைய வாசஸ்தலத்தின் பிரகாரத்தில் வைக்கப்பட்ட தொட்டிக்குலீலி புஷ்ப வேலைகளை காண்பித்து உயிர்த்தெழுதல் நினைவு படுத்தப்பட்டது. பரிசுத்த ஸ்தலத்தில் அடிப்பு வேலையாக செய்யப்பட்ட குத்துவிளக்கின் பழங்களும், பூக்களும், மொட்டுகளுமாக உயிர்த்தெழுதல் நினைவு படுத்தப்பட்டது. மகா பரிசுத்த ஸ்தலத்தில் வெட்டிவைக்கப்பட்ட ஆரோனுடைய வாதுமை கோலானது உயிர்த்தெழுந்த பாவனையாக துளிர்த்து, பூத்து, பழுத்தது. இஸ்ரவேலின் ஞானப்பண்டிகையின் முதற்பலனாக கதிர்க்கட்டு கொண்டு வந்து, உயிர்த்தெழுந்த பாவனையாக தேவசமூகத்தில் அசைவாட்டப்பட்டது. கர்த்தருடைய தாசனாகிய தாவீது உம்முடைய பரிசுத்தரின் அழிவைக் காணவொட்டீர் என்றும் அவர் காண்டாமிருக கொம்புகளில் இருக்கும்போது நீர் செவி கொடுத்தீர் என்றும் சத்தியபரனாகிய கர்த்தாவே நீர் அவரை மீட்டுக் கொண்டீர் என்றும் அவருடைய உயிர்த்தெழுதலைக் குறித்து இப்படிக் கூறி உறுதிப்படுத்தினான் ஏசையா கூறும்போது அவர்தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார் என்று அவருடைய உயிர்த்தெழுதலைக் குறித்து இப்படிச் சொன்னான். தானியேல் கூறும் போது பிரபுவாகிய மேசியாவுக்கு கொடுக்கப்பட்ட ஒருவாரத்தில் பாதி சென்றபோது சங்காரம் செய்யப்பட்டு மீதி பாதி வாரத்தில் தம்முடைய உடன்படிக்கையை உறுதிப்படுத்துவார் என்று அவருடைய உயிர்த்தெழுதலைக் குறித்து இப்படிச் சொன்னான். மீறுதலுக்குட்படுத்தப்பட்ட யோனாமீனின் வயிற்றில் இரண்டு நாள் இருந்து, மூன்றாம் நாளில் கடலின் கரையில் கக்கி விடப்பட்டது போல தேவகுமாரனும் பூமியின் இருதயத்தில் இரண்டு நாள் இருந்து மூன்றாம் நாளில் உயிர்த் தெழுந்திருப்பார் என்று, இவ்வாறான வேதவாக்கியங்களில் உறுதி செய்யப்பட்டது. ஞானமுள்ள எஜமான் இவைகளை அவர்களுக்கு விவரித்து காட்டின பொழுது அவர்களுடைய இருதயம் கொழுந்து விட்டு எரிந்தது. அவர்கள் தங்கள் அறியாமையை எண்ணி வெட்கி

தலைகுனிந்தார்கள்.

"இருள் நீங்கி இன்பம் பயக்கும் மருள் நீங்கி
மாசறு காட்சியவர்க்கு - 352

மயக்கம் நீக்கி குற்றமற்ற மெய்யுணர்வை அடைந்த அந்த குணசீலர்கள் அந்த மெய்யுணர்வினால் தங்களுடைய அறியாமையை நீக்கி விசுவாசத்தின் இன்பநிலையை அடைந்தார்கள் ( லூக் 24=26,27)

17.6.வெளிப்படுத்துதல்:- மெய்யுணர்வு பெற்ற அந்த குணசீலர்கள் தலைநிமிர்ந்து பார்த்தபோது இதோ எஜமான் அவர்களை விட்டு விலகி நடந்துகொண்டிருந்தார். அதற்குள் அவர்கள் தங்கள் ஊருக்குள் வந்து விட்டதை அறிந்தார்கள். மாலை மயங்கி இருள் படர்ந்து விரைந்தது. அவர் அப்புறமாக விலகுவதை அறிந்த அன்பர்கள் அவரை பற்றிக் கொண்டு அய்யா எங்களுடன் தங்கியிரும் சாயங்காலமுமாயிற்று பொழுதும் போயிற்று என்றார்கள். அதற்கு அவர் அப்படியல்ல நான் என் வழியில் போகவேண்டும் என்றார். அதற்கு அவர்கள் அப்படியல்ல நீர் எங்களுடனேயே தங்க வேண்டும். என்று வருந்திக் கேட்டுக் கொண்டனர். அப்பொழுது அவர் அவர்களுடனே தங்கும் படி உள்ளே போனார். அங்கு எல்லோரும் அமர்ந்தார்கள். இதுவரை தங்களுக்கு வேதவாக்கியங்களை போதித்த அந்த நல்ல மனுஷனின் முகத்தை இந்த அன்பர்கள் இன்னும் உற்றுப் பார்க்கவில்லை போல் தெரிகிறது. மேலும் அவருடைய பேச்சுத் தொனியை புரிந்து கொண்டதாகவும் தெரியவில்லை. நமதாண்டவர் மகிமையடைந்திருந்ததால் சரீரத்திலும், முகத்திலும், தொனியிலும் ஏதாவது மாற்றம் உண்டாகியிருக்குமோ என்று தெரியவில்லை. மரியாளே என்றவுடன் மகதலேனா மரியாள் இவருடைய பேச்சுத் தொனியை உணர்ந்தது போல இந்த குணசீலர்கள் உணராததுக் குறித்து அவர் இயல்பான தொனியில் பேசவில்லையோ என்று தோன்றுகிறது.

தங்கள் வீட்டிற்கு வந்த அந்த புதிய விருந்தினருக்கு அப்பமும் பாத்திரமும் கொண்டுவந்து வைக்கப்பட்டது. எஜமான் அவைகளை கவனித்து இவைகளை கொண்டு அவர்களுக்கு தம்மை வெளிப்படுத்தும் சாதனமாக தெரிந்து கொண்டு அவர்களையும் அமரும்படி கட்டளையிட்டார். பின்னும் சம்பாசனை தொடர்ந்தது. உங்கள் ஆண்டவர் தாம்

காட்டிக் கொடுக்கப்பட்ட இரவிலே அப்பமும் பாத்திரமும் வைத்து புதிய உடன்படிக்கையை தம்முடைய சீஷர்களோடு செய்திருக்கிறாரே. அதை நாமும் ஏன் செய்யக்கூடாது என்று வினவியிருப்பார். அன்பர்களும் மகிழ்ச்சியாக தாங்களும் உடன்படுவதாக ஒப்புக் கொண்டனர். எஜமான் தனது மரணத்தின் மூலமாக உள்ள பாமன்னிப்பு, மீட்பு, மறுமை சுதந்தரம் இவைகளை சுருங்கச் சொல்லியிருப்பார். பின்பு எஜமானரும் அன்பர்களும் பந்தியிருந்தனர். ஆண்டவர் இராப்போஜன அப்பத்தை எடுத்து ஸ்தோத்திரம் செய்து அதை ஆசீர்வதித்து பிட்டு, அவர்களுக்கு கொடுத்தார். அவர்கள் தங்கள் இருகரங்களையும் நீட்டி பெற்றுக்கொள்ள எழுந்து திடுக்கிட்டனர். அப்பத்தை கொடுக்கும் கரங்களில் உள்ள காயங்களை கண்டு அவர்கள் அதிர்ச்சியுற்று வாங்கினர். எஜமான் உடனே அவர்கள் கண்களுக்கு மறைந்து போனார். அவர்கள் கண்கள் திறக்கப்பட்டு அவரை அறிந்தார்கள். ஐயோ! இதுவரை நம்மோடு இருந்தது கர்த்தரல்லவா என்று அங்கலாய்த்து விருந்தை முடித்து எழுந்தார்கள்.

"ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நனிய துடைத்து - 353

அவர்கள் ஐயத்திலிருந்து நீங்கி மெய்யுணர்வு பெற்றதால், தாங்கள் அடைந்த இவ்வுலகத்தை விட அடைய வேண்டிய மேலுலகம் மிக அருகாமையில் இருப்பதாக உணர்ந்தனர். (லூக் 24=28-31)

**18.7.சாட்சி:-** அந்நேரம் அவர்கள் எழுந்திருந்து எருசலேமிற்கு தைரியமாக புறப்பட்டு போய் வீட்டின் கதவை தட்டினார்கள். அங்குள்ள சீஷர்களுக்கும், ஸ்திரீகளுக்கும்,. தங்களோடு வழியில் ஆண்டவர் சேர்ந்து வந்து சம்பாசித்ததையும் தாங்கள் வீட்டிற்கு போய் பந்தியிருக்கும் போது அப்பத்தை பிட்கையில் தாங்கள் அவரை அறிந்து கொண்டதையும் விவரித்து சொன்னார்கள். (லூக் 24=32-35,)

"வேதம் நிறைவேற்றி - மெய்தோற்றி
மீட்டுக்கரையேற்றி - பொய்மாற்றி
பாவிகளைத் தேற்றி - கொண்டாற்றி
பத்ராசனத் தேற்றி வாழ்வித்தார்" - ஆமென்

## 4 மேலறை சீஷர்களும் ஸ்திரீகளும்(எருசலேம்)

19.1.சாட்சி:- வாரத்தின் முதல்நாள் பகல் முடிந்து அன்று இரவு எருசலேமின் மேல் வீட்டறையில் சில சீஷர்களும் ஸ்திரீகளும் தங்கியிருந்தனர். தன்னிலிருந்து புறப்படும் மெல்லிய இழைகளால் வலையைப் பின்னி, அதன் மத்தியில் இருந்து கொண்டு அதிலுண்டாகும் சிறுசிறு அசைவுகளையும் கவனித்து நொந்து பயந்திருக்கும் சிறுசிலந்திப் பூச்சியைப் போல அவர்கள் தங்கள் வீட்டுக்கதவை அடைத்துக்கொண்டு பயந்து ஒடுங்கியிருந்தனர். அப்போது இரண்டாம் சாமம் துவங்கி வெகுநேரமாகியிருந்தது. யாரோ கதவை தட்டும் சத்தம் கேட்டு திடுக்கிட்டனர். மிகுந்த தைரியத்தை வரவழைத்துகொண்டு வாசலருகே சென்று யார் என்றனர். அதற்கு நாங்கள்தான் என்ற சத்தம் கேட்டு ஆச்சரியத்தோடு கதவை திறந்தனர். எம்மாவு சீஷர்கள்தான் வந்திருந்தனர். காலையில் போய் அதற்குள் திரும்பிவிட்டீர்கள் என்று வினாவினர். அதற்கு அவர்கள் தாங்கள் போகையில் வழியில் நடந்தவைகளையும் தங்கள் வீட்டில் வந்து கர்த்தர் அப்பத்தைப் பிட்கும்போது அறிந்து கொண்டதையும் விவரித்து சொன்னார்கள். (லூக் 24=32-35,)

20.2.தரிசனம்:- இவைகளைக் குறித்து அவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் கர்த்தர் தாமே அவர்கள் நடுவே நின்று உங்களுக்கு சமாதானம் என்றார். எம்மாவு சீஷர்கள் இங்கு வரும்வரை காலதாமதம் செய்து அவர்கள் வந்து சாட்சி கூறவும் அவர்களுடைய சாட்சியை உறுதிப்படுத்தவும் அவர் தரிசனமானார். காலையில் அவர் மகதலேனா மரியாளுக்கும் பின்பு வழியில் வைத்து மற்ற ஸ்திரீகளுக்கும் பகலில் எம்மாவு சீஷர்களுக்கும், இப்போது இரவில் எல்லோருக்கும் தரிசனமானார். புருஷர்களும், ஸ்திரீகளும் மனக்கவலையினாலும் பயத்தினாலும், சிதறியிருந்த படியால் எஜமான் அவர்களை தேடிப்போய் அவர்கள் மனஇயல்புக்கு தகுந்த நிலைமையில் தம்மை வெளிப்படுத்துவது எஜமானனுக்கு ஏற்றதாக இருந்தது. இப்படி பல நிலமைகளில் தம்மை வெளிப்படுத்தும் போது நாளின் நேரமும் வேகமாக கடந்து கொண்டிருந்தது. (லூக் 24=36)

21.3.சந்தோஷம்:- இவ்விதமாக பூட்டியிருந்த வீட்டிற்குள்ளே அதுவும் அவர்கள் நடுவே வந்து தீடீர் என்று நின்று உங்களுக்கு சமாதானம் என்று ஆண்டவர் சொன்னவுடனே அவர்களெல்லாம் அதிகமாக கலங்கிப் பயந்திருந்தனர். ஒரு ஆவியை காண்கிறதாக நினைத்தார்கள். அதற்கு காரணம் உண்டு. அப்போஸ்தலர்கள் காலையில் கல்லறைக்குள் சென்று பார்க்கும்போது அவரை சுற்றியிருந்த சீலைகள் கிடக்கிறதையும் அவருடைய தலையில் சுற்றியிருந்த சீலை மற்ற சீலைகளுடன் வைத்திராமல் தனியே ஒரு இடத்தில் சுருட்டி வைத்திருக்கிறதையும் கண்டார்கள். அப்படி இருக்கும்போது அவர் உயிர்த்தெழுந்து சரீரத்தில் இருந்தால் எந்த வஸ்திரத்தில் இருக்கவேண்டும் என்ற சிந்தனை அவர்களுக்கு ஒருவேளை உண்டாகியிருக்க வேண்டும். இரண்டாவது வீடு பூட்டியிருக்கையில் வீட்டின் வாசற்கதவு திறக்கப்படாமல் சரீரத்தோடு வருவது முடிகிற காரியமா? என்று அஞ்சினார்கள். இதனால் இவர்களுடைய சந்தேகங்கள் வலுத்தது. ஒருவேளை ஆவியாக இருக்குமோ? என்று நினைத்தார்கள். சற்று நேரம் அமைதி நிலவியது. அவர்களுடைய கலக்கமும் நீடித்தது. எஜமான் உயிர்த்தெழுந்த பின்பு அவருடைய சரீரத்தில் முகத்தோற்றத்தில், அவர் தொனியில், எல்லாம் மாற்றம் ஏற்பட்டது என்றே நாம் நினைக்க வேண்டியது இருக்கிறது. மேலும் அந்த சரீரம் மகிமைக்குரிய சரீரமாக மாற்றப்பட்டிருக்க வேண்டும். அப்படியானால் தேவதூதர்கள் அணிந்திருக்கும் வஸ்திரத்தை போல மகிமைக்குரிய வஸ்திரமாகவும் இருந்திருக்க வேண்டும். இதன் காரணமாகத்தான் அவர் அவசியமானால், தான் சரீரத்தை தரித்துக் கொள்ளவும் அவசியமில்லாவிட்டால் மறைத்துக் கொள்ளவும் கூடியதாக இருந்தது. மேலும் எலியாதீர்க்கதரிசி மறு ரூபமாக்கப்பட்டு பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகிற சமயத்தில் அவன் அணிந்திருந்த வஸ்திரங்களெல்லாம் கீழே விழுந்ததாக வாசிக்கின்றோம். அப்படியானால் எலியா மகிமைக்குரிய சரீரத்திற்கு மாற்றப்படும் பொழுது மகிமைக்குரிய வஸ்திரம் உடுத்தியவராக இருந்திருக்க வேண்டும். நாம் இப்படி நினைப்பதற்கு காரணம் இருக்கிறது. நமதாண்டவரும் ஒரு மலையின் மீது ஜெபம் பண்ணும் போது மறுரூபமாக்கப்பட்டார். அவருடைய சரீரத்தோடு சேர்ந்து வஸ்திரங்களும்

மறுரூபமாக்கப்பட்டு பிரகாசித்ததை சீஷர்கள் கண்டார்கள். இக்காரியங்களை வைத்து நாம் கவனிக்கும்போது கர்த்தர் மறுரூபசரீரத்தில் இருந்தார் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால் மகிமையடைந்த சரீரமானால் அந்த சரீரத்திலும் வஸ்திரத்திலும் ஒரு தேவதூதன் தரிசனமாகும் போது உள்ள பிரகாசம் இருக்கவேண்டும். அப்படியும் தோன்றவில்லை. அவருடைய சரீரம் சாதாரணமான நிலையில்தான் இருந்ததாக அறிய முடிகிறது. இது நமது அறிவுக்கெட்டாத காரியம். எனவே சீஷர்களுக்கும் சந்தேகம் வலுத்தது. எனவே அன்று அவரைக்கண்டு கலங்கி பயமடைந்தார்கள். மேலும் அவர் மிகுந்த பிரகாசத்துடன் மலையில் மறுரூபமானதுபோல் தரிசனமாகியிருந்ததால் எல்லோரும் ஒரு தேவதூதனை தரிசித்ததாகத் தான் எண்ண வேண்டியதாயிருக்கும். ஆகவே அவருடைய தெய்வீகமும் மனுஷீகமும் நஷ்டமடையாதபடி எளிமையான நிலையில் அவர்களுக்கு தம்மை வெளிப்படுத்தினார் என்றுநாம் நிதானிக்கிறோம்.

அவர்களுடைய கலக்கத்தை அறிந்த நல்ல ஆண்டவர் நீங்கள் ஏன் கலங்குகிறீர்கள் உங்கள் இருதயங்களில் சந்தேகங்கள் எழும்புகிறதென்ன? நான்தான் என்று அறியும்படி என் கைகளையும் கால்களையும் தொட்டுப்பாருங்கள். நீங்கள் காண்கிறபடி எனக்கு மாம்சமும் எலும்புகளும் உண்டாயிருக்கிறது போல ஒரு ஆவிக்கு இராதே என்று சொல்லி தம்முடைய கைகளையும் கால்களையும் அவர்களுக்கு காண்பித்தார். ஆண்டவர் இவ்வளவு தூரம் தெளிவாக பேசியபின்பு சீஷர்களுக்கு நம்பிக்கையின் ஒளி தோன்றி மனதிலே சிறிதளவு மகிழ்ச்சி யுண்டாயிற்று. ஆனாலும் அவர் கிட்டே சென்று அவருடைய கைகளையும் பாதங்களையும் பார்க்கக்கூடிய அளவுக்கு யாருக்கும் துணிவு வரவில்லை. அது ஒரு ஆவியாக இருந்து தன்னைப் பிடித்துக் கொண்டால் என்ன செய்வது என்று பயந்தார்கள் போலும்!

இந்நிலையில் அவர்களுக்கு தாம் உயிர்த்தெழுந்ததை சரியாக தெளிவுபடுத்தாமல் போவது அவ்வளவு நல்லதல்ல என்று அறிந்தார். அவர் அவர்களிடம் கிட்ட நெருங்கி தம்முடைய காயங்களை காண்பிக்க முயற்சிப்பாரே யானால் அவர்கள் பயந்து அலறிஓடி தங்களுடைய ஜீவனுக்கு

ஏதாகிலும் மோசம் செய்து கொள்ளக்கூடும். ஆகவே அவர்களே அருகில் வந்து அவரை அறிந்து கொள்ள வேண்டும். என்ன செய்வது? (லூக் 24=37-40)

22.4.வெளிப்படுத்துதல்:- பிள்ளைகளே புசிக்கிறதற்கு ஏதாவது உண்டா? என்று அவர்களிடத்தில் கேட்டார். ஆண்டவருக்கு நடுஇரவில் பசி வந்துவிட்டதோ? அவருடைய மகிமையின் சரீரத்திற்கு பசி என்ற பேச்சுக்கே இடமில்லையே? பின்னே ஆண்டவர் புசிக்கக் கேட்டது என்ன? எப்படியும் புசிக்கிறதிற்கு வேண்டிய ஆகாரத்தை அவர்கள் கொண்டு வந்து அவரிடமாக நெருங்கி அவரிடம் கொடுத்துத்தான் ஆகவேண்டும். அவர்கள் தம்மை நெருங்கிவரும் சூழ்நிலையை அவர் உருவாக்கினார். மனம் கனிந்த அவர்கள் உள்ளே ஓடி பொரித்த மீன் கண்டங்களையும் தேன் கூட்டுத்துணிக்கைகளையும் கொண்டுவந்து அவருக்கு கொடுத்தார்கள். ஆண்டவர் அவைகளை வாங்கும்படி தமது இருகரங்களையும் நீட்டினார். அன்பர்கள் அதிர்ந்து அவர் கரங்களில் காயங்களைக் கண்டு மனம் உருகிப் போனார்கள். ஆண்டவர் அவைகளை வாங்கி அவர்களுக்கு முன்பாக புசித்தார். தங்கள் ஆண்டவரை அறிந்த அன்பர்கள் ஆனந்தக் கண்ணீரை சொரிந்தனர். (லூக் 24=41-43)

23.5.கட்டளை:- ஆண்டவர் அவர்களை நோக்கி மோசேயின் நியாயப்பிரமானங்களிலும் தீர்க்க தரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும் என்னைக் குறித்து எழுதியிருக்கிறவைகள் எல்லாம் நிறைவேற வேண்டியது என்று, நான் உங்களோடு இருந்தபோது உங்களுக்கு சொல்லிக்கொண்டு வந்த விசேஷங்கள் இவைகள் என்று வேதவாக்கியங்களை அறிந்து கொள்ளும்படி அவர்களுடைய மனதைத் திறந்து அவர்களை பிரகாசிக்கச் செய்து எழுதியிருக்கிறபடி கிறிஸ்து பாடுபடவும் மூன்றாம் நாளில் மரித்தோரில் இருந்து எழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது என்று கூறி ஆண்டவர் அவர்களிடம் சம்பாசித்தார். மெய்ஞானத்தை கண்ட அன்பர்கள் தேவனுடைய அற்புத கிரியையை கேட்டு அதிசயித்து களிகூர்ந்தனர். (லூக் 24=44-46)

ஆண்டவர் பின்னும் அவர்களை நோக்கி இவைகளெல்லாம் அறிந்திருக்கிறபடியால் உங்களை சாட்சியாக ஏற்படுத்துகிறேன். நீங்கள் மனத்திரும்புதலை

குறித்தும் பாவமன்னிப்பை குறித்தும் எருசலேம் தொடங்கி சகல தேசத்தார்க்கும் பிரசங்கிக்க வேண்டும் என்று கட்டளையிட்டர். அந்த ஏழை அன்பர்கள் தங்கள் ஆண்டவரின் கட்டளையை சிரமேற்று ஊழியம் செய்தனர். அதன் பலனாக உலகத்தின் கடைசி பாகத்தில் கடைசி காலத்தில் இருக்கக் கூடிய நாம் அதன் பலன்களை அனுபவிக்கின்றோம்.

மேலும் அப்பொழுது தங்கள் ஆண்டவரை வெளியரங்கமாக அறிவிக்கக் கூடிய தைரியம் இல்லை. ஆகவே இவைகளை அறிந்த ஆண்டவர் அவர்களை நோக்கி என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை இதோ நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்கள் உன்னதத்தின் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேமில் தங்கியிருங்கள் என்று கட்டளையிட்டார். பின்பு அவர்களை பெத்தானியாவிற்கு அழைத்துக் கொண்டுபோய் அவர்களை ஆசீர்வதித்த பின்பு பரலோகத்திற்கு எழுந்தருளிப் போனார். (லூக் 24=47-51)



# 5 பதினொரு அப்போஸ்தலர்கள்

24.1.சந்தேகம்:- பதினோரு அப்போஸ்தலர்களும் தங்கள் ஆண்டவரோடு இருந்த கலிலேயாவில் உள்ள குறிக்கப்பட்ட மலைக்குப்போய் சேர்ந்தார்கள். ஆண்டவருக்கு இங்கு அடிக்கடி ஜெபிப்பதற்கு ஏற்ற இடமாக தெரிந்து கொண்டார். ஒரு சமயம் ஐயாயிரம் பேருக்கு அப்பங்கள் போசிக்க கொடுத்ததும் இந்த மலையாக இருக்கலாம். அப்போஸ்தலர்கள் எருசலேமிலிருந்து புறப்பட்டு மறுதினம்தான் போய்சேர்ந்திருக்க வேண்டும் போல் தோன்றுகிறது. அவர்கள் தங்களுக்கு குறிக்கப்பட்ட மலையின்மேல் ஏறியவுடனே ஆண்டவர் அவர்கள் வருகையை எதிர்பார்த்து காத்திருந்தது போல் தெரிகிறது. ஆண்டவரோ அவர்களிடம் ஒன்றும் பேசினதாக தெரியவில்லை.

பதினொருவரும் இயேசுவானவர் உயிர்த்தெழுந்தார் என்ற செய்தியை ஸ்திரீகள் மூலமாக சொல்லப்பட்டு கேள்விப்பட்டார்களே யல்லாமல் தங்கள் ஆண்டவரைப் பார்க்கவில்லை. யோவானும் பேதுருவும் கல்லறைக்கு ஓடி அவர் வஸ்திரங்கள் சுருட்டி வைக்கப்பட்டிருந்ததைதான் பார்த்து வந்தார்கள். அதனால் ஸ்திரீகள் சொன்னதில் ஓரளவு நம்பிக்கை அவர்களுக்கு ஏற்பட்டிருந்தது. ஆனால் மூன்றாம் நாளில் நான் உயிர்த்தெழுந்திருப்பேன் என்று தங்கள் ஆண்டவர் திரும்பத் திரும்ப சொல்லியிருந்ததை அடியோடு அவர்கள் மறந்து விட்டார்கள்.

பேதுருவும் யோவானும் யாக்கோபும் மட்டுமே ஆண்டவரிடத்தில் நெருங்கிப் பழகினவர்கள். இந்த மூன்றுபேரையல்லாது மற்றவர்களை ஆண்டவர் அடிக்கடி தன்காரியங்களை கவனிக்க அழைத்ததில்லை. இந்த மூவருக்குமே ஆண்டவர் உயிர்த்தெழுந்திருப்பார் என்ற நம்பிக்கை இல்லாதிருக்கும் போது மற்றவர்களுடைய நிலைமையை பற்றி நாம் என்ன சொல்வது. ஆனாலும் கர்த்தரை நேசித்தார்கள் என்பதில் நமக்குச் சந்தேகமில்லை. ஆனால் குறிக்கப்பட்ட மலையில் அவர்கள் வந்து சேர்ந்தவுடன் அவர்களுக்கு முன்னே போய் அமர்ந்திருப்பவர் அவர்தானா என்று சிலருக்குச் சந்தேகம் ஏற்பட்டது. நீர்தான் எங்கள் ஆண்டவரா? என்று யார் துணிந்து போய் அவரிடம் கேள்வி கேட்கமுடியும். மழை பெய்யாதபடி மேகங்களை தடுத்து

நிறுத்தும் மலைகளை போல அவர்கள் ஆண்டவரிடம் நெருங்கக்கூடாதபடி அவர்களை அவர்களுடையசந்தேகங்கள் தடைசெய்தது. ஆண்டவரும் அவர்கள் என்ன செய்வார்களோ என்று அறியும்படிஅமைதியாக இருந்தார். இனம் இனத்தை அறியும் என்பது போல சிலர் ஆண்டவரின் தோற்றத்தைக்கண்டு அவரை நெருங்கி தைரியமாக அவர் பாதங்களில் விழுந்து பணிந்து கொண்டனர். சிலரோ சந்தேகத்துடன் தூரமாக நின்று கொண்டனர். ஆண்டவர் எழுந்து அவர்களுக்கு சமீபமாக வந்தார். (மத்தே 28=16,17)

25.2.அதிகாரம்:- பதினொரு அப்போஸ்தலர்களும் தங்கள் ஆண்டவரிடத்தில் என்ன பேசுவது என்று தெரியாமல் விழித்துக் கொண்டிருந்தனர். காரணம் அவரை கெத்சமனேயில் சேவகர்கள் பிடித்த போது எல்லோரும் அவரை விட்டு ஓடிப்போனார்கள். பேதுருவோ ஒரு வேலைக்காரிக்குப் பயந்து தன் ஆண்டவரை மறுதலித்தான். இது கர்த்தருக்கு மட்டுமே தெரியும். மற்ற சீஷர்களுக்கு தெரியாது. ஆகவே மற்ற பத்துப்பேரையும் வைத்துக் கொண்டு ஆண்டவரே நான் தெரியாமல் உம்மை மறுதலித்துவிட்டேன் என்று சொல்வதற்கு போதிய துணிவில்லை. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும் என்பது போல பேதுரு அமைதியாக குனிந்து கொண்டான். மற்றவர்கள் அவனுக்கு பின்னாக நிற்க அன்பான சீஷன் மட்டும் ஆண்டவர் என்ன சொல்வாரோ என்று வழக்கமான அமைதியுடன் அவரை நோக்கி பார்த்துக் கொண்டிருந்தான்.

குற்றவாளிகளான கைதிகளைப் போல் தமக்கு முன்பாக கூனிக்குறுகி நிற்கும் தமதன்பர்களிடம் நமதாண்டவர் நீதியின் விசாரணை செய்திருப்பாரேயானால் அங்கேயே அவர்களுடைய ஜீவனுக்கு ஏதாவது மோசமாயிருக்கும். அன்புள்ள ஆண்டவர் கருணைகூர்ந்து அவர்களை நோக்கி எதிர்காலத்தில் செய்யவேண்டிய ஊழியம் இன்னதென்று அவர்களுக்கு உணர்த்தி அவர்களை ஸ்திரப்படுத்தும்படி வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்றார்.

இவ்வார்த்தைகளை கேட்ட அப்போஸ்தலர்கள் தங்களை சற்று திடப்படுத்திக் கொண்டனர். ஏனெனில் தங்களது ஆண்டவரின் அதிகாரத்தை ஏற்கனவே அறிந்திருந்தார்கள். அவர் அதிகாரமுள்ளவராக போதித்தார்.

அதைக் குறித்து அவர்கள் ஆச்சரியம் அடைந்தார்கள். அவருக்கு மாம்சமான யாவர்மேலும் அதிகாரம் உண்டு என்பதை வெளிப்படுத்த அநேகரை அவர் குணமாக்கினர். பிசாசின் ஆவிகள் மேல் உள்ள அதிகாரத்தை அவர் உபயோகப்படுத்தி அநேகரை பிசாசுகளிடமிருந்து விடுதலை ஆக்கினார். பாவங்களை மன்னிக்க தனக்கு அதிகாரம் உண்டு என்பதை வெளிப்படுத்த அநேகருடைய பாவங்களை மன்னித்து அவர்களை குணமாக்கி அவர்களுக்கு சமாதானம் கூறினார். ஜீவனைக் கொடுக்கவும் அதனை திருப்பி எடுத்து கொள்ளவும் தனக்கு அதிகாரம் உண்டு என்றவர் அதன்படி மரணமடைந்து இதோ உயிருடன் நிற்கிறார். தனக்கு நியாயத் தீர்ப்பு செய்யும் அதிகாரம் உண்டு என்றவர் இப்பொழுது வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரம் தனக்கு உண்டு என்றார். ஆண்டவர் அவர்களை அப்போஸ்தலர்களாக ஏற்படுத்தும் போது தமது அதிகாரத்தை ஓரளவு அவர்களுக்கு பகிர்ந்து கொடுத்தார். இப்பொழுது முழு அதிகாரத்தையும் ஆண்டவர் தருவார் என்ற நம்பிக்கை அப்போஸ்தலர்களுக்கு விடிவெள்ளி நட்சத்திரத்தைப் போல உதித்தது. (மத் 28=18)

26.3.புறஜாதிகளின் இரட்சிப்பு:- நாம் கவனித்துக் கொண்டிருக்கும் இந்த மத்தேயு சுவிசேஷமும் இயேசுவானவரின் உயிர்த்தெழுதலை அறிவிக்கும் மாற்கு சுவிசேஷத்தின் கடைசி அதிகாரத்தின் கடைசிப்பகுதியும் அந்த கலிலேயா மலையின் மீது நடந்த நிகழ்ச்சி என்று அறிந்து கொள்ளலாம். ஆண்டவர் கூறும்போது நீங்கள் புறப்பட்டுபோய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள் என்றார்.தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேல் தன்னை புறக்கணித்த படியால் ஆண்டவர் தனது மீட்பை புறஜாதிகளுக்கு அனுப்ப சித்தங் கொண்டார். புறஜாதிகளை இரட்சிக்கிற வேலையோ அவ்வளவு எளிதான காரியமல்ல. சீஷர்கள் உலகம் முழுவதும் செல்லவேண்டியதாக இருந்தது. ஆண்டவர் தமது ஏழை அன்பர்களிடத்தில் நம்பிக்கை வைத்து இந்த மகாபெரிய வேலையை அவர்கள் உண்மையாகச் செய்வார்கள் என்று நம்பி அவர்களிடத்தில் ஒப்புவித்தார். கலிலேயா கடலைத் தாண்டி அப்புறம் போகாத தம்முடைய பாமரதாசர்களை கண்டங்களுடைய கடல்களைத் தாண்டி உலகத்தின் கடைசிவரை செல்லவேண்டும் என்றார். உள்ளூர் பாஷைகளை சரியாகப் பேசத்தெரியாத பேதைகளான அன்பர்களை உலகத்து சகல பாஷைகளில் பேசி சகல

ஞானத்தையும் தனக்கு கீழ்ப்படுத்தவேண்டும் என்று கட்டளையிட்டார். அந்த ஏழை மீன்பிடி செம்படவர்களும் ஆயக்காரர்களும் தங்கள் ஆண்டவருடைய கட்டளையை சிரமேற் றுப் பணிந்தனர்.
(மத் 28=29, மாற் 16=16)

**27.4.ஊழியம்:-** நமதாண்டவர் தமக்காக செய்யும் ஊழியம் ஒழுங்கற்றதாக இருக்கக் கூடாது என்று வகைப்படுத்தி அப்போஸ்தலர்களுக்கு அறிவித்தார். முதலாவது: அவர்கள் தங்கள் ஆண்டவரை சுவிசேஷமாக பிரசங்கிக்க வேண்டும். அவைகளை விசுவாசித்து இரட்சிக்கப் படுகிறவர்களை சீஷர்களாக ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கவேண்டும். பிறகு அவர்களை சபையாக கூட்டி ஆண்டவர் கட்டளையிட்ட யாவையும் அவர்களுக்கு உபதேசிக்க வேண்டும். இந்த ஒழுங்குகள் மாறிப்போகாதபடி நாமும் கவனித்துக் கொள்ள வேண்டும். இக்காலத்தில் ஞானஸ்நானத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இரட்சிக்கப்படாத ஒருவருக்கு ஞானஸ்நானம் கொடுப்பதில் வரும் தவறுகளும் அதனால் சபைக்கு வரும் கேடுகளும் மிகவும் அதிகமாக இருக்கும். ஞானஸ்நானம் முக்கியத்துவம் வாய்ந்ததல்ல. இரட்சிப்பே பிரதானம். இரட்சிக்கப்பட்டவர்களுக்கே ஞானஸ்நானம் கர்த்தரால் நியமிக்கப் பட்டிருக்கிறது. இவ்வித விசுவாசத்திற்குள்ளாக வராதவர்கள் ஆக்கினைகளுக்கு உட்பட்டார்கள் என்று ஆண்டவர் சொன்னது நமக்கு நல்ல எச்சரிப்பாக இருக்கிறது. (மத் 28=19,20, மாற் 16=16)

**28.5.பரமேறுதல்:-** இவ்விதமாய் கர்த்தர் அவர்களோடு பேசிமுடித்த பின்பு இதோ உலகத்தின் முடிவு பரியந்தமும் சகல நாட்களிலும் நான் உங்களோடு கூட இருக்கிறேன் என்றார். பின்பு அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கையில் வானம் திறக்கப்பட்டது. கர்த்தர் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு தேவனுடைய வலது பாரிசமாகிய சிங்காசனத்தில் உட்கார்ந்தார். ஆயிரமாயிரம் வான கோலங்களைத் தாண்டி நிகழ்ந்த அற்புதமான காரியத்தை அன்பர்கள் அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கும் போது திறந்த வானம் மீண்டும் மூடிக் கொண்டது. அவர்கள் மலையிலிருந்து கீழே இறங்கினார்கள். (மத் 20=20, மாற் 16=19,20, எபி 12=2)

## 6 அப்போஸ்தலர்கள்(திபேரியா)

29.1.திபேரியா:- கலிலேயா நமதாண்டவர் காலத்தில் சமாரியாவுக்கு வடக்கே மத்தியதரை கடலோரத்திலுள்ள பெனிக்கியா நாடு துவங்கி கிழக்கில் கலிலேயாக் கடல் மட்டும் இருந்தது. இதன் நீளம் ஏறக்குறைய அறுபது மைல்களும் அகலம் இருபத்தைந்து மைல்களும் இருந்தன. லீபனோன் மலையிலிருந்து இந்த நாட்டிற்கு அநேக ஆறுகள் பாய்கின்றதினால் இது அதிக செழிப்பாக இருந்தது. கலிலேயாக் கடல் என்பது பெலிஸ்தியர் தேசத்திற்கு வடக்கே இருக்கிறது. இதன் நீளம் ஏறக்குறைய பதின்மூன்று மைல்களும் அகலம் எட்டு மைல்களும் இருந்தன. யோர்தான் நதி இதற்கு இடையே கூடி தெற்கே பாய்கிறது. இக்கடலின் ஓரத்திலே கப்பர்நகூம், கெனசரேத், பெத்சாயிதா, திபேரியா ஆகிய ஊர்கள் இருந்தன. நாசேரேத்தும் கானாவும் கலிலேயாவில் இருந்தன. நமதாண்டவர் சீஷர்களுக்கு தரிசனமான மலை திபேரியா கடற்கரை அருகிலே உள்ளது என நிதானிக்கலாம். நமதாண்டவர் வளர்ந்த ஊர் நாசரேத்து அதற்கு அருகிலுள்ளது கானா; இங்கேயிருந்தது தான் நாத்தான்வேல் சீஷனானான். பெத்சாயிதா ஊரிலிருந்து பிலிப்பு சீஷனானான், கப்பர் நகூம், கெனசரேத் ஆகிய இடங்களிலிருந்து பேதுரு, அந்திரேயா, யோவான், யாக்கோபு ஆகியோர் ஊழியத்திற்கு அழைக்கப்பட்டார்கள். திபேரியாவோ இந்த கலிலேயா நாட்டின் தலைநகரமாக இருந்தது. இங்கே ஏரோது வாசம் பண்ணினான். ஏரோது இப்பட்டணத்தைக் கட்டும்போழுது திபேரியு இராயனைப் பிரியப்படுத்தும்படி இதற்கு திபேரியா என்று பெயரிட்டான்.

நமதாண்டவர் கலிலேயா மலையிலிருந்து பரலோகத்திற்கு எழுந்தருளிப் போனபின்பு அப்போஸ்தலர்கள் மலையைவிட்டு இறங்கினார்கள். தங்கள் ஆண்டவர் அவர்களுக்கு வகுத்துக் கொடுத்த சுவிசேஷ ஊழியமும் திருச்சபை ஊழியமும் இன்னதென்று அவர்களுக்கு விளங்கவில்லை. ஏனெனில் இன்னும் பரிசுத்த ஆவியானவர் வரவில்லை. மேலும் தங்கள் ஆண்டவர் தங்கள் ஒவ்வொருவரிடமும் விசேஷித்த நிலையில் சம்பாஷிக்கவில்லை.இது அன்பர்களுக்கு பெரிய மனக்குறைவாக இருந்தது. தங்கள் குற்றங்களை தங்கள்

எஜமான் மன்னித்திருந்தால் தங்களிடம் தனியாக பட்சமாக பேசியிருப்பார் என்று நம்பினார்கள். இதனால் அவர்களுடைய மனது மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது.

இவர்களிலே பேதுரு மிகவும் சோர்வுற்றிருந்தான். தன் நேசஆண்டவர் அவனிடம் பாராமுகமாக நடந்து கொண்டது. அவனுக்கு முன்னிலும் அதிக சோதனையாக இருந்தது. தங்கள் எஜமான் மிகவும் ஞானமுள்ளவர் என்றும் எல்லாவற்றையும் நன்றாக செய்கிறவர் என்றும் தங்களிடமும் அவர் பட்சமாக நடந்துகொண்டதையும் அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. எல்லாருடைய மனதும் அதிக துக்கத்தில் ஆழ்ந்திருந்தது. தங்கள் ஆண்டவர் சகல நாட்களிலும் தங்களோடு கூட இருந்து தமது மகிமையுள்ள ராஜ்யத்தில் ஆளுகை செய்வார். அப்பொழுது அவரோடு கூட தாங்களும் ஆளுகைசெய்வோம் என்ற அவர்களுடைய கற்பனை தகர்ந்து தூள்தூளானது. தங்கள் எஜமான் தங்களை கைவிட்டுவிட்டு பரலோகம் போனது அவர்களுக்கு மிகவும் பெரிய ஏமாற்றத்தை கொடுத்தது. உலகமே அவர்களை கைவிட்டது போல் தோற்றமளித்து அவர்கள் அமைதியாக நடந்து, திபேரியா கடற்கரைக்கு வந்து சேர்ந்தனர். சில அப்போஸ்தலர்கள் தங்கள் வீடுகளுக்கு சென்றுவிட்டனர் போலும்! ஏழுபேர் மாத்திரமே மீதியாக இருந்தனர். அமைதியாக கடற்கரையில் அமர்ந்து ஒருவரையொருவர் நோக்கினர். இனி என்ன செய்வது? ஆண்டவரே! ஜீவனுள்ள வசனங்கள் உம்மிடம் உண்டே இனி யாரிடம் போவோம் என்று நம்பிவந்தோம். அவரும் கைவிட்டு போய்விட்டரே இனி எங்கே போவது? மீண்டும் ஒருவரையொருவர் நோக்கினர். பிரதான அப்போஸ்தலனே இனி வழிஉண்டாக்கி தரவேண்டும். அவனோ மிகவும் இடிந்து போயிருந்தான். தன் ஆண்டவரை அறியேன் என்றதால் அவரும் தன்னை அறியாதது போல் பாராமுகமாய் போய்விட்டார். அவர் ஒன்றும் பேசவில்லை. அய்யோ நானாவது அவரிடம் பேசியிருக்கலாம்! நான் அவரை அறியேன் என்று சொல்லிவிட்டு எப்படி அவரிடம் பேசுவது? குழம்பித் தவித்துக்கொண்டிருந்த பிரதான அப்போஸ்தலனை இனி என்ன செய்யலாம் என்று எல்லோரும் அவனை உற்று நோக்கினர். (யோவா 21=1,2)

30.2.பின்வாங்குதல்:- உயரத்தில் பறந்த பருந்து ஒன்று தன்நிலை தவறி ஒருநாள் தாழப் பறந்தபோது அது

வேடனுடைய அம்புக்கு இலக்காகி அடிபட்டு விழுந்தது போல, பிரதான அப்போஸ்தலன் திபேரியா கடற்கரையில் வைத்து விழுந்து, மற்ற அப்போஸ்தலர்களை நோக்கி நான் மீன்பிடிக்க போகிறேன் என்றான். இது அவனுடைய இரண்டாவது விழுதலாகும். மீன்களைப் பிடித்தது போதும், இனி உன்னை மனிதர்களை பிடிக்கிறவர்களாக மாற்றுவேன் என்று ஆண்டவர் சொன்னதை மறந்துவிட்டு தன்னுடைய பழைய வலையையும் நிலையற்ற தன்மையையும் இணைத்துக் கொண்டு படகு ஏறிப் புறப்பட்டான். மற்ற அப்போஸ்தலர்களும் அவனுக்குப் பின்னால் சென்றனர். (யோவா 21=2,3)

**31.3.வெறுமை:-** அன்று இரா முழுவதும் அன்பர்கள் கடலில் பிரயாசப்பட்டனர். ஒரு மீன் கூட பிடிக்கமுடியவில்லை. அவர்கள் மனச் சோர்வுடன் சரீரச் சோர்வும் சேர்ந்து கொண்டது. பசியும் தாகமும் நிறைந்தவர்களாய் அதிகாலையில் கரையை நோக்கி விரைந்தனர். அவர்களுடைய இக்கட்டான நிலைமையை அறிந்த ஆண்டவர் அவர்களுக்கு முன்பாக கரையில் வந்து நின்றார். அன்பர்கள் கரையை நெருங்கிய போது பிள்ளைகளே புசிக்கிறதிற்கு ஏதாகிலும் உண்டோ? என்றார். அவர்கள் அவரை யாரோ அந்நியர் என்று எண்ணிக்கொண்டு ஒன்றுமில்லை என்றனர். (யோவா 21=4,5)

**32.4.பழைய நிலைமை:-** அப்பொழுது அவர் நீங்கள் வலதுபுறமாக வலையைப் போடுங்கள் அப்பொழுது உங்களுக்கு அகப்படும் என்றார். அப்படியே அவர்கள் வலையைப் போட்டனர். என்ன அதிசயம்! திரளான மீன்கள் அகப்பட்டதினால் அவர்கள் இழுக்கமாட்டாதிருந்தார்கள். ஆதலால் அன்பான சீஷன் தங்கள் ஆண்டவர் தங்களை முதல் முதல் அழைக்கும்போது பேதுருவுக்கு நேரிட்டதை மறக்கவில்லை. ஆகவே கரையில் நின்றவரை கவனித்துப் பார்த்து பேதுருவை நோக்கி அவர் கர்த்தர் என்றான். பேதுருவுக்கு ஏற்பட்ட அதிர்ச்சிக்கு அளவில்லை. உடனே அவன் வஸ்திரத்தை கட்டிக்கொண்டு கடலில் குதித்தான்.

**33.5.வெளிப்படுத்துதல்:-** அப்போஸ்தலர்கள் கரையேறினர். அவர்களின் நிலைமையை அறிந்த அருமை ஆண்டவர் அவர்களுக்கு கரி நெருப்பிட்டு மீன் பொரித்து அப்பம் சுட்டு ஆயத்தமாக வைத்திருந்தார். இந்த கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும் என்று சத்துரு கூறியபோது மறுத்த ஆண்டவர் இப்போழுது அவசரத் தேவையைக்கண்டு

ஆயத்தமாக்கி இருந்தார். கரிநெருப்பு புகைந்து கொண்டிருந்தது. அதை கண்டு அப்போஸ்தலர்கள் சூழ வந்தனர். கரிநெருப்பை கண்டவுடன் பேதுருவுக்கு மின்சாரம் பாய்ச்சினாற் போல் அதிர்ச்சி ஏற்பட்டது. கடந்த வாரத்தில் பிரதான ஆசாரியரின் மாளிகையில் கரிநெருப்புக்கு முன்பாக உட்கார்ந்தது அவனுக்கு மின்னலிட்டது. அவன் தன் குற்றத்தை தன் ஆண்டவனிடத்தில் அறிக்கை செய்யும்வரை அவன் கண்ட நிகழ்ச்சிகள் எல்லாம் அவனை வாதித்தது. அவன் கண்களில் நீர்திவலைகள் நீந்தி வெளியேறி சிதறின. உலகத்தின் கரி நெருப்பு அவனை தன் ஆண்டவரை விட்டு தூரமாக விலக்கியது. இங்கே ஆண்டவர் வைத்திருந்த கரி நெருப்பு அன்பின் ஜூவாலையாக அவனைப் பற்றிப் பிடித்தது.

அவர்கள் தன்னிடமாக நெருங்கி வந்து தன்னை அறியவேண்டும் என்று ஆண்டவர் விரும்பினார். ஆகவே நீங்கள் பிடித்த சிலமீன்களை கொண்டுவாருங்கள் என்றார். எப்படியும் அவர்கள் மீன்களைக் கொண்டுவந்து தம்முடைய கரங்களில் கொடுக்கும்போது தம்மை அறிந்து கொள்வார்கள் என்று நினைத்தார். பேதுரு இந்த சமயத்தை பயன்படுத்தி நழுவி மீன்கள் உள்ள வலையை இழுக்கும் வேலையில் ஈடுபட்டான். அவன் மீன்களை கொண்டுவருவான் என்று மற்றவர்களும் நழுவிக் கொண்டனர். நேரம் கடந்துகொண்டிருந்தது. யாரும் தம்மிடம் நெருங்கவில்லை என்று அறிந்த எஜமான் இப்பொழுது தாமே அவர்களிடம் நெருங்கப் பிரியம் கொண்டார். அவர் தம் அன்பர்களை நோக்கி: வாருங்கள் என்று அழைத்து, போஜனம் பண்ணுங்கள் என்றார். அரைகுறைச் சாயலில் தங்கள் ஆண்டவரை கண்ட அவர்கள் நீர்தான் எங்கள் ஆண்டவரா என்று கேட்கத் துணிவில்லை. ஆண்டவர் அப்பத்தையும் மீனையும் எடுத்து அவர்களுக்கு கொடுத்தார். அவர்கள் வாங்கும்படி தங்கள் கரத்தை நீட்டும்போது காயப்பட்ட தங்கள் ஆண்டவரின் கரங்களைக் கண்டு அதிர்ந்து உருகிப் போனார்கள். பாறையான பேதுருவும் மணலாக நொறுங்கி கண்ணீராகிய அப்பத்தையும் சேர்த்து உண்டான். தன் அன்புள்ள ஆண்டவரிடத்தில் பேசுவதற்கு இன்னும் அவனுக்கு துணிவு வரவில்லை. (யோவா 21=6-14)

**34.6.நினைவுகூர்தல்:-** ஆண்டவர் நடுவில் அமர்ந்திருக்க அன்பர்கள் அவருக்கு முன்பாக அப்பம் புசித்துப் பசிநீங்கினர். அப்போஸ்தலர்களில் கானானியனாகிய சீமோனும் கூட இருந்ததான் போல் தோன்றுகிறது. ஆகவே

அவனை அழைப்பதாக தோன்றக்கூடாது என்று எண்ணிய ஆண்டவர் பேதுருவை நோக்கி யோனாவின் குமாரனாகிய சீமோனே இவர்களிலும் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா? என்றார். அதற்கு அவன் ஆம் ஆண்டவரே! உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்றான். அதற்கு ஆண்டவர் என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக என்றார். இவ்விதமாக மும்முறை ஆண்டவர் கேட்டபோது பேதுருவிற்கு தூக்கிவாரிப் போட்டது. தன் ஆண்டவரை மும்முறை மறுதலித்ததை அங்கு ஆண்டவர் நினைவு கூர்ந்ததை நினைத்து அஞ்சி மனமுடைந்து துக்க சாகரத்தில் மூழ்கி ஆண்டவரே நீர் எல்லாவற்றையும் அறிவீர் நான் உம்மை நேசிக்கிறேன் என்பதையும் அறிவீர் என்றான். இவ்விதமாக கர்த்தர் விழுந்து போன தன் அன்பனை ஸ்திரப்படுத்தி என் ஆடுகளையும், ஆட்டுக்குட்டிகளையும் மேய்ப்பாயாக என்றார். (யோவா 21=15-17). இவ்விதமாக தம்முடையவர்கள் எந்த இடத்தில் பின்வாங்கினார்களோ அந்த இடத்திலேயே அவர்களை ஸ்திரப்படுத்த நம்முடைய நல்ல ஆண்டவர் பிரியங் கொண்டார்.

**35.7.மகிமைப்படுத்துதல்:-** தான் தன் எஜமானருக்கு துக்கம் உண்டாக்கவும் செய்யத்தகாத மறுதலிப்பு குற்றம் செய்யததையும் தன் ஆண்டவர் தனக்கு மன்னித்து, தன்னை தேற்றியதை அறிந்த பேதுரு பின்னும் கர்த்தரை அதிகமாக நேசித்தான். அவன் நேசத்தின் உறுதியைக் கண்ட ஆண்டவர் அவனை நோக்கி நீ இளவயதுள்ளவனாயிருந்தபோது உன்னை நீயே அரைக்கட்டிக்கொண்டு உனக்கு இஷ்டமான இடங்களிலேயே நடந்து திரிந்தாய் நீ முதிர் வயதுள்ளவனாகும் போது உன் கைகளை நீட்டுவாய், வேறொருவன் உன் அரையைக் கட்டிக்கொண்டு உனக்கு இஷ்டமில்லாத இடத்திற்கு உன்னை கூட்டிக்கொண்டு போவான் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். இன்ன விதமான மரணத்தினாலே தேவனை மகிமைப்படுத்தப் போகிறான் என்பதை குறிக்கும்படியாக அவர் இதை சொல்லிய பின்பு அவனை நோக்கி என்னை பின்பற்றிவா என்றார். அன்பன் தன் ஆண்டவரை தன் வாழ்க்கையின் இறுதிவரை உத்தமமாக பின்பற்றி தன் ஆண்டவரைப் போல சிலுவையில் அறையுண்டு உயிர்நீத்தான் என்பது பாரம்பரிய வாக்கு. (யோவா 21=18,19)

## 7 அப்போஸ்தலர்களும் சீஷர்களும் (தோமா) எருசலேம்

36.1.வாரத்தின் முதல்நாள்:- கர்த்தர் உயிர்த்தெழுந்த அன்று எருசலேமிலும், எம்மாவிலும் பெத்தானியாவிலும் தன்னை வெளிப்படுத்தினார். மறுதினம் கலிலேயாவிலே குறிக்கப்பட்ட மலையிலும் அதற்கு மறுதினம் திபேரியாக் கடற்கரையிலும் தம்மை வெளிப்படுத்தினார். இவ்விதமாக ஏழுமுறை தரிசனமான போதிலும் இன்னும் சில அப்போஸ்தலர்களும் சில சீஷர்களும் அவரை தரிசியாமல் சிதறிப் போயிருந்தனர். எனவே அவர்களுக்கு அவர் தரிசனமாகி தம்மை வெளிப்படுத்த வேண்டியதாக இருந்தது. அவர் பெத்தானியாவிலிருந்தும் கலிலேயா குறிக்கப்பட்ட மலையிலிருந்தும் பரலோகத்திற்கு எழுந்தருளிப் போய் பிதாவிடம் சேர்ந்ததை சில அப்போஸ்தலர்களும் சீஷர்களும் ஸ்திரீகளும் அறிந்திருந்தனர். ஆகிலும் உலகத்தின் முடிவு பரியந்தமும், சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்பதை உறுதிப்படுத்த கர்த்தர் திரும்ப தரிசனமானது நல்லதாக இருந்தது.

திபேரியாக் கடல் கரையிலிருந்து புறப்பட்ட ஏழு அப்போஸ்தலர்களும் மற்ற அப்போஸ்தலர்கள் நால்வரையும் கண்டு கர்த்தர் தங்களுக்கு தரிசனமான விபரத்தை அறிவித்து பதினொருவரும் மீண்டும் எருசலேமிற்கு சென்று மேலறையில் பிரவேசித்தனர். கர்த்தர் தங்களுக்கு தரிசனமாகி தங்களை ஸ்திரப்படுத்தி பட்சமாய் பேசினபோதிலும் யூதர்களின் தீமையிலிருந்து தங்களை பாதுகாக்க கர்த்தர் ஒன்றும் செய்யவில்லையே என்ற மனக்குறைவுகள் இருந்தது போலும்! யூதர்களுக்கு பயப்படும் பயம் இன்னும் அவர்களை விட்டபாடில்லை. ஏனெனில் இன்னும் பரிசுத்த ஆவியானவர் வராதபடியால் அவர்கள் தைரியம் இழந்திருந்தனர். "சருகு அசைய முன் இதோ, திருடன் வந்து விட்டான் என்று படுக்கையை விட்டுத் திடுக்கிட்டு எழுந்து அரவம் கேட்டு நிற்கிற லோபியைப் போல" தங்கள் வீட்டின் கதவை மீண்டும் அடைத்துக் கொண்டு அமர்ந்திருந்தனர்.

அன்று வாரத்தின் முதல்நாள் தங்கள் ஆண்டவரின் கட்டளையை நிறைவேற்ற அவர்கள் இராப்போஜனம் அப்பம் புசிக்க ஒருவேளை ஆயத்தப்பட்டிருக்க வேண்டும்.

அப்போழுது கர்த்தர் அவர்கள் நடுவே தரிசனமாகி நின்று "உங்களுக்கு சமாதானம் " என்றார். அவர் இப்படிச் சொல்லி தம்முடைய கைகளையும் விலாவையும் காண்பித்தார். எல்லோரும் தங்கள் கர்த்தரைக் கண்டு சந்தோசப்பட்டனர். (யோவா 20=19,20)

**37.2.நித்தியஜீவன்:-** தம்முடைய அன்பர்கள் பயந்த நிலைமையைக் கண்ட அருமை ஆண்டவர் மிகவும் பரிதாபம் கொண்டார். பரிசுத்த ஆவியானவர் வந்து அவர்களை தைரியப்படுத்தும் வரைக்கும் கூட நிலைத்திருக்க மாட்டார்கள் போல அவருக்குத் தோன்றியது. மண்ணானவனுக்கு ஜீவ சுவாசத்தை அவன் நாசியில் ஊதின மகிமையின் கர்த்தர் அவர்களுக்கு தைரியம் உண்டாகும்படி அவர்கள் மேல் நித்திய ஜீவனை ஊதினார். "உங்களுக்கு சமாதானமுண்டாவதாக" என்று அவர்களை வாழ்த்தி பிதா என்னை அனுப்பியது போல நானும் உங்களை அனுப்புகிறேன். நீங்கள் எவர்களுடைய பாவங்களை மன்னிக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்பட்டிருக்கும். எவர்களுடைய பாவங்களை மன்னியாதிருக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப் படாதிருக்கும் என்று கூறி அவர்களை ஸ்திரப்படுத்தினார். அதுமுதல் சீஷர்கள் எருசலேமின் வீதிகளில் தைரியமாக நடமாடத் துவங்கினர். (யோவா 20;21-23)

**38.3.பின்வாங்குதல்:-** அப்போஸ்தலர்களும் சீஷர்களும் இதுவரை கர்த்தரைக் கண்டதுபோல் தோமா காணவில்லை. அவன் மிகவும் மனம் உடைந்து சீஷர்கள் கூட்டத்தை விட்டு விலகியிருந்தான். பதற்றமும் உறுதியும் இல்லாத அவனுடைய இருதயம் அமைதியற்று தவித்துக் கொண்டிருந்தது. அப்போஸ்தலர்களும் சீஷர்களும் அவனை கண்டு "நாங்கள் கர்த்தரை கண்டோம்" என்றனர். தன் ஆண்டவரை நேசித்தவிதம் அவனுக்கு தானே தெரியும். மேலும் தன்னை இதுவரை கர்த்தர் சந்திக்காது மற்றவர்களை சந்தித்து இருப்பாரேயானால் அது கர்த்தராக இருக்க முடியாது என்ற நிலைமைக்குள்ளே வந்தான். சீஷர்கள் வேறு யாரையோ கண்டிருக்க வேண்டும் என்று முடிவெடுத்தான். அப்படி வந்தவர் கர்த்தராக இருக்க வேண்டுமேயானால் அவருக்கு காயங்கள் இருக்கவேண்டும். அவர் தன்னிடத்திலே மீண்டும் வருவாரேயானால் அவருடைய கைகளில் ஆணிகளினால் உண்டான காயத்தைக் தான் கண்டு, அந்த காயத்தில்

தன்விரலை விட்டு என்கையை அவருடைய விலாவிலே போட்டாலோழிய விசுவாசிக்க மாட்டேன் என்றான். இதோ உலகத்தின் முடிவு பரியந்தமும் நான் சகல நாட்களிலும் உங்களோடு கூட இருக்கிறேன் என்ற அவனுடைய ஆண்டவர் இவன் கூறினவைகளை கவனித்துக் கொண்டிருந்தார் என்பதை அறியாதிருந்தான். (யோவா 20: 24,25)

39.4.வெளிப்படுத்துதல்:- அடுப்பில் எரிந்து கொண்டிருந்த ஒரு சுள்ளி படபடத்து தெறித்து வெளியே விழுந்து, அதன் நெருப்பு அவிந்து போவது போல தோமாவும் விசுவாசத்தில் அவிந்து போயிருந்தான். வாரத்தின் முதல் நாளில் கர்த்தர் வருவார் என்று சீஷர்கள் சொன்னதன் பேரில் அரைகுறை மனதோடு தோமாவும் சீஷர்களோடு இருந்தான். கதவுகள் பூட்டப்பட்டிருந்தது. அப்போது கர்த்தர் வந்து அவர்கள் நடுவே நின்று "உங்களுக்கு சமாதானம்" என்றார். பின்பு அவர் தோமாவை நேரிடையாக நோக்கி தோமாவே என்று அழைத்தவுடன் திடுக்கிட்டான். அவர் நீ உன் விரலை இங்கே நீட்டி என் கைகளைப் பார், உன்கையை நீட்டி என் விலாவிலே போடு அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு என்றார். (யோவா 20: 26,27)

40.5.பாக்கியவான்கள்:- அதிர்ச்சியடைந்த தோமாவின் இருதயம் கொளுந்துவிட்டு விசுவாசமானது பற்றி எரிய அவர் பாதத்தில் விழுந்தான். அவன் மனதுருகி என் ஆண்டவரே என் தேவனே என்றான். அதற்கு கர்த்தர் அவனிடம் தோமாவே நீ என்னை கண்டதினாலே விசுவாசித்தாய். காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார். இவ்விதமாக கர்த்தர் தம்முடையவர்களின் சந்தேகங்களை நீக்கி தம்மை உயிரோடிருக்கிறவராக காண்பித்தார். நேசகர்த்தரின் அன்புச் செல்வங்களே நீங்களும் இப்போழுது அவரைக் காணமலிருந்தும் அன்பு கூருகிறீர்கள். இப்பொழுது அவரை தரிசியாமலிருந்தும் அவரிடத்தில் விசுவாசம் வைத்து சொல்லி முடியாததும் மகிமையால் நிறைந்தது மாயிருக்கிற சந்தோஷமுள்ளவர்களால் களிகூர்ந்து உங்கள் விசுவாசத்தின் பலனாக ஆத்தும இரட்சிப்பை அடைந்து மெய் பாக்கியவான்களாக திகழுகிறீர்கள். பிரிய குணவான்களே உங்கள் ஆத்துமா வாழ்கிறது போல, நீங்கள் எல்லாவற்றிலும் சுகமாயிருப்பீர்களாக! (யோவா 20 : 28 - 30)

## 8 பரமேறுதல் (ஒலிவமலை - எருசலேம்)

**41.1.தெளிவான திருஷ்டாந்தம்:-** இவ்விதமாக கர்த்தர் நாற்பது நாளளவும் தம்முடையவர்களுக்கு தரிசனமானார்! அவர் முதலாவது : மகதலேனா மரியாளுக்கும் பின்பு கலிலேயா ஸ்திரீகளுக்கும் தம்மை வெளிப்படுத்தினார். பின்பு எம்மாவுக்கு போன கிலேயோப்பாவுக்கும் யாக்கோபுக்கும் தரிசனமாகி தம்மை வெளிப்படுத்தினர். அன்று இரவு மேலறை சீஷர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் தம்மை வெளிப்படுத்தி அவர்களை அழைத்துக் கொண்டு பெத்தானியாவுக்கு போய் ஐநூறுக்கு மேற்பட்டவர்களுக்கு தரிசனமானார். அவர்கள் பார்த்துக் கொண்டிருந்த போது அவர் தமது கரங்களை உயர்த்தி ஆசீர்வதித்து பரலோகத்திற்கு எழுந்தருளி போனார். அதற்கு மறுதினம் பதினொரு அப்போஸ்தலர்களுக்கு கலிலேயாவில் குறிக்கப்பட்ட மலையில் தரிசனமானார். அவர்களுக்கு தம்மைக் குறித்த சுவிசேஷ ஊழியங்களைக் குறித்து கட்டளைகள் கொடுத்தபின்பு அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கையில் பரலோகத்திற்கு எழுந்தருளிப் போய் தேவனுடைய வலது பாரிசத்தில் உட்காந்தார். பின்பு அடுத்ததினம் திபேரியாக் கடல் கரையில் வைத்து அப்போஸ்தலர்கள் மத்தியில் பேதுருவுக்காக விசேஷித்த தரிசனம் அளித்தார். அதன் பின்பு வாரத்தின் முதல்நாள் தோறும் கர்த்தர் தரிசனமானார். அதில் ஒரு வாரத்தில் சீஷர்களை திடப்படுத்தி பரிசுத்த ஆவியானவரை அவர்கள் மேல் ஊதி கட்டளை கொடுத்தார். மறு வாரத்தில் தோமாவுக்கு தம்மை வெளிப்படுத்தினார். இவ்விதமாக கர்த்தர் தம்மை தெளிவான திருஷ்டாந்தங்களினலே தம்மை உயிரோடிருக்கிறவராக காண்பித்தார். (அப்போ 1:3)

**42.2.ஒலிவமலை:-** அப்போஸ்தலர்களும் சீஷர்களும் தங்கள் ஆண்டவர் உயிர்த்தெழுந்தார் என்று தெளிவாக அறிந்து, அவர்களுடைய சந்தேகங்களும் பயங்களும் நீங்கி தங்கள் ஆண்டவரிடத்தில் அடிக்கடி பேசினார்கள். நமது ஆண்டவரும் அவர்களிடத்தில் பட்சமாக சம்பாசித்தார். கடைசியாக அவர்களை வீட்டைவிட்டு வெளியே வரச்செய்து ஒலிவமலைக்கு அழைத்துக் கொண்டு போனார். அன்றையபகல் வேளையில் அன்பர்கள் தங்கள்

ஆண்டவருக்குப் பின்னாக எருசலேமின் வீதிகளில் மகிழ்ச்சியாக நடந்து சென்றனர். அதற்குள் நாசரேத்து இயேசு உயிர்த்தெழுந்தார். என்ற செய்தி ஊருக்குள்ளே பரவியிருந்தது. முறுமுறுத்தவர்களும் மூர்க்கமானவர்களும் கொலை பாதகரும் வெறியரும் தூஷித்தோரும் தலைதுலுக்கினோரும் பரியாசம் செய்தோரும் இச் செய்தியைக் கேட்டு வாயடைத்து நின்றனர். அன்பர்கள் தங்கள் ஆண்டவரோடு நடந்து போகிறார்கள் என்பதை அறியாமல் அவர்களை ஆச்சரியத்தோடு நோக்கி நின்றனர். இருளின் மக்களுக்கு ஒளியானவர் நடந்து போகிறதை அறியாதபடிக்கு மனக்குருடராக இருந்தனர். அன்பர்களும் ஆண்டவரும் எருசலேமைக் கடந்து கிதரோன் ஆற்று வழியாக நடந்து கெத்சமனேத் தோட்டத்தைத் தாண்டி ஒலிவமலை ஏறினர். கடந்த மாதகொலைபாதக நிகழ்ச்சிகளெல்லாம் அன்பர்களின் மனக்கண்களில் பளிச்சிட்டன. அன்றைய துக்கம் நீங்கி இன்றைய மகிழ்ச்சியில் களித்திருந்தாலும் இனம்புரியாத வேதனையொன்று அவர்களுடைய மனதில் முள்ளாக உறுத்திக்கொண்டிருந்தது. தங்கள் ஆண்டவர் தங்களை விட்டு இறுதியாக பரமேறப் போகிறார் என்று அறியாதிருந்தனர். அவர்கள் ஒலிவமலையில் ஏறியவுடன் திரும்ப எருசலேமை நோக்கினர். தங்கள் ஆண்டவர் ராஜபவனி போகும்போது தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா என்ற எல்லோருடைய ஆர்ப்பரிப்பின் சத்தம் அவர்களுக்கு எதிரொலிப்பது போல் தோன்றியது. உடனே மாலை மயங்கி இருள் பிரவாகித்தது. தங்கள் ஆண்டவருடன் துக்கம் நிறைந்தவர்களாக கெத்சமனே தோட்டத்திற்குள் பிரவேசித்து தங்கள் ஆண்டவர் இரத்த வியர்வை சிந்திய காட்சி ஆகியவைகள் அவர்கள் மனதில் முள்குத்திய வேதனை உண்டாக்கியது. இதோ சிறிது நேரத்தில் துரோகியொருவன் காவல்சேவகர்களுடன் வந்து அவரை முத்தமிடவும் அவர்கள் தங்கள் ஆண்டவரை கைவிட்டு ஒடுவதும் யாரும் விரும்பப்படாத திகிலூட்டும் காட்சியாக அமைந்தது. பொழுது புலர்ந்து பகல் வளர்ந்தது .இதோ தங்கள் ஆண்டவர் கபாலஸ்தலத்தில் இரத்த வெள்ளத்தில் தொங்குகிறார். தாங்கள் யாவரும் அஞ்சி ஆங்காங்கே சிதறியிருந்து கொண்டு கவனித்தது; ஆகிய பழைய நினைவுகளெல்லாம் அவர்கள் மனதைக் கலங்கச் செய்தது. அவர்கள் விழிகளில் இருந்து நீர்

அருவி பெருகிப் பாய்ந்தது. தங்கள் எஜமான் அருகே இருக்கிறதை மறந்து தங்கள் விழிநீரைத் துடைத்துக் கொண்டனர். அதைக் கண்ட நம்முடைய ஆண்டவர் அவர்களின் உருக்கமான நேசத்தைக் கண்டு மனதுருகிப் போனார். (அப்போ 1=12)

**43.3.தேவராஜ்யம்:-** மெய்மறந்திருந்த தமது அன்பர்களின் கவனத்தை ஆண்டவர் திருப்பினார். தேவனுடைய ராஜ்யத்திற்குரியவைகளை அவர்களுடனே பேசினார். நமது ஆண்டவர் தேவராஜ்யத்தைப் பற்றி என்ன பேசினார் என்ற விபரமான குறிப்புகள் நமக்குக் கிடைக்கவில்லை. அவர் மரணத்திற்கு முன்பு பேசிய தேவராஜ்யத்தைப் பற்றி நமக்கு மூவித குறிப்புகள் கிடைக்கின்றன. ஒன்று அவர் உலகத்தில் நேரிடையாக இருக்கும்போது உண்டான அவருடைய பிரசன்ன ராஜ்யம். இரண்டாவது தற்போது நடைபெறுகிற சபையாகிய ராஜ்யம். மூன்றாவது அவர் மீண்டும் இவ்வுலகத்திற்கு வந்து தமது மகிமையின் சிங்காசனத்தில் அமர்ந்து ஆளுகை செய்யும் மகிமையின் ராஜ்யம். அன்பர்கள் இந்த மூன்றாவது இராஜ்யத்தை உடனே எதிர்பார்த்தார்கள். ஆகவே அவர்கள் தங்கள் ஆண்டவரை நோக்கி : ஆண்டவரே இக்காலத்திலா இராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர் என்று கேட்டார்கள். அதற்கு ஆண்டவர் பிதாவானவர் தம்முடைய ஆதினத்திலே வைத்திருக்கிற காலங்களையும், வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல என்று கூறி அவர்கள் செய்ய வேண்டிய கடமைகளை அறியும்படி அவர்களுக்கு உணர்த்த ஆரம்பித்தார். (அப் 1=3,6,7)

**44.4.வாக்குத்தத்தம்:-** நமதாண்டவர் தமதன்பர்களை நோக்கி : யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்தான். நீங்களோ சிலநாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள். ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார். மேலும் பரிசுத்த ஆவியானவர் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும் யூதேயா முழுவதிலும் சமாரியாவிலும் பூமியின் கடைசிப் பரியந்தமும் எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். (அப்போ 1=4-8)

45.5.பரமேறுதல்:- அப்போஸ்தலர்களும் சீஷர்களும் ஏறக்குறைய நூற்றியிருபதுபேர் வரைக்கும் கூடியிருந்தது போல் தெரிகிறது. இச்சமயத்தில் நம்முடைய நல்ல ஆண்டவர்அவர்களுக்கு எல்லாவற்றையும் கட்டளையிட்டு முடித்தபின்பு அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கையில் உயர எடுத்துக்கொள்ளப்பட்டார். அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக்கொண்டது. அவர் பரலோகத்திற்குப் போகும் போது அவர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தனர். அப்பொழுது இதோ வெண்மையான வஸ்திரம் தரித்த பரிசுத்த தூதர்களில் இரண்டு பேர் அவர்கள் அருகே நின்று கலிலேயராகிய மனுஷரே நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டு நிற்கிறீர்கள். உங்களிடத்திலிருந்து வானத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி வானத்திற்கு எழுந்தருளிப் போனாரோ அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள். அப்பொழுது அவர்கள் எருசலேமுக்கு சமீபமாய் ஒரு ஓய்வு நாள் பிரயாணத் தூரத்திலிருக்கிறஒலிவமலை எனப்பட்ட மலையிலிருந்து எருசலேமிற்கு திரும்பிப் போனார்கள். இவ்விதமாக நாமும் நம்முடைய நேச ஆண்டவர் திரும்ப வருவதை எதிர்பார்த்து காத்திருக்கிறோம். ஆமென் கர்த்தராகிய இயேசுவே வாரும்! (அப்போ 1= 9-11)





# 9 உயிர்த்தெழுதல் (சாட்சிகள்)

**46.1.இயேசுவானவர்:-** நமதாண்டவர் ஒரு நோக்கமில்லாது உலகத்தில் பிரவேசித்தவர் அல்ல. அவர் ஊழியத்தை துவக்கும் போதே தாம் படப்போகிற பாடுகள், மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல், அதனால் உண்டாகும் மீட்பின் மகிமை எல்லாவற்றையும் அறிந்தவராக இருந்தார். அவர் முதலாவது யூதேயாவில் ஊழியத்தை துவங்கும் போதே தேவாலயத்தில் வைத்து யூதர்களிடம் இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள். மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன் என்றார். அவரோ தம்முடைய சரீரம் உயிர்த்தெழுந்திருப்பதை குறித்து இவ்வாறு பேசினார் என்று சீஷர்கள் கூட பின்புதான் அறிந்துகொண்டார்கள். பெத்தானியாவில் வைத்து அருமைச் சகோதரி மார்த்தாளிடமாக நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாக இருக்கிறேன். இதை விசுவாசிக்கிறாயா என்றார். பின்பு கலிலேயா ஊழியத்தை முடித்து, இறுதியாக யூதேயாவுக்கு போகும்போது தமக்கு நேரிடப்போகும் காரியங்களைக் கண்டு பதறிப்போகக் கூடாது என்பதற்காக பன்னிருவரையும் தனியே அழைத்து இதோ எருசலேமிற்கு போகிறோம்; மனுடி குமாரன் பிரதான ஆசாரியரிடத்திலும் வேதபாரகரிடத்திலும் ஒப்புக்கொடுக்கப் படுவார். அவர்கள் அவரை மரண ஆக்கினைக் குள்ளாகத் தீர்த்து அவரை பரியாசம் பண்ணவும் வாரினால் அடிக்கவும் சிலுவையில் அறையவும் புறஜாதிகளிடத்தில் ஒப்புக்கொடுப்பார்கள், ஆனாலும் மூன்றாம் நாளிலே அவர் உயிர்த்தெழுந்திருப்பார் என்றார். பின்னும் கர்த்தர் தாம் கெத்சமனேயில் பாடு அனுபவிக்கும் முன்னதாக தம்முடைய அன்பர்களை நோக்கி மேய்ப்பனை வெட்டுவேன் மந்தையின் ஆடுகள் சிதறடிக்கப்படும் என்று எழுதியிருக்கிறபடி இந்த இராத்திரியிலே நீங்கள் எல்லோரும் என்னிமித்தமாக இடறலடைவீர்கள். ஆகிலும் நான் உயிர்த்தெழுந்த பின்பு உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்கு போவேன் என்றார். இவைகள் எல்லாம் அவர்கள் அறியாமல் போனார்கள். கர்த்தர் உயிர்த்தெழுந்த பின்பு அவர்களுக்கு மோசேயின் நியாயப்பிரமாணத்தையும் தீர்க்க தரிசிகளின் ஆகமங்களையும் சங்கீதங்களையும் நினைபூட்டி

எழுதியிருக்கிறபடி கிறிஸ்து பாடுபடவும் மூன்றாம் நாளிலே மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது என்றார். இவ்விதமாக இயேசுவானவர் தம்முடைய உயிர்த்தெழுதலைக் குறித்து தம்முடைய மரணத்திற்கு முன்பு சாட்சியாக அறிவிக்க கூடியவராக இருந்தார். இவைகளை அறிந்த அப்போஸ்தலன் கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின் படி நமது பாவங்களுக்காக மரித்து அடக்கம்பண்ணப்பட்டு வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார் என்றான். (யோவா 2:22, -11:24, மத் 20=18, -26:32, லூக் 24:46, 1கொரி 15:3,4)

**47.2.தூதர்கள்:-** இயேசுவானவர் உயிர்த்தெழுந்தார் என்ற செய்தியை முதலாவது அறிவித்தவர்கள் தேவதூதர்களாகும். வாரத்தின் முதலாம் நாளில் சில ஸ்திரீகள் தங்கள் ஆண்டவருக்கு சுகந்தவர்க்கமிட கல்லறைக்கு வந்தனர். அப்போது பரிசுத்த தூதர்கள் வானத்திலிருந்து இறங்கிவந்து அந்த கல்லறையின் கல்லைப் புரட்டித்தள்ளி அதன்மீது அமர்ந்தனர். அங்கேவந்த ஸ்திரீகளை நோக்கி அவர்கள் நீங்கள் பயப்படாதிருங்கள் சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என்று அறிவேன். அவர் இங்கு இல்லை. தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார். கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள், சீக்கிரமாய் போய் அவர் மரித்தோரிலிருந்து எழுந்தார் என்று அவருடைய சீஷர்களுக்கு சொல்லுங்கள் அவர் உங்களுக்கு முன்னே கலிலேயாவிற்கு போகிறார். அங்கே அவரைக் காண்பீர்கள் இதோ உங்களுக்குச் சொன்னேன் என்றனர். இரண்டாவது முறையாக வேறுசில ஸ்திரீகள் கல்லறைக்கு வந்தபோது தூதர்கள் கல்லறைக்குள்ளே அமர்ந்திருந்தனர். அவர்கள் மீண்டும் ஸ்திரீகளை நோக்கி பயப்படாதிருங்கள் சிலுவையில் அறையப்பட்ட நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறீர்கள். அவர் உயிர்த்தெழுந்தார். அவர் இங்கு இல்லை. இதோ அவரை வைத்த இடம். நீங்கள் அவருடைய சீஷரிடத்திற்கும் பேதுருவினிடத்திற்கும் போய் உங்களுக்கு முன்னே கலிலேயாவிற்கு போகிறார். அவர் உங்களுக்கு சொன்னபடியே அங்கே அவரை காண்பீர்கள் என்று அவர்களுக்கு சொல்லுங்கள் என்றனர். மூன்றாம் முறையாக சில ஸ்திரீகள் அங்கு வந்தனர். அப்பொழுது தூதர்கள் அங்கு நின்றுகொண்டிருந்தனர். உயிரோடிருக்கிறவரை

மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன? அவர் இங்கே இல்லை.அவர் உயிர்த்தெழுந்தார். மனுஷகுமாரன் பாவிகளான மனுஷர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படவும் சிலுவையில் அறையப்படவும் மூன்றாம் நாளில் எழுந்திருக்கவும் வேண்டுமென்பதாக அவர் கலிலேயாவிலிருந்த காலத்தில் உங்களுக்கு சொன்னதை நினைவுகூருங்கள் என்றனர். இந்த தூதர்கள் பிரதான ஆசாரியரின் காவல் சேவகர் தவிர சீஷர்கள் காணவில்லை. ஆதலால் ஸ்திரீகள் தூதர்களின் செய்தியை சீஷர்களுக்கு அறிவித்தபோது அவர்களுக்கு அது வீண்பேச்சாக தோன்றியது. தூதர்கள் சீஷர்களுக்கு தரிசனமாகாதிருந்தது என்ன காரியமென்று சரியாக யூகிக்க முடியவில்லை. ஏறக்குறைய ஐநூறு வருசங்களாக நின்றுபோன தேவதூதர்களின் ஊழியம் மீண்டும் இயேசுவானவர் பிறக்கிறதற்கு முன்பதாக ஆரம்பித்து அவர்கள் சகரியாவிடமும் மரியம்மாளிடமும் யோசேப்பினிடமும் தோன்றி தேவசெய்தியை அறிவித்தனர். அவர்கள் பலமுறை யோசேப்புக்கு காணப்பட்டு உதவி செய்தனர். மீண்டும் அநேக வருசங்கள் அவர்கள் வரவில்லை. இயேசுவானவர் பெரியவராகி சோதனை நாட்களுக்கு உட்பட்டபோது இவர்கள் வந்து பணிவிடை செய்தார்கள். அதற்கு பின்பு கெத்சமனே தோட்டத்தில் ஒரு தூதன் காணப்பட்டு நமது அருமை ஆண்டவரை பலப்படுத்திச் சென்றான். அதற்கப்புறம் இப்பொழுது கல்லறையில் காணப்பட்டு ஸ்திரீகளுக்கு மட்டும் இயேசுவானவர் உயிர்த்தெழுந்ததை நற்செய்தியாக அறிவித்ததோடு அவர் சொன்ன வேதவாக்கியங்களையும் நினைவுபடுத்தி சீஷர்களுக்கும் விசேஷமாக பேதுருவுக்கும் அறிவிக்க தூண்டினார்கள். அருமை சகோதரிகள் இயேசுவானவரின் தெய்வீகத்தை எவ்வளவு அறிந்திருந்தார்கள் என்று நமக்கு தெரியவில்லை. எனவே அவர்கள் தூதர்களை தரிசித்ததின் பேரில் அவருடைய முழு தெய்வீகத்தையும் அறிவதற்கு பேருதவியாக இருந்திருக்கும் என்று அறியலாம். இறுதியாக இயேசுவானவர் பரமேறும் போது இந்த தூதர்கள் சீஷர்களுக்கு காணப்பட்டு அவர் திரும்ப வருவார் என்று அவர்களை திடப்படுத்தி அனுப்பினர். இப்படியாக தூதர்கள் இயேசுவானவரின் உயிர்த்தெழுதலைக் குறித்து சாட்சியாக அறிவித்தனர். (மத்தே 28:1-7, மாற் 16:5-7, லூக் 24:1-7, அப்போ 1:9-11)

48.3.காவல் சேவகர்கள்:- இயேசுவானவர் தான் உயிர்த்தெழுந்திருப்பேன் என்று சொன்ன வார்த்தைகள் பிரதான ஆசாரியர்களுக்கும், பரிசேயர்களுக்கும் எப்படித் தெரியும் என்று நமக்கு விளங்கவில்லை. அப்போஸ்தலர்கள் கர்த்தரின் உயிர்த்தெழுதலைக் குறித்து புரிந்து கொள்ளாமல் இருந்த போது இந்த மூர்க்கமான ஆசாரிய வகுப்பினர் இவைகளை நினைவில் வைத்திருந்தது ஆச்சரியத்திலும் ஆச்சரியம்! நமதாண்டவரின் அடக்கம் முடிந்த பின்பு பிலாத்துவிடம் சென்று ஆண்டவனே அந்த எத்தன் உயிரோடிருக்கும் போது மூன்று நாளைக்கு பின்பு எழுந்திருப்பேன் என்று சொன்னது எங்களுக்கு ஞாபகம் இருக்கிறது. ஆகையால் அவனுடைய சீஷர்கள் இராத்திரியில் வந்து அவனைக் களவாய் கொண்டுபோய் மரித்தோரிலிருந்து எழுந்தான் என்று ஜனங்களுக்கு சொல்லாதபடிக்கும் முந்தின எத்தைப் பார்க்கிலும் பிந்தின எத்துகொடி தகாதபடிக்கும் நீர் மூன்றுநாள்வரைக்கும் கல்லறையை பத்திரப்படுத்தும்படி கட்டளையிட வேண்டும் என்றார்கள். அதற்கு பிலாத்து உங்களுக்கு காவல் சேவகர் உண்டே போய் உங்களால் கூடிய மட்டும் கல்லறையை பத்திரப்படுத்திக் கொள்ளுங்கள் என்றான். அவர்கள் போய் கல்லறைக்கு முத்திரை போட்டு காவலில் வைத்து கல்லறையை பத்திரப்படுத்தினார்கள். ஆனால் வாரத்தின் முதல்நாளின் அதிகாலையில் பூமி மிகவும் அதிரும்படி கர்த்தருடைய தூதன் வானத்திலிருந்து இறங்கி வந்து கல்லறையின் வாசலிலிருச்த கல்லைப்புரட்டித் தள்ளி அதன்மேல் உட்கார்ந்தான். அந்த காவல் சேவகர்கள் அவனுக்கு பயந்ததினால் திடுக்கிட்டுச் செத்தவர்கள் போலானார்கள். அப்பொழுது கல்லறைக்கு வந்திருந்த ஸ்திரீகளுக்கு தேவதூதன் அறிவித்த உயிர்த்தெழுதல் செய்தியை இவர்களும் கேட்டார்கள். அந்த ஸ்திரீகள் போனபின்பு காவல் சேவகர்களில் சிலர் நகரத்திற்குள்ளே வந்து நடந்த யாவற்றையும் பிரதான ஆசாரியருக்கு அறிவித்து இயேசுவானவர் உயிர்த்தெழுந்த செய்தியை சாட்சியாக உறுதிப்படுத்தினார்கள். (மத்தே 27=62-66,-28:1-4)

49.4.பிரதான ஆசாரியர்கள்:- காவல் சேவகர்கள் வந்து இயேசுவானவர் உயிர்த்தெழுந்தார் என்று சொன்ன செய்தி பிரதான ஆசாரியனுக்கும் மூப்பர் கூட்டத்தாருக்கும் மிகவும் விசனமாக இருந்தது. பரலோகத்தின் தேவனுக்கு நாம்

தொண்டர்களாக இருக்கும் போது கேவலம் நாசரேத்து இயேசுவைச் சேர்ந்த சில பெண்டிற்கு வந்து தேவதூதன் செய்தி சொல்வதா? ஒருநாளும் அப்படியிருக்காது. ஏதோ இவர்கள் இருட்டுக்குள்ளே அருண்டு போய் பிதற்றுகிறார்கள் என்று எண்ணிக்கொண்டனர். அவர்கள் தங்கள் கூட்டத்தோடு ஆலோசனை செய்து மேலும் இவர்கள்போய் ஊருக்குள்ளே பிதற்றி நாசரேத்து இயேசுவுக்கு பட்சமாக பேசாதபடி செய்ய வேண்டுமென்று முடிவெடுத்தனர். அவர்கள் சேவகரிடம் வந்து அவர்களுக்கு வேண்டிய பணத்தைக் கொடுத்து நாங்கள் நித்திரை பண்ணுகையில் அவனுடையசீஷர்கள் இராத்திரியிலே வந்து அவனை களவாய் கொண்டுபோய்விட்டார்கள் என்று சொல்லுங்கள். அது தேசாதிபதிக்கு கேள்வியானால் நாங்கள் அவரைச் சம்மதப்படுத்தி உங்களை தப்புவிப்போம் என்றனர். அக்காலத்தில் கைதிகளை தப்பவிட்டால் சேவகர்களுக்கு மரணதண்டனை விதிக்கும் வழக்கம் இருந்தது. அதுவும் செத்துப்போன நாசரேத்து இயேசுவை தப்பவிட்டார்கள் என்றால் கேட்கவே வேண்டாம். ஓரேயடியாய் தொலைந்து போவோம் என்று எண்ணி அவர்கள் பணத்தை வாங்கிக் கொண்டு தங்களுக்கு போதிக்கப்பட்ட படியே செய்தார்கள். அறிவிலி யூதர்களுக் குள்ளே இந்த துர் செய்தி மிகவும் விரைவாகப் பரவியது. பரிசுத்த ஆவியானவர் வந்த பின்பு அப்போஸ்தலர்கள் தங்கள் ஆண்டவரின் உயிர்த்தெழுலைக் குறித்து பலமாக சாட்சி கொடுத்தனர். அவர்களிடம் கூடிவந்த யூதர்களை நோக்கி நீங்கள் ஆணியடித்து கொலைசெய்த நாசரேத்து இயேசுவானவரை தாவீதின் வாக்கின் படி தேவன் அவரை உயிரோடு எழுப்பினார். அதற்கு நாங்களே சாட்சிகள். இவரே உங்கள் எல்லோருக்கும் கிறிஸ்துவும் ஆண்டவருமாக இருக்கிறார் என்று உணர்த்தினர். தங்கள் இருதயத்திலே குத்தப்பட்ட ஆயிரமாயிரம் யூதர்களும் அவர்களுடைய ஸ்திரீகளும் விசுவாசத்திற்கு கீழ்ப்படிந்து நாசரேத்து இயேசுவானவரை தங்கள் ஆண்டவராக ஏற்றுக்கொண்டு அறிக்கை செய்தனர். இந்த செய்தி மீண்டும் பிரதான ஆசாரியனுக்கும் அவனுடைய கூட்டத்தாருக்கும் எட்டினது. இது போக அப்போஸ்தலர்கள் சில பிணியாளிகளையும் சுகமாக்கினர். இதனால் அவர்கள் கலக்கமடைந்தனர். ஆனாலும் அவர்களுக்கு உண்டான எரிச்சலுக்கு அளவில்லை. ஆகவே அவர்கள் சினங்கொண்டு அவர்களை பிடித்து ஒருநாள்

வரையும் சிறையில் அடைத்தனர். மறுநாளில் அவர்கள் ஆலோசனை சங்கத்தைக் கூட்டி அப்போஸ்தலர்களை நடுவே நிறுத்தி நீங்கள் எந்த நாமத்தில் இவைகளை செய்கிறீர்கள் என்று கேட்டனர். அதற்கு அவர்கள் உங்களால் சிலுவையில் அறையப்பட்டவரும் தேவனால் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவருமாகிய நாசரேத்து இயேசுவானவரின் நாமத்தினாலே இவைகளை செய்கிறோம் என்றனர். அவர்கள் பேசுகிற தைரியத்தை கண்டு இனி இயேசுவின் நாமத்தைக் குறித்து எவ்வளவும் பேசவும் போதிக்கவும் கூடாதென்று கட்டளையிட்டு பயமுறுத்தி அனுப்பிவிட்டனர்.

ஆனால் அப்போஸ்தலர்கள் தாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் குறித்து பேசாமலிருக்க முடியுமா? அவர்கள் தேவனுக்கு செவி கொடுக்கிறதை பார்க்கிலும் அவர்களுக்கு செவிகொடுப்பதை இழிவாக கருதினர். அவர்கள் மீண்டும் தங்கள் ஆண்டவர் உயிர்த்தெழுந்தார் என்று பலமாக சாட்சி கொடுத்தனர். ஆசாரியரும் அவருடைய கூட்டத்தாரும் மறுபடியும் அவர்களை சிறையில் அடைத்தனர். ஆனால் அன்று இரவு அப்போஸ்தலர்கள் தேவதூதனால் விடுதலையாக்கப்பட்டு தேவாலயத்திற்கு சென்று மறுபடியும் போதித்தனர். மறுபடியும் அவர்கள் கலங்கி அப்போஸ்தலர்களை பிடித்து அலோசனை சங்கத்தில் நிறுத்தி அவர்களை மிரட்டினர். அப்போஸ்தலர்களோ அவர்களுக்கே மீண்டும் உயிர்த்தெழுதலைக் குறித்து போதிக்க ஆரம்பித்ததால் அவர்கள் இவர்களை கொலை செய்ய முயற்சித்தனர். இவைகளையறிந்த ஆலோசனை சங்கத்திலுள்ள நியாய சாஸ்திரியான கமாலியேல் என்பவன் ஆலோசனை சங்கத்தாரை நோக்கி இந்த மனுஷருக்கு ஒன்றும் செய்யாமல் விட்டுவிடுங்கள். இந்த யோசனையும் கிரியையும் மனுஷரால் உண்டாயிருந்ததானால் ஒழிந்து போகும். தேவனால் உண்டாயிருந்ததானால் அதை ஒழித்துவிட உங்களால் கூடாது. தேவனோடு போர் செய்கிறவர்களாய் காணப்படாதபடிக்கு பாருங்கள் என்றான்.

அப்பொழுது அவனுடைய ஆலோசனைக்கு அவர்கள் உட்பட்டு அப்போஸ்தலர்களை வரவழைத்து அடித்து இயேசுவின் நாமத்தைக் குறித்துப் பேசக்கூடாது என்று

கட்டளையிட்டு அவர்களை விடுதலையாக்கினார்கள். அவர்கள் தங்கள் ஆண்டவருடைய நாமத்திற்காக தாங்கள் அவமானம் அடைந்ததிற்கு பாத்திரராக எண்ணப்பட்ட படியால் சந்தோஷமாய் புறப்பட்டுப்போய் நாசரேத்து இயேசு உலக இரட்சகராக உயிர்த்தெழுந்தார் என்று இடைவிடாது அறிவித்தனர். பிரதான ஆசாரியனும் அவன் கூட்டத்தாரும் வெட்கத்துடன் தங்கள் தலையை முக்காடிட்டுக் கொண்டு வீதியில் நடமாடினர். (அப் 2,3,4,5அதி; மத் 28 ம் அதி)

**50.6.ஜனங்கள்:-** நமதாண்டவர் தம் ஆவியை பிதாவின் கைகளில் ஒப்புக்கொடுத்து மரணமடைந்த போது தேவாலயத்தின் திரைச்சீலை மேல் தொடங்கி கீழ்வரைக்கும் இரண்டாக கிழிந்தது. பூமியும் அதிர்ந்தது. கன்மலைகளும் பிளந்தது. அதோடு பூர்வகால கல்லறைகளும் திறந்தது. நமதாண்டவர் உயிர்த்தெழுந்த போது அந்த கல்லறைகளில் இருந்த அநேக பரிசுத்தவான்களின் சரீரங்களும் எழுந்திருந்தன.அவர்கள் கல்லறைகளை விட்டு புறப்பட்டு பரிசுத்த நகரத்தில் பிரவேசித்து அநேகருக்கு காணப்பட்டனர். உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்கள் இன்னாரென்று நமக்கு அறிவிக்கப்படவில்லை. அவர்கள் பரிசுத்த நகரத்தில் பவனிவர கர்த்தர் அனுமதித்தார் போலும்! இவர்களை கண்ட அநேகர் பிரமித்தார்கள். மறுரூபமலையில் இயேசுவானவரோடு தரிசனமானவர்களை இவர்தான் மோசே என்றும் இவர்தான் எலியா என்றும் சீஷர்கள் அடையாளம் கண்டுகொண்டது போல வீதியில் பவனி வந்த பூர்வீக பரிசுத்தவான்களை பக்தியுள்ள யூதர்கள் இன்னார் என்று அடையானம் கண்டு வாயடைத்துப் போயிருந்தனர். அவர்கள் மனம் பதைபதைத்து பேதலித்து போயிருந்தது. இந்நாளில் இயேசுவானவர் உயிர்த்தெழவில்லை என்ற போர்ச்சேவகரின் பொய்ப் பிரச்சாரம் தோல்வியடைந்தது. ஜனங்களின் கூர்மையான பார்வைக்கு முன்பாக அவர்கள் நிற்க நிலையில்லாமல் ஓடிவிட்டார்கள். இந்த பரிசுத்தவான்களின் பவனியினால் யூதஜனங்களுக்கு இயேசுவானவர் உயிர்த்தெழுந்தார் என்று அப்போஸ்தலர்கள் பிரசங்கித்த போது அவர்கள் உடனே மனந்திரும்பவும் இயேசுவானவரை தங்கள் கர்த்தராகவும் ஏற்றுக்கொள்ள காரணமாயிற்று. ஆகவே ஆயிரமாயிரம் யூதஜனங்கள் இயேசுவானவருக்கு விரோதமாக இருந்தார்கள்.

அவர்களெல்லோரும் பின்பு இயேசுவானவரின் பட்சமாக மாற்றப்பட்டார்கள். (மத்தே 27:52,53)

51.6.கேபா (பேதுரு):- எல்லா அப்போஸ்தலர்களுடைய போதனைகளும் நமக்கு கிடைக்கவில்லையாயினும் இரு அப்போஸ்தலர்கள் இயேசுவானவரின் உயிர்த்தெழுதலை அஸ்திபாரமாக வைத்து பிரசங்கித்த போதனைகள் நமக்கு கிடைத்திருக்கிறது. அவர்களில் கேபா என்ற பேதுருவும், பவுலும் ஆகும். இயேசுவானவர் உயிர்த்தெழுந்ததில் திபேரியா கடற்கரையில் வைத்து பேதுருவுக்கு அளித்த தரிசனத்தை மிகவும் விசேஷித்த விதமாக பவுல் கருதுகிறான். இரண்டாவது சின்ன யாக்கோபுக்கு எம்மாவுக்கு போகும்போது தரிசனமானதை குறிப்பிடுகிறான். பின்பு அநேகருக்கும் தனக்கும் தரிசனமானதை குறிப்பிடுகிறான். (1கொரி 15:1-8)

பேதுரு யூதர்களுக்கு பிரசங்கித்த போது ஜீவாதிபதியை கொலை செய்தீர்கள். தேவனே அவரை மரணத்திலிருந்து எழுப்பினார். அதற்கு நாங்களே சாட்சியென்று பலமுறை பிரசங்கித்தான். ஆயினும் எல்லா ஜனங்களுக்கும் பிரத்தியட்சம் ஆகும்படி செய்யாமல் அவர் மரித்தோரிலிருந்து எழுந்த பின்பு அவரோடு புசித்து குடித்தவர்களும் தேவனால் முன்பு நியமிக்கப்பட்ட சாட்சிகளுமாகிய எங்களுக்கு பிரத்தியட்சம் ஆகும் படி செய்தார் என்றான். திபேரியா கடற்கரையில் வைத்து தன்நேச ஆண்டவருக்கு தம்மை ஒப்புவித்த சீமோன் பேதுரு இறுதிவரை தன் ஆண்டவருக்கும் அவர் உயிர்த்தெழுதலுக்கும் சாட்சியாக விளங்கினான். (அப்போ 2:30-33, -3:15,-10:40,41)

52.7.பவுல்:- பவுல் சவுலாக வாழ்ந்த போது மிகவும் மூர்க்க முள்ளவன். அவன் சீறினால் நச்சுப்பாம்பு, வெகுண்டு எழுந்தால் குட்டியைப் பறிகொடுத்த கரடிதான். அவன் கிறிஸ்துவின் அடியார்களை குதறிப்பீறும் ஓநாய். அவன் பென்யமீன் கோத்திரத்தான். எபிரேயரில் பிறந்த எபிரேயன் நியாயப் பிரமானத்தின்படி பரிசேயன். எட்டாம் நாளில் விருத்த சேதனம் பெற்றவன். கமாலியேலின் பாதத்திலிருந்து கற்றவன். இவ்வளவு மேன்மைகள் அவனுக்கு இருக்கிற போது நாசரேத்து இயேசுவை காரியத்திற்குதவாத யூதர்கள் தேவகுமாரன் என்று

சொன்னால் அதை எப்படி சகிப்பது? ஆகவே ஸ்தேவான் கொல்லப்படுவதற்கு சம்மதித்தான். எருசலேமில் வீடுகளில் புகுந்து ஸ்திரீகளையும் புருஷர்களையும் ஈவுஇரக்கமின்றி அடித்து அவர்களை காவலில் போடுவித்து சபையை பாழாக்கிக் கொண்டிருந்தான். குடிகாரன் வெறியனாவதை விட மதப்பற்றுள்ளவன் பத்துமடங்கு வெறியனாக இருப்பான் என்பதற்கு இந்த சவுல் ஒருவனே போதும்! இதோடு நின்று விடாமல்,

தமஸ்கு பட்டணத்திற்கும் சென்று அங்குள்ள கிறிஸ்துவின் அடியார்களையும் பிடித்து அடித்து கட்டி இழுத்துவர பிரதான ஆசாரியரிடத்திற்கு போய் போதிய அதிகாரத்தையும் அதன் பத்திரத்தையும் பெற்றுக்கொண்டான். அவன் தமஸ்குவிற்கு நெருங்கும்போது பகல் ஜெபவேளை நெருங்கிவிட்டதால் வீதிகளில் நின்று ஜெபிக்கும் பரிசேய வகுப்பை சேர்ந்த சவுலும், வழியில் நின்று துணிகரமாக தன் கண்களை வானத்திற்கு ஏறெடுத்து "தேவனே நீர் அல்லவா பரலோகத்தின்தேவன் அப்படியிருக்க இந்த நாசரேத்து இயேசுவும் இந்த நாசரேத்து சமயத்தாரும் எம்மாத்திரம்! தேவனே நீர் அனுமதித்தால் கண் இமைக்கும் நேரத்தில் அவர்களை பிடித்து சின்ன பின்னமாக்குவேன் தேவனே நான் உமது அடியான் என்பதை நினைத்தருளும் ஆமென்" என்றான்.

என்ன ஆச்சரியம்! தெறகத்தி வெள்ளம் திரும்பிக் கொண்டு பாய்வது போல வானத்திருந்து சூரியஒளியை விட அதிகமான பிரகாசம் அவன்மீதும் அவன் கூட்டாளிகள் மீதும் விழுந்தது. அவன் ஜெபத்திற்கு பதில் கிடைத்த பாவனையாக இருந்தது. அவன் நடுங்கித் திகைத்து தரையிலே விழுந்தான். உயிர்த்தெழுந்த கர்த்தர் ஒளியின் மையத்திலே அவனுக்கு தரிசனமாகி "சவுலே சவுலே நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்" என்றார். அதற்கு அவன் ஆண்டவரே நீர் யார் என்றான். அதற்கு கர்த்தர் நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே! முள்ளில் உதைக்கிறது உனக்கு கடினமாம் என்றார்.

ஸ்தேவானை அவர்கள் கல்லெறியப்போகும் போது அவன் வானத்தை அண்ணாந்து பார்த்து அதோ வானங்கள் திறந்திருக்கிறதையும் மனுஷ குமாரன் தேவனுடையவலது பாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன் என்றான். அந்த காட்சி ஸ்தேவானுக்கு மாத்திரமல்ல சவுலுக்கும் கிடைத்தது.

அப்பொழுது அவனை கல்லெறிந்தார்கள். அவன் சரீரம் இதோ பூமியலே சுருண்டு விழும்போது அவன் வானத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு பரதீசுவை அடைந்து மனுஷர் பேசப்படாததும் வாக்குக் கெட்டாதது மாகிய வார்த்தைகளை கேட்டான். அவன் சரீரத்திலே இருந்தானா அல்லது சரீரத்திற்கு புறம்பே இருந்தானா என்று யூகிக்க அவன் திடுக்கிட்டான். ஸ்தேவானுடைய சரீரம் இரத்த வெள்ளத்தில் சிதைந்து கிடந்தது. இந்த தரிசனம் அவன் நெஞ்சிலே முள்ளாக குத்தியது. ஆனால் அவன் கொண்ட மார்க்க வெறி அவன் மனசாட்சியை கொன்றது. அதன் விளைவுதான் இப்பொழுது முள்ளில் உதைக்கிறது உனக்கு கடினமாம் என்றார்.

பின்னும் கர்த்தர் அவனை நோக்கி இப்பொழுது நீ எழுந்து காலூன்றி நில் நீ கண்டவைகளையும் நான் உனக்கு தரிசனமாகிக் காண்பிக்கப் போகிறவைகளையும் குறித்து உன்னை ஊழியக்காரனாகவும் சாட்சியாகவும் ஏற்படுத்துகிறதிற்காக உனக்கு தரிசனமானேன். உன் சுய ஜனத்தாரிடத்தினின்றும் அந்நியஜனத்தாரிடத்தினின்றும் உன்னை விடுதலையாக்கி அவர்கள் என்னை பற்றும் விசுவாசத்தினாலே பாவமன்னிப்பையும் பரிசுத்தமாக்கப் பட்டவர்களுக்குரிய சுதந்தரத்தையும் பெற்றுக் கொள்ளும்படியாக அவர்கள் இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும் சாத்தானுடைய அதிகாரத்தை விட்டு தேவனிடத்திற்கும் திரும்பும்படிக்கு நீ அவர்களுடைய கண்களை திறக்கும் பொருட்டு இப்பொழுது உன்னை அவர்களிடத்திற்கு அனுப்புகிறேன் என்றார். சவுல் அதிர்ச்சியடைந்து அவரை உற்றுப்பார்க்க முயற்சித்ததால் தன் இருவிழிப்பார்வையையும் இழந்தான். இருப்பினும் ஆண்டவரே நான் என்னசெய்ய சித்தமாயிருக்கிறீர் என்றான். அதற்கு கர்த்தர் நீ எழுந்து பட்டணத்திற்குள்ளே போ, நீ செய்ய வேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார். தர்சு பட்டணத்தானாகிய சவுல் தமஸ்கு பட்டணத்து கிறிஸ்துவின் அடியார்களுக்கு விரோதமாக புறப்பட்டு கடைசியில் நாசரேத்து ஊர் இயேசு என்பவர் யார் என்று அவர்களிடமே படிக்க வேண்டிய சூழ்நிலைக்கு கர்த்தர் அவனை அனுப்பி வைத்தார்.

சவுல் உலகத்திற்கு குருடானானான். அவனுடைய ஆவிக்குரிய கண்களோ திறக்கப்பட்டிருந்தது.

இவைகளையறியாத அவனுடைய கூட்டாளிகள் அவனுக்கு கைலாகு கொடுத்து தமஸ்குவிற்கு அழைத்துச் சென்றனர். சவுல் தமஸ்கு வந்து சேர்ந்தபின்பு இயேசுவின் அடியானாகிய அனனியா என்பவன் சவுலிடம் வந்து நின்று சகோதரனாகிய சவுலே நீர் வந்த வழியில் உனக்கு தரிசனமான இயேசுவாகிய கர்த்தர் நீர் பார்வையடையும் படிக்கும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படும் படிக்கும் என்னை அனுப்பினார் என்று அவன் மீது தன் கைகளை வைத்தான். உடனே அவன் கண்களிலிருந்து மீன் செதில்கள் போன்றவை விழுந்தன. அவன் பார்வையடைந்து எழுந்து நின்றான்.

அப்பொழுது அனனியா சவுலை நோக்கி நம்முடைய முன்னோர்களின் தேவனுடைய திருவுள்ளத்தை நீ அறியவும் நீதிபரரைத் தரிசிக்கவும் அவருடைய திருவாய் மொழிகளை கேட்கவும் அவர் உன்னை முன்னமே தெரிந்து கொண்டார். நீ கண்டவைகளையும் கேட்டவைகளையும் குறித்து சகல மனுஷருக்கு முன்பாக அவருக்கு சாட்சியாக இருப்பாய் என்றான். பின்பு சவுல் ஞானஸ்நானம் பெற்று சிறியவன்என்று அர்த்தம் கொள்ளும் பவுல் என்ற நாமதேயத்தை தனக்கு சூட்டிக்கொண்டு தாமதமில்லாமல் நாசரேத்து இயேசு உயிர்த்தெழுந்ததினாலே தேவகுமாரன் என்று பலமாக ரூபகாரப்படுத்தப்பட்டார் என்று தன்னுடைய சுவிசேஷத்தை உயிர்த்தெழுதலின் சுவிசேஷமாக பிரசங்கித்தான்.

பவுல் தீமோத்தேயுவுக்கு கூறும் போது தாவீதின் சந்ததியில் பிறந்த இயேசு கிறிஸ்து என் சுவிசேஷத்தின் படியே மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவர் என்று நினைத்துக்கொள். இந்த சுவிசேஷத்தின் நிமித்தம் நான் பாதகன் போல கட்டப்பட்டு துன்பத்தை அனுபவிக்கிறேன் என்று புலம்பினான்.

இவ்விதமாக தமஸ்கு வழியில் கர்த்தரால் பிடிக்கப்பட்ட சவுல் எருசலேமில் வைத்து பொல்லாத துஷ்ட யூதர்களால் பிடிக்கப்பட்டான். அவன் ஆவி கர்த்தருக்கு ஊழியம் செய்யவும் அவனுடைய சரீரம் சங்கிலியால் கட்டி இழுத்தடிக்கப்படவும் ஒப்புக்கொடுக்கப்பட்டது. அவன் அகிரிப்பா ராஜாவுக்கு முன்பாக நிறுத்தப்பட்ட போது அகிரிப்பா ராஜாவே நான் அந்த பரம தரிசனத்திற்கு கீழ்படியாதவனாக இருக்கவில்லை. எனவே தீர்க்கதரிசிகளும் மோசேயும்

முன்னமே சொல்லியிருந்தபடியே கிறிஸ்து பாடுபடவேண்டியதென்றும் மரித்தோர் உயிர்த்தெழுதலில் அவர் முதல்வராகி சுயஜனங்களுக்கும் அந்நிய ஜனங்களுக்கும் ஒளியை வெளிப்படுத்துகிறவர் என்று சொல்கிறேனேயன்றி வேறோன்றையும் நான் சொல்கிறதில்லை. மேலும் நான் ஆலோசனை சங்கத்தில் நின்றபோது மரித்தோர் உயிர்த்தெழுந்திருப்பதைக் குறித்து இன்று உங்களால் நியாயந் தீர்க்கப்படுகிறேனென்று நான் சொன்ன ஒரு சொல்லின் நிமித்தமேயன்றி வேறொன்றினிமித்தம் குற்றம் காணப்படவில்லை என்றான்.

இவ்விதமாக தமஸ்கு வழியில் ஒப்புக்கொடுத்த தன் நல்ல ஆண்டவருக்கு உகந்த வேலைக்காரனாக ஊருக்கு ஊர் துஷ்ட மிருகங்களோடு போராடி பல சபைகளை ஸ்தாபித்தான். இத்தோடு நின்று விடவில்லை எனக்கு லாபமாயிருந்தவைகள் எவைகளோ அவைகள் கிறிஸ்துவிற்காக நஷ்டமென்று எண்ணினேன். அதுமாத்திரமல்ல என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக் கொண்டிருக்கிறேன். நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு நியாயப் பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாய் இராமல் கிறிஸ்துவை பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாசம் மூலமாய் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படிக்கு இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும் அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும் அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி எப்படியாயினும் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்கு தகுதியாகும் படிக்கும் அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன். குப்பையுமாக எண்ணுகிறேன். நான் அடைந்தாயிற்று அல்லது முற்றிலும் தேறினவனானேன் என்று எண்ணாமல் கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காக பிடிக்கப்பட்டேனோ அதை பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய் தொடருகிறேன். சகோதரரே நான் அதை பிடித்துக்கொண்டேன் என்று எண்ணுகிறதில்லை. ஒன்று செய்கிறேன் பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடி,

கிறிஸ்து இயேசுவிற்குள் தேவன் அழைத்தப் பந்தயப் பொருளுக்காக இலக்கைநோக்கி தொடருகிறேன் என்றான்.

கர்த்தருக்குள் அவன் தன்னை தாழ்த்தின போது அவன் உருவாக்கின சபைகளிலே உள்ள தன் உடன் ஊழியர்களாலும் விசுவாசிகளாலும் பயித்தியக்காரனாகவும் பலவீனனாகவும் கனவீனனாகவும் தூஷிக்கப்பட்டு உலகத்தின் குப்பைகளைப் போலவும் துடைத்துப் போடுகிற அலுக்கை போலவும் எண்ணப்பட்டான். இதனிமித்தம் பசியோடும் தாகத்தோடும் நிர்வாணியாயும் குட்டுண்டவனாகவும் தங்க இடமில்லாதவனாகவும் தன் சொந்த கைகளினால் வேலை செய்து அரைகுறையாக புசித்து குடித்து பாடுபட்டு துன்பத்தை சகித்தான்.

மேலும் துஷ்ட யூதர்களால் ஒன்றுகுறைய நாற்பதடியாக ஐந்துதரம் அடிபட்டான். மூன்றுதரம் மிலாறுகளால் அடிபட்டான். ஒருதரம் கல்லெறியுண்டான். மூன்றுதரம் கப்பற்சேதத்தில் இருந்தான். கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும்போக்கினான். அநேகந்தரம் ஆறுகளால் வந்த மோசங்களிலும் கள்ளரால் வந்த மோசங்களிலும் சுய ஜனங்களினாலும் வந்த மோசங்களிலும் பட்டணங்களிலும் வனாந்தரங்களிலும் வந்த மோசங்களிலும் கள்ள சகோதரரால் வந்த மோசங்களிலும் பிரயாசத்திலும் வருத்தத்திலும் அநேக முறை கண்விழிப்புகளிலும் பசியிலும் தாகத்திலும் கட்டுகளிலும் காவலிலும் உபவாசத்திலும் குளிரிலும் நிர்வாணத்திலும் செத்து செத்து பிழைத்து தன் உயிர்த்தெழுந்த ஆண்டவரின் உண்மையுள்ள சாட்சியாக இருந்தான்.

இறுதியாக நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட்டு போகிறேன். நான் தேகத்தை விட்டு பிரியும் காலம் வந்தது நல்ல போராட்டத்தை போராடினேன். ஓட்டத்தை முடித்தேன் விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன். இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருள்வார். எனக்கு மாத்திரமல்ல அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருள்வார் என்றான்.

அந்நாட்களில் ரோமாபுரியில் ஏற்பட்ட தீவிபத்தில் கிறிஸ்துவின் அடியார்களே காரணம் என்று துன்புறுத்தப்பட்டனர். யூதர்களையோ சர்வ நாசம் செய்தனர். கிறிஸ்துவின் அடியார்களின் தொண்டனாகிய பவுல் என்ற கிழவனை பிடித்துக் கொண்டு சென்றனர். இராயனுடைய அரியாசனம் அவனுக்கு சிரச்சேதமுள்ள மரணதண்டனையை வழங்கியது. அந்த தள்ளாத வயோதிகனை ஊருக்குப் புறம்பேயுள்ள கொலைக்களத்திற்கு இழுத்துச் கொண்டு சென்றனர். வீதிகளின் இருபுறமும் திரளான ஜனங்கள் நின்று யூதராஜசிங்கத்தின் கிழவேலைக்காரனைக் கண்டு பரியாசம் செய்தனர். இந்தக் கிழப்புலி இறுதியாக வெகுண்டெழுந்திருக்க வேண்டும்! கர்த்தராகிய இயேசுவின் ஜீவன் எங்கள் சரீரத்திலே விளங்கும்படிக்கு இயேசுவின் மரணத்தை எப்பொழுதும் எங்கள் சரீரத்திலே சுமந்து செல்கின்றோம். எப்படியெனில் சாவுக்கீனமான எங்கள் மாம்சத்திலே இயேசுவினுடையஜீவன் விளங்கும்படிக்கு உயிரோடிருக்கிற நாங்கள் எப்பொழுதும் இயேசுவினிமித்தம் மரணத்திற்கு ஒப்புக் கொடுக்கப் பட்டிருக்கிறோம். இப்படி மரணமானது எங்களிடத்திலும் ஜீவனானது உங்களிடத்திலும் பெலன் செய்கிறது என்று கொக்கரித்திருப்பான்! கொலைக்களம் வந்தவுடன் அழிவுள்ளதாகிய இது அழியாமையும் சாவுக்கேதுவாகிய இது சாவாமையும் தரித்துக் கொள்ள வேண்டும் என்று மரணமே என் கூர் எங்கே? பாதாளமே உன் ஜெயம் எங்கே என்று கொக்கரித்திருப்பான்!

உயிர்த்தெழுந்த தன்னுடைய நல்ல ஆண்டவர் இறுதிவரை தன்னுடைய விசுவாசத்தைக் காத்துக் கொள்ள கிருபையருளிய அவருடைய அருமையை எண்ணி, அவருடைய பாதமலரை முத்தி செய்யும்படி இதோ இந்த கிழப்புலி தன்னுடைய சிரத்தை தாழ்த்தினான். அப்பொழுது இராயனுடைய கொடுமையான பட்டயம் அவன் சிரத்தை துண்டித்து ஆத்மாவை அடைத்த கூட்டின் பூட்டைத் தட்டி விடுதலையாக்கிற்று. அந்த கிழப்புலி மகிழ்ச்சியின் வாகனமேறி தன்னுடைய சுதந்தர வீதத்தின் நீதியின் கீரீடத்திற்காக தன் ஆண்டவரின் பாதத்தில் காத்துக் கொண்டிருக்கிறான் என்பது பாரம்பரிய வாக்கு. (அப்போ 9,22,26. அதி)

# ⑩ உயிர்த்தெழுதலின் காரணங்கள்

53.1.முதற்பலன்:- பவுல் அப்போஸ்தலனுடைய சுவிசேஷம் மிகவும் அருமையானது. மனுஷனால் மரணம் உண்டான படியால் மனுஷனால் உயிர்த்தெழுதலும் உண்டாக வேண்டும் என்பது அவனுடைய வாதம். அதற்கு ஆதாரம் இல்லாமல் இல்லை. இஸ்ரவேலர்களின் ஞானப்பண்டிகையில் வெள்ளாமை அறுவடை செய்யும் போது முதற்பலனாக சில அரிகளை அறுத்து தேவசமூகத்தில் கொண்டுவந்து உயிர்த்தெழுந்த சாயலை பிரதிபளிக்க அசைவாட்டுகின்றனர். இதேபோல் கிறிஸ்துவும் மரித்தோரிலிருந்தெழுந்து நித்திரையடைந்தவர்களின் முதற்பலனானார் என்றான். எனவே ஆதாமிற்குள் எல்லாம் மரிக்கிறது போல கிறிஸ்துவிற்குள் எல்லோரும் உயிர்ப்பிக்கப் படுவார்கள். அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்க படுவான். முதற்பலனானவர் கிறிஸ்து பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப் படுவார்கள்.

அந்தப்படியே முந்தின மனுஷனாகிய ஆதாம் ஜீவாத்து மாவானான் என்றெழுதியிருக்கிறது. பிந்தின ஆதாம் உயிப்பிக்கிற ஆவியானார். ஆகிலும் ஆவிக்குரிய சரீரம் முந்தினதல்ல ஜென்ம சரீரமே முந்தினது. ஆவிக்குரிய சரீரம் பிந்தினது. முந்தின மனுஷன் பூமியிலிருந்துண்டான மண்ணானவன். இரண்டாம் மனுஷன் வானத்திலிருந்து வந்த கர்த்தர். மண்ணானவன் எப்படிப்பட்டவனோ மண்ணானவர்களும் அப்படிப்பட்டவர்களே. வானத்திற்குரியவர் எப்படிப் பட்டவர்களோ வானத்திற்கு உரியவர்களும் அப்படிப்பட்டவர்களே. மேலும் மண்ணானவனினுடைய சாயலை நாம் அணிந்திருக்கிறது போல வானவருடைய சாயலையும் அணிந்து கொள்வோம். எனவே அழிவுள்ளதாகிய இது அழியாமையையும் சாவுக்கேதுவாகிய இது சாவாமையும் தரித்துக் கொள்ளும் போது மரணம் ஜெயமா விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும் என்றான்.

மேலும் உயிர்த்தெழுதலின் மகிமையை குறிப்பிடும் பொழுது ஒரு விதை செத்து புத்துயிர்பெற்று மறுமேனி பெறுவது போல மரித்தோரின் உயிர்த்தெழுதலும் இருக்கும்

அழிவுள்ளதாய் விதைக்கப்படும், அழிவில்லாததாய் எழுந்திருக்கும் பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும் பலமுள்ளதாய் எழுந்திருக்கும். கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும் மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும் ஜென்ம சரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும் என்றான்.

மேலும் மறுரூப சரீரத்தின் மகிமையைக் குறிப்பிடும் போது எல்லா மாம்சமும் ஒரே விதமான மாம்சமல்ல, மனுஷருடைய மாம்சம் வேறே, மிருகங்களுடைய மாம்சம் வேறே. மச்சங்களுடைய மாம்சம் வேறே பறவைகளுடைய மாம்சம் வேறே. வானத்திற்குரிய மேனிகளுமுண்டு பூமிக்குரிய மேனிகளுமுண்டு, வானத்திற்குரிய மேனிகளுடைய மகிமையும் வேறே பூமிக்குரிய மகிமையும் வேறே என்றான். மேலும் மரித்தோர் உயிர்த்தெழுந்திருக்கும் போது ஒவ்வொருவரின் மகிமைக்கும் வித்தியாசம் இருக்கும் என்பதை பற்றி குறிப்பிடும்போழுது சூரியனுடைய மகிமையும் வேறே, சந்திரனுடைய மகிமையும் வேறே நட்சத்திரத்திற்கு நட்சத்திரம் விசேஷித்திருக்கிறது என்றான்.

இயேசுவானவருடைய உயிர்த்தெழுதலையும் அதனால் நாம் அடையப்போகிற உயிர்த்தெழுதலையும் இவ்வளவு அருமையாக வேறுயாரும் விளங்கச் சொன்னதில்லை. ஆயினும் அவனுடைய காலத்திற்குள்ளே சபைகளுக்குள் உயிர்த்தெழுதல் இல்லை என்ற துர்போதனை பிரவேசித்தது. அதுவும் கொரிந்து சபையிலே! இவர்களை கலக்கியவன் யார் என்று தெரியவில்லை. அவன் தரிப்புண்டு போயிருந்தால் எத்தனை நலமாக இருந்திருக்கும்! வெகுண்டு எழுந்த அப்போஸ்தலன் கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்தார் என்று பிரசங்கிக்கப் பட்டிருக்க, மரித்தோர் உயிர்த்தெழுதல் இல்லை என்று உங்களில் சிலர் எப்படி சொல்லாம்?

முதலாவது : மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால் கிறிஸ்து எழுந்திருக்கவில்லையே! இரண்டாவது : கிறிஸ்து எழுந்திருக்கவில்லையென்றால் எங்கள் பிரசங்கமும் விருதா, மூன்றாவது : உங்கள் விசுவாசம் விருதா, நான்காவது : கிறிஸ்து எழுந்திருக்காவிட்டால் நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களிலே இருப்பீர்கள். ஐந்தாவது : கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்திருப்பவர்களும் கெட்டிருப்பார்களே?

ஆறாவது : இம்மைக்காக நாம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கையுள்ளவர்களாக இருந்தால் எல்லா மனுஷரை பார்க்கிலும் பரிதபிக்கப் படத்தக்கவர்களாக இருப்போம். ஏழாவது : மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால் தேவன் எழுப்பாத கிறிஸ்துவை தேவன் எழுப்பினார் என்று நாங்கள் அவரை குறித்து சாட்சி சொன்னதினாலே தேவனுக்காக பொய் சாட்சி சொல்லுகிறவர்களாக காணப்படுவோமே என்று அங்கலாய்த்தான். அஸ்திபாரத்தை இடித்து தகர்த்து விட்டு வீடுகட்டுகிறவன் யார்? கிறிஸ்து உயிர்த்தெழாவிட்டால் எதற்கு இந்த பாடுகள்? நாங்கள் ஏன் எந்நேரமும் நாசமோசத்திற்கு ஏதுவாக இருக்கிறோம்? நான் அனுதினமும் சாகிறேன். அதை நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவினால் உங்களைக் குறித்து நான் பாராட்டுகிற மேன்மையை கொண்டு சத்தியமாய் சொல்கிறேன். நான் எபேசுவிலே துஷ்ட மிருகங்களோடு போராடினேன் என்று மனுஷர் வழக்கமாய்ச் சொல்லுகிறேன். அப்படிப் போராடினாலே எனக்குப் பிரயோசனம் என்ன? மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால் புசிப்போம், குடிப்போம், நாளைக்குச் சாவோம் என்று சொல்லலாமே? என்று புலம்பினான். எனவே அப்போஸ்தலனுடைய முடிவு இதுதான்; மோசம் போகாதிருங்கள் ஆகாத சம்பாசனைகள் நல்லொழுக்கங்களை கெடுக்கும் (1 கொரி 15ம் அதி)

54.2. ஆண்டவர்:- இயேசுவானவர் உயிர்த்தெழுந்ததினால் என்றைக்கோ நாம் உயிர்த்தெழுந்திருக்க போகிறோம் என்பது மட்டுமல்ல அப்போஸ்தலனுடைய நம்பிக்கை, இப்போழுதே அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமை நமக்குள்ளே கிரியை செய்கிறது என்று அறிந்திருந்தான். எனவே கிறிஸ்துவானவர் மரித்தோர் மேலும் ஜீவனுள்ளோர் மேலும் ஆண்டவராயிருக்கும் பொருட்டு, மரித்தும், எழுந்தும் பிழைத்து மிருக்கிறார். எனவே பிழைத்திருக்கிறவர்கள் இனி தங்களுக்கென்று பிழைத்திராமல் தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி அவர் எல்லோருக்கும் மரித்தார் என்று நிதானிக்கிறோம் என்றான். எனவே நமதாண்டவர் உயிர்த்தெழுந்ததினாலே தான் நமது இரட்சிப்பு நமக்கு பலிதப்பட்டது. நாம் அவருக்காக வாழ்க்கை நடத்த முடிகிறது. இல்லாவிடில் ஒரு வினாடி நமது கிறிஸ்தவ ஜீவியத்தை

சரியாக நடத்த முடியாது. நாம் இப்பொழுது பல காரியங்களில் தவறுகிறோம் என்பது உண்மையாகிலும் உயிர்த்தெழுந்த நமதாண்டவர் பிதாவிடம் நின்று நமக்காக பரிந்து பேசுகிறார். இதனிமித்தம் கிருபை நம்மை சூழ்ந்து கொள்கிறது. நாம் விழுந்தாலும் எழுந்திருக்கிறோம். நாம் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் மடிந்து போகிறதில்லை. நம் ஆண்டவர் உயிரோடிருக்கிற படியால் நாம் எவ்வளவு பாக்கியம் பெற்றவர்கள். (ரோம 14:9, II கொரி 5=15, ரோம 8=34)

**55.3.கோபாக்கினை :-** இஸ்ரவேல் மனத்திரும்புகிற தற்கேற்ற கனிகளை கொடுக்கவும், இந்த நீசஉலகத்திற்கு ஒரு முடிவு கட்டவும் உயிர்த்தெழுந்த கர்த்தர் தமது கோபாக்கினையை அனுப்பப்போகிறார். மகா உபத்திரவம் நிறைந்த அந்த கொடிய காலத்தில் அவரை ஏற்றுக்கொண்ட அவருடைய பிள்ளைகளை காப்பதற்காக அவர் உயிரோடெழுந்திருப்பது அவருக்குத் தகுதியாக இருந்தது. இக்காரியங்களுக்கு அடையாளமாக முன்னொரு சம்பவம் நிகழ்ந்திருக்கிறது அதாவது நோவாவின் காலத்தில் ஜலப் பிரளயத்தினாலே இந்த உலகத்தை தேவன் அழிக்க சித்தங்கொண்டபோது நோவாவையும் அவன் குடும்பத்தையும் காப்பதற்காக பேழை உண்டுபண்ணப்பட்டது. அந்த பேழை கிறிஸ்துவே! ஜலப்பிரளயத்தில் பேழையானது அலைக்களிக்கப்பட்டு ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டு கிறிஸ்துவின் மரணத்தின் சாயலாக அது ஜலத்தில் மூழ்கி அது உயிர்த்தெழுந்த பாவனையாக மிதந்து அரராத் மலையில் தங்கியது. இது போல இனியும் இந்த உலகம் ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்படும் பொழுது நாம் எடுத்துக்கொள்ளப்பட்டு நமதாண்டவரின் உயிர்த்தெழுதலினாலே காக்கப்படுவோம். ( I பேது 3:20,21,)

**56.4.சுதந்தரம்:-** இப்பொழுது கொஞ்சக் காலம் பாடுகளை அனுபவிக்கிற நாம் பாடுகளை நமது நடுவே பற்றியெரிகிற ஏதோ புதுமையான அக்கினியாக நினைத்து திகைத்துக் கலங்குகிறோம். நாம் ஆண்டவருடைய பாடுகளுக்கு பங்காளிகளானதால் மகிழ்ச்சியடைய வேண்டியதாயிருக்கிறது. ஏனெனில் நமதாண்டவர் மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்திற் கேதுவாக ஜீவனுள்ள நம்பிக்கை

உண்டாகும்படி தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெனிப்பித்தார். கடைசி காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக் கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற அந்த சுதந்தரம் நமக்காக பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. அதிக மேன்மையும் நிலை நிற்பதுமான சுதந்தரத்தை அடையப்போகும் நமக்கு அவைகளை அருளுவதற்காக நமதாண்டவர் உயிரோடிருக்கிறார் என்பதே மகிழ்ச்சிக்குக் காரணமாயிருக்கிறது.

**57.5.நியாயத்தீர்ப்பு:-** நமக்குரிய நித்திய சுதந்தரம் வருகிற வரைக்கும் இப்பொழுது இந்த உலகத்தில் உயிர்த்தெழுந்த நமது ஆண்டவருக்குச் சாட்சியாக வைக்கப்பட்டிருக்கிறோம். முற்காலத்தில் நாம் அவரை அறியாமலிருந்தோம். நமதாண்டவரையும் பிதாவையும் நாம் அறிந்து கொண்டதினால் அவரைப் பற்றி அறியாதவர்களுக்கு அவரை அறிவிக்க நாடுகிறோம். இதுவே சுவிசேஷ ஊழியமாகும். அப்போஸ்தலர்கள் அவைகளை குறித்து பிரசங்கிக்கையில் அறியாமையுள்ள காலங்களை தேவன் காணாதவர் போலிருந்தார். இப்பொழுதோ மனம்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷருக்கெல்லாம் கட்டளையிடுகிறார். மேலும் ஒருநாளைக் குறித்திருக்கிறார். அதிலே அவர்; தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு பூலோகத்தை நீதியாக நியாயந்தீர்ப்பார். அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதாலே அதன் நிச்சயத்தை எல்லோருக்கும் விளங்கப் பண்ணுகிறார் என்றான். எனவே இக்காலத்தில் கர்த்தரிடமாக மனந்திரும்பாதவர்களுக்கு நியாயத்தீர்ப்பை கொடுப்பதற்காக கர்த்தர் உயிரோடிருக்கிறார். உயிர்த்தெழுதலைப்பற்றி கேள்விப்பட்டவர்களில் சிலர் இகழ்ந்தார்கள். சிலர் நீ சொல்லுகிறதை இன்னொருமுறை கேட்போம் என்றார்கள். சிலர் அப்போஸ்தலனை பின்பற்றி கர்த்தரை அறிந்து மீட்கப்பட்டார்கள். அதுபோல இன்றும் நடக்கிறது. நிர்விசாரிகள் எக்காலத்திலும் நியாயத்தீர்ப்புக்காக நிற்கிறது போல, மீட்கப்படுகிறவர்களும் எக்காலத்திலும் இருப்பார்கள். (அப்போ 17 : 3, 30 - 34)

# 11 உயிர்த்தெழுதல்கள்

58.1.பழைய ஏற்பாட்டில் : - இந்த அதிகாரத்தில் பரிசுத்த வேதாகமத்தில் உள்ள எல்லா உயிர்த்தெழுதல் சம்பவங்களையும் கவனிக்கப்போகிறோம். விசுவாசத்தினாலே சாகக்கொடுத்த தங்களுடையவர்களை உயிரோடெழுந்திருக்க பெற்றார்கள். இந்த சம்பவம் எலியா தீர்க்கதரிசி சாரிபாத் ஊர் விதவையின் மகனை உயிரோடு எழுப்பியதையும் எலிசா தீர்க்கதரிசி சூனேமியாளின் பிள்ளையை உயிரோடெழுப்பியதுமாகும். இவைகளே வேதாகமத்தில் நடந்த முதலாவது உயிர்த்தெழுதல் சம்பவங்களாக இருக்கின்றன. ஆனால் வேறுசிலர் மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு விடுதலைபெற சம்மதியாமல் வாதிக்கப்பட்டனர். இது யோபுவை பற்றி சொல்லப்பட்டதாக அறிகிறோம். யோபுவின் காலத்திலே உயிர்த்தெழுதலின் நம்பிக்கை இருந்தது பற்றி நமக்குத் தெரிய வருகிறது. இரண்டாவது : ராஜாக்களின் நாட்களில் மோவாபியரின் தண்டுகள் இஸ்ரவேல் தேசத்திற்குள் புகுந்தது. அப்பொழுது இஸ்ரவேலர்கள் ஒருவனை அடக்கம்பண்ண கொண்டு வந்தபோது அந்த தண்டுகளைக் கண்டவுடன் அவனை எலிசாவின் கல்லறைக்குள் போட்டார்கள். அந்த மனுஷனின் பிரேதம் எலிசாவின் எலும்புகளின் மேல் பட்ட போது அந்த மனுஷன் உயிரடைந்து தன் கால்களை ஊன்றி எழுந்திருந்தான். இந்த மூன்று சம்பவங்களை தவிர வேறு ஒருவரும் உயிரோடு எழுந்ததாக பழைய ஏற்பாட்டில் நாம் காணுகிறதில்லை. (எபி 11:35, I ராஜா 17=17 - 24, -II ராஜா 4 : 32 - 37, - யோபு 19 = 25 - 27, II ராஜா 13 : 20,21)

59.2.இயேசுவானவர் உயிர்ப்பித்தது:- நமதாண்டவரின் நாட்களிலே ஒரு ஜெபஆலய தலைவனின் மகளாகிய மரணமடைந்த ஒருசிறுமியையும், நாயீன் ஊரைச் சேர்ந்த ஒரு விதவையின் மகனாகிய மரணமடைந்த ஒரு வாலிபனையும் பெத்தானியா ஊரின் சகோதரிகளாகிய மார்த்தாள், மரியாள் என்பவர்களின் சகோதரனாகிய லாசரு என்பவனையும் உயிரோடு எழுப்பினார். ஜெபஆலயத் தலைவனின் மகள் மரணமடைந்து சிறிது நேரத்திலும் விதவையின் மகன் மரணமடைந்து அநேக மணிநேரங்கள்

கடந்து அடக்கத்திற்கு போகும் போதும், லாசரு மரணமடைந்து நாலு தினங்கள் கழித்தும் ஆண்டவர் அவர்களை உயிரோடு எழுப்பினார். இச்சம்பவங்களைப் பற்றி பின்பு கவனிப்போம். (மாற் 5:38,39, லூக் 7:17, யோவா 11:39)

**60.3.இயேசுவானவர் உயிர்த்தெழுந்தது :-** இயேசுவானவர் சிலுவையில் அறையுண்டு ஏறக்குறைய ஆறுமணிநேரமேத் தொங்கினார். அச்சமயத்தில் அவர் கரங்களிலும் பாதங்களிலிருந்தும் இரத்தம் முழுவதும் வெளியேறிற்று, பின்பு அவர் உரத்த சத்தமாய் பிதாவைக் கூப்பிட்டு தமது ஆவியை ஒப்புவித்து மரணமடைந்தார். அவரை அடக்கம் பண்ணுவதற்காக அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு இயேசுவானவரின் சரீரத்தை தன்னிடம் ஒப்புவிக்க வேண்டும் என்று அவன் பிலாத்துவினிடத்தில் கேட்ட போது அவன் தன் போர் சேவகர்களுக்கு அவர் மரணமடைந்தது நிச்சயமா? என்று அறிந்தபின்பு சரீரத்தை கொடுக்க கட்டளையிட்டான். அதன்படி போர்ச்சேவகர்கள் இயேசுவானவரிடம் வந்து அவர் மரணமடைந்திருக்கிறதை கண்டனர். ஆகிலும் அவர்களில் ஒருவன் தன் ஈட்டியால் விலாவிலே குத்தினான். அப்பொழுது இரத்தமும் தண்ணீரும் குத்துண்ட இடத்திலிருந்து சிந்தியது. இவ்விதமாக அவர் மரணமடைந்ததை உறுதிப்படுத்திக் கொண்டு அவர்கள் அவரின் சரீரத்தை கொடுத்தனர். அவர் அடக்கம் முடிந்து மூன்றாம் நாள் அதிகாலையில் தான் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார். அவர் இவ்விதமாக உயிர்த்தெழுந்திருக்க வேண்டும் என்று தீர்க்கதரிசிகள் சொன்ன வார்த்தைகளையும் அதற்கு அடையாளமுமான சம்பவங்களையுமே இதுவரை நாம் பார்த்து வந்திருக்கிறோம்.

**61.4.இயேசுவானவர் கூட எழுந்தவர்கள்:-** இயேசுவானவர் மரணமடைந்து உயிர்த்தெழுந்திருக்கும் வரை இடைநாட்களில் நடந்த சம்பவங்கள் பற்றி பரிசுத்த ஆவியானவர் கூறும்போது அவர் பாதாளம் சென்று காவலிலுள்ள ஆவிகளுக்கு நீதியை பிரசங்கித்தார். அவர் பாவம்செய்த தூதர்களை தப்பவிடாமல் அந்தகார சங்கிலிகளினால் கட்டி நரகத்திலே தள்ளி நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக அவர்களை காவல் செய்து மரணத்திற்கும் பாதாளத்திற்கும் உடைய திறவுகோல்களை

உடையவராக வெற்றி சிறந்தவராக உயிர்த்தெழுந்திருக்கும் போது மரணத்தினால் சிறைப்பிடிக்கப்பட்ட தம்முடைய பழைய ஏற்பாட்டின் காலத்தின் தோழர்களையும் விடுதலையாக்கி கொண்டு வந்தார். இவர்களே அவரோடு உயிர்த்தெழுந்து வந்தவர்கள். இவர்களில் சிலரை எருசலேம் நகருக்கு சாட்சியாக கர்த்தர் அனுப்பிவைத்தார். இயேசுவானவர் உயிர்த்தெழுந்து தம்முடைய சீஷர்களுக்கு தரிசனமாகிக் கொண்டிருக்கும் போது இந்த பரிசுத்தவான்கள் நகருக்குச் சென்று பலருக்கு காட்சியளித்தனர். பின்பு ஆண்டவர் அவர்களை தம்மோடு கூட பரதீசுக்கு அழைத்துச் சென்றார். இவர்களைப் பற்றிய மீதியான விபரங்களை நாம் காலம் நிறைவேறும்போது அறிந்து கொள்வோம். (மத் 27:50-53, சங்கீ 68=18, எபேசி 4:8-9)

**62.5.அப்போஸ்தலர்கள் உயிரோடு எழுப்பினவர்கள்:-** நமதாண்டவர் மரித்தோர்களை அவசியமான நிலையில் உயிரோடெழுப்பக் கூடிய அதிகாரத்தை அப்போஸ்தலர்களுக்கு கொடுத்திருந்தார். அதன்படி யோப்பா பட்டணத்திலுள்ள தபீத்தாள் என்ற விதவையை பேதுரு உயிரோடெழுப்பினான். அதற்கு பின்பு துரோவாபட்டிணத்தில் உள்ள சபையில் பவுல் பிரசங்கித்துக் கொண்டிருந்த போது ஒருவன் தூக்க மயக்கமடைந்து மேல் வீட்டிலிருந்து கீழே விழுந்து மரணமடைந்த வாலிபனை பவுல் உயிரோடெழுப்பினான். இந்த இருசம்பவங்களையும் தவிர அப்போஸ்தலர்கள் வேறு யாரையும் உயிரோடு எழுப்பியதாக நமக்குத் தெரியவில்லை. (மத் 10 = 8, அப்போ 9 = 40, -20: 8-12.)

**63.6:- விசுவாசிகள் உயிரோடெழுந்திருத்தல் (அடக்கம் பண்ணப்பட்டவர்கள்):-** அப்போஸ்தலர்கள் காலம் தொடங்கி இன்றுவரை மெய்யன்பர்கள் தங்களுடைய நாட்களில் கர்த்தர் வருவார் என்று ஆவலோடு தங்கள் கண்களை வானத்திற்குப் பதித்திருந்தனர். அப்படி வருவாரேயானால் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் என்ற வார்த்தைகளுக்கே இடமில்லாமல் மறுரூபத்தில் கர்த்தரிடம் போக பேராவல் கொண்டனர். ஆனால் நீடிய பொறுமையுள்ள நம்முடைய நல்ல ஆண்டவர் வரத்தாமதம் ஆகிக்கொண்டே இருக்கிறது. அதற்காக நாம் பல காரணங்களைச் சொன்னாலும் எல்லாம் சரியே என்போம். இப்படியிருக்க நமதாண்டவர்

இவ்வுலகத்திற்கு மீண்டும் வருகிறதை இரு நிலமைகளில் கூறப்பட்டிருக்கிறது. ஒன்று அவருடைய இரகசிய வருகை மற்றொன்று அவருடைய வெளியரங்கமான வருகை. ஆக இரண்டு வருகையல்ல ஒரே வருகையில் இரண்டு நிலைமைகள். இவருடைய இரகசிய வருகை என்பது அவர் பரலோகத்தில் தேவனுடைய வலது பாரிசத்திலிருந்து புறப்பட்டு ஏதேன் என்ற தூதர்களுடைய வாசஸ்தலத்தில் சில வருசங்கள் தங்குகிறார். இச்சமயத்தில் அவருடைய இரத்தத்தினால் மீட்கப்பட்ட சபையார்கள் அவரை சந்திக்கும்படியாக உயிர்த்தெழுந்து அவரிடம் போய் சேர்வார்கள். பின்பு அவருடைய வெளியரங்கமான வருகை என்பது அவர் தமது பரிசுத்தவான்களோடு சேர்ந்து பூமிக்கு வருவதை எல்லாக் கோத்திரத்தாரும் காணுவார்கள். எனவே இவைகளில் அவருடைய இரகசிய வருகையில் நாம் உயிர்த்தெழுந்திருப்பதை குறித்து சற்று கவனிப்போம்.

முதலாவது : கர்த்தர் தாமே ஆரவாரத்தோடு வருவார். அப்பொழுதுப் பிரேதக்குழியில் இருக்கும் அவருடையவர்கள் மட்டும் அவருடைய சத்தம் கேட்டு முதலாவது எழுந்திருப்பார்கள். அவருடைய ஆரவாரம் அல்லது சத்தம் என்று கூறப்படுவது வீண் சத்தமல்ல அவர் பூமியில் இருக்கும் போது மரணமடைந்தவர்களை உயிரோடு எழுப்பினார். அப்பொழுது சிறு பெண்ணே எழுந்திரு, வாலிபனே எழுந்திரு, லாசருவே வெளியே வா என்று கூறியது போல மண்ணில் தங்கியிருக்கிற என்னுடையவர்களே விழித்து கெம்பீரித்து புறப்பட்டு வாருங்கள் என்று கூறுவார். அப்பொழுது அவருடையவர்கள் மண்ணில் மறைந்த சரீரத்தை மறுரூபமாக திரும்பத் தரித்துக் கொண்டு உயிர்த்தெழுந்து வானத்திற்கு எழுந்தருளிப் போவார்கள். இதற்காகவே பரிசுத்த ஆவியானவர் நம்மை இவ்விதமான மீட்பின் நாளுக்கென்று நாம் தேவனுக்குச் சொந்தமானவர்கள் என்று முத்திரை போட்டிருக்கிறார். இதற்கு நிழலாக இயேசுவானவர் மரணத்திற்கு போகும் முன்னதாக அவருடைய அடக்கத்தில் சரீரம் கெட்டுப்போகாதபடி நளதம் என்னும் விலையேற்றப் பெற்ற தைலத்தை மரியாள் பூசுகிறதை அறிகிறோம். இதனிமித்தமாக கர்த்தர் மரியாளை மிகைப்படுத்தி பேசுகிறதை அறிகிறோம். இதுபோலவே பரிசுத்த தைலமாகிய ஆவியானவர் நமது சரீரத்தை காத்து உயிரோடெழுப்புவார். நாம்

மரணமடைந்தவுடன் அடக்கம் பண்ணப்பட்டு சரீரம் மண்ணோடு அழிந்து போகிறதே என்று ஒருவேளை நீங்கள் கூறலாம். அதுவும் சரிதான். இதற்காக இன்னொரு நிழலான காரியத்தையும் நாம் கவனிப்போம். கிபியோனியருடைய காரியத்தில் தாவீது சவுலின் குமாரரில் ஏழுபேரை கர்த்தருக்கென்று மரத்தில் தூக்கி போடப்பட்ட போது சவுலின் மறுமனையாட்டியாகிய ரிஷ்பாள் என்பவள் அந்த சரீரங்களை ஆகாயத்துப் பறவைகளும் காட்டு மிருகங்களும் சேதப்படுத்தாத படிக்கு இரட்டு கொண்டு வந்து சரீரங்களுக்கு கீழே விரித்து அதனுடைய தசை, இரத்தம், நீர் இவைகள் சிதறி கீழே விழும்போது சேதமாகாத படிக்கு பாதுகாப்பது போல பரிசுத்த ஆவியானவர் இந்த அழிவுக்கு ஏதுவான சரீரத்தை பாதுகாத்து தமது மிகுந்த வல்லமையின்படியே உயிரோடெழுப்புவார். அப்பொழுது ஒரு விதை செத்து துளிர்ப்பது போல ஜென்ம சரீரம் மண்ணிலே கெட்டு ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும். அந்த சரீர அமைப்பானது இஸ்ரவேலர்கள் வனாந்திரத்திலே போட்ட கூடாரம் போல இராமல் கானானில் கட்டிய ஆலயத்தைப் போல நிலையானதாக இருக்கும். மேலும் வீட்டிலுள்ள கனவீனமான மண் மரம் பாத்திரத்தை போல இராமல் தேவாலயத்தின் பொற் பாத்திரங்களைப் போல கர்த்தருக்கு முன்பாக பரிசுத்தமானதாக இருக்கும். பின்னும் அது இரத்தமுள்ள சரீரமாயிராமல் ஜீவனுள்ள சரீரமாயிருக்கும். அப்பொழுது ஆதாமின் சாயல் மாறி கிறிஸ்துவின் சாயலில் அவருக்கு ஒப்பாக பிரதிபளிக்கும். (I தெச 4=16, மாற் 5=41, லூக் 7=4, யோவா 11=43, ஏசா 26=19-21, எபேசி 430, மாற் 14=8,9, II சாமு 21=9,10, ரோம 811, பிலிப் 3=20,21, I கொரி 15ம் அதி)

**64.7. அடக்கம்பண்ணப்படாதவர்கள்:-** இரண்டாவதாக நமதாண்டவர் பூமியிலிருக்கும் போது மரித்துப்போன ஒரு சிறுமியை வைத்து வீட்டில் சூழ நின்றவர்கள் புலம்பி அழுவதையும், ஒரு வாலிபன் அடக்கத்திற்காக கொண்டுபோகப்படுவதையும் கவனிக்கும் போது அப்பொழுது கர்த்தர் எதிர்கொண்டு வருகிறார். இதுபோல் இயேசுவானவர் திரும்பவும் வரும்போது பிரேதக்குழியிலிருந்த அவருடையவர்கள் அவரை சந்திக்க எதிர்கொண்டு போக உயிர்த்தெழுந்திருப்பார்கள். அப்பொழுது மரணமடைந்தவர்களும் உயிர்ப்பிக்கப்பட்டு அவர்களுடன்

புறப்படுவார்கள். இச்சமயத்தில் இவைகளை நேரில் பர்ப்பவர்களுக்கு மின்சாரத் தாக்குதலை போல சில குழப்பங்கள் ஏற்படினும் உணர்வடையார்கள். இவர்களில் பிரேதமாக இருப்பவர்களையும் உயிரோடிருப்பவர்களயும் பற்றி முன் அடையாளக் குறிப்பு ஒன்று காணப்படுகிறது. அதாவது யெரோபெயாமின் நாட்களில் அவனுக்கு விரோதமாக தீர்க்கதரிசனம் கூறின ஒரு தீர்க்கதரிசி கர்த்தருடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படியாததினால் வீதியில் ஒரு சிங்கம் எதிர்ப்பட்டு அவனைக் கொன்று போடுகிறது. பின்பு சிங்கமானது அவனுடைய பிரேதத்தைப் பட்சிக்காமலும் அவனுடைய உயிருள்ள கழுதையை அடித்துப்போடாமலும் அருகே நின்றுகொண்டிருக்கிற ஒரு வியப்பிற்குரிய நிகழ்ச்சியை பார்க்கிறோம்.

இதுபோல் மரித்த பரிசுத்தவான்களுடைய சரீரத்தை சிங்கத்திற்கு ஒப்பான பிசாசு சேதப்படுத்த அவனுக்கு எவ்வித அதிகாரமும் இல்லை. உயிருள்ள கழுதையோ இரட்சிக்கப்படாத மனுஷனுக்கு நிழலாக இருக்கிறது. இரட்சிக்கப்படாதவன் உயிரோடு இருந்தாலும் அதைப்பற்றி அவனுக்கு கவலையில்லை. ஆனால் சரீரத்தை எழுந்து போகக் கூடாதபடி தடைசெய்யக் கூடும். அதனாலேயே தானியேல் சிங்க கெபியில் தள்ளப்பட்ட போது அவனை பாதுகாக்க தூதர்கள் வரவேண்டியதாயிற்று. இதுபோல வானமண்டலத்திலுள்ள பொல்லாத ஆவிகள் பரிசுத்தவான்களின் மகிமையான சரீரத்தை கர்த்தரோடு சேர தடைசெய்யாதபடிக்கு கர்த்தராகிய இயேசுவோடு வரும் பிரதான தூதர்கள் பூமிக்கு வந்து மோசேயின் சரீரத்தை பாதுகாத்தது போல பாதுகாத்து வானத்திற்கு கொண்டு போவார்கள். இவ்விதமாக தேவனுடைய சபைக்குட்பட்ட விசுவாசிகள் யாவரும் உயிர்த்தெழுந்து என்றைக்கும் கர்த்தரோடிருப்பார்கள். (I ராஜா 13=24-28, தானி 6=22, யூதா =29, I தெச 4=14-17)

**65.8.மகா உபத்திரவத்தில் உயிர்த்தெழுதல்:-** இஸ்ரவேல் மனந்திரும்புவதற்காக அனுப்பப்படும் மகா உபத்திரவ காலம் : புறஜாதிகளுக்கும் ஏற்படும் இக்கட்டான காலமாகும். ஏனெனில் இந்த நீசஉலகத்திற்கு ஒரு முடிவு உண்டாகும்படி உலகம் முழுவதும் மகா உபத்திரவம்

நிறைந்ததாக இருக்கும். இக்காலத்தில் சபை இங்கு இருப்பதில்லை. இந்த கோபக்கினையினின்று கர்த்தர் தமது சபையைக் காத்து தம்மோடு சேர்த்துக் கொள்கிறார். பின்பு இஸ்ரவேலர்கள் கர்த்தராகிய இயேசுவை அறியும்படியும் மனம் திரும்பும்படியும் கர்த்தர் தமது இருசாட்சிகளாகிய தீர்க்கதரிசிகளை எழுப்புவார். அவர்கள் மோசேயைப் போலவும் எலியாவைப் போலவும் வல்லமையுடையவர்களாக இருந்து இஸ்ரவேலுக்கு இயேசுவானவரின் சுவிசேஷத்தை அறிவிப்பார்கள். இவர்களுடைய சுவிசேஷ ஊழியத்தினால் இஸ்ரவேலில் முத்திரை போடப்பட்ட ஒரு லட்சத்தி நாற்பத்தி நாலாயிரம் பேர் மீட்கப்படுவார்கள். மனந்திரும்பாத யூதர்கள் சாத்தானின் பட்சமாக நின்று இந்த இரு தீர்க்கதரிசிகளையும் கொன்று போடுவார்கள். அவர்களுடைய உடல்கள் எருசலேமினுடைய விசாலமான வீதிகளில் கிடக்கும். ஜனங்களிலும் கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும், ஜாதிகளிலுமுள்ளவர்கள் அவர்களுடைய உடல்களை மூன்றரை நாள் வரைக்கும் பார்ப்பார்கள். அவர்களுடைய உடல்களை கல்லறைகளில் வைக்க வொட்டார்கள். அவ்விரண்டு தீர்க்கதரிசிகளும் பூமியின் குடிகளுக்கு வேதனையாய் இருந்தபடியால் அவர்கள் நிமித்தம் பூமியில் குடியிருக்கிறவர்கள் சந்தோஷப்பட்டு களிகூர்ந்து ஒருவருக்கொருவர் வெகுமதிகளை அனுப்புவார்கள். மூன்றரை நாட்களுக்குபின் தேவனிடத்திலிருந்து ஜீவஆவி அவர்களுக்குள் பிரவேசித்து உயிர்த்தெழுந்து நிற்பார்கள். அப்பொழுது அவர்களை பார்த்தவர்களுக்கு மிகுந்த பயம் உண்டாகும். பின்பு இங்கே ஏறிவாருங்கள் என்று வானத்திலிருந்து தங்களுக்குண்டான பெரிய சத்தத்தைக் கேட்டு மேகத்தில் ஏறி அவர்கள் வானத்திற்கு போவார்கள். அவர்களுடைய சத்துருக்கள் அவைகளைக் கண்டு பிரமிப்படைவார்கள். ஆனாலும் உணர்வடையாது நித்திய அழிவிற்காக மகா உபத்திரவத்திற்குள் பிரவேசிப்பார்கள். (வெளி 11=1-4)

66.9.இஸ்ரவேலர்களின் உயிர்த்தெழுதல்:- இந்த மகா உபத்திரவ காலத்தில் மீட்கப்பட்ட ஒருலட்சத்து நாற்பத்திநாலாயிரம் பேர்கள் சகல நாடுகளுக்கும் சிதறடிக்கப்படுவார்கள். இவர்கள் இயேசுவானவருக்குச் சாட்சியாக இருந்து தங்களுடைய சுவிசேஷ ஊழியத்தை

நிறைவேற்றுவார்கள். இதன் பலனாக சகல தேசங்களிலும் உள்ள அநேக புறஜாதிகளும் மீட்கப்படுவார்கள். இவர்கள் யாவரும் இரத்த சாட்சிகளாகவே மரணம் அடைவார்கள். இவ்வுலகத்தை ஆக்கினைக்குள்ளாக கர்த்தர் தீர்த்து முடித்தபின்பு கர்த்தராகிய இயேசு பூமிக்கு வந்து மறுஜென்ம ஆளுகையை துவங்குவார். அப்பொழுது மகா உபத்திர காலத்தில் மரணமடைந்த அவருடையவர்கள் யாவரும் உயிர்த்தெழுந்து மறுஜென்ம ஆளுகைக்குள்ளே பிரவேசிப்பார்கள். அதுபற்றி

"மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிர வருசங்கள் முடியுமளவும் உயிரடைவில்லை. இதுவே முதலாம் உயிர்த்தெழுதல்"

"முதலாம் உயிர்த்தெழுதலுக்கு பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான். இவர்கள் மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை. இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து அவரோடு கூட ஆயிரம் வருசங்கள் ஆளுகை செய்வார்கள். (வெளி 20 = 5,6)

மேற்கூறிய வாக்கியங்களை மீண்டும் கவனியுங்கள். உயிர்த்தெழுதல் பற்றி இவ்வாக்கியம் அறிவிக்கும் போது முதலாம் உயிர்த்தெழுதல் என்று சொல்லப்பட்டிருக்கிறதினாலே இன்றைக்கு சுவிசேஷப் பிரசங்கம் செய்கிறவர்கள் இந்த உயிர்த்தெழுதலில் பங்குபெற்றவன்தான் பாக்கியவான் என்றும் அதிலே பங்குபெறாதவன் இரண்டாவது உயிர்த்தெழுதலிலே பங்கு பெற்று அக்கினிக் கடலுக்குள் போவான் என்றும் பிரசங்கிக்கிறார்கள். அவர்கள் பிரசங்கிக்கிறதற்கு தக்கவாறு அந்த வாக்கியமும் மயக்கமாயிருக்கிறது. ஆனால் மேற்கூறியபடி பிரசங்கிப்பது தவறு என்பதற்கு அந்த வாக்கியமே விசுவாசிகளுக்கு சம்பந்தப்பட்டதல்ல என்று அறியலாம். மகா உபத்திரவ காலத்தில் இரத்த சாட்சியாக மரணமடைந்தவர்கள் (முதலாவதாக) உயிர்த்தெழுந்திருப்பார்கள். (வெளி 20 = 4)

இரண்டாவது உயிர்த்தெழுதல் கிடையாது. ஏனெனில் இரண்டாவது மரணமாகிய அக்கினிகடல் தண்டனையாகும். (வெளி 20=14) சம்பவ வரிசைப்படி முதலாவது, இரண்டாவது என்று கூறப்பட்டிருக்கிறதே தவிர உயிர்த்தெழுதலிலே

அதுதான் முதலாவது என்றும் இரண்டாவது உயிர்த்தெழுதல் உண்டு என்று எண்ணுவதும், மரணத்தைக் குறித்து அக்கினிக்கடல் இரண்டாவது மரணம் என்றும் உபதேசிப்பதும் புதிய ஏற்பாட்டின் வசனங்களுக்கு முரண்பட்டதாகும்.எனவே முற்காலங்களிலிருந்து பல உயிர்த்தெழுதல்கள் நடந்து வந்திருக்கிற படியால் முதலாம் உயிர்த்தெழுதல் என்று சொல்லப்பட்ட சம்பவமே கடைசியான உயிர்த்தெழுதல் என்று அறியலாம். மேலும் இந்த உயிர்த்தெழுதல் சமயத்திலே பழைய, புதிய ஏற்பாட்டின் காலத்தில் உள்ளவர்களும் சபையிலே சம்பந்தபடாதவர்களுமான எல்லா இஸ்ரவேலர்களுக்கும் உயிர்த்தெழுதல் நடைபெறுகிறது. இவர்கள் இயேசுவானவர் பூமிக்கு வரும் போது அவருடைய சத்தத்தைக் கேட்டு உயிரோடெழுந்திருப்பார்கள். அந்நாளில் அநேகர் நீதிமான்களாக நித்திய ஜீவனுக்கும் அநேகர் நித்திய நிந்தைக்கும் எழுந்திருந்து வெள்ளாடு செம்மறியாடுகளைப் போல் பிரிக்கப்பட்டு போவார்கள். அப்பொழுதுதான் மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்ற வாக்கியம் நிறைவேறும். அதற்கு பின்பு மரணமில்லாத மறுஜென்ம வாழ்க்கை துவங்கும். மரணமே உன் கூர் எங்கே? பாதாளமே உன் ஜெயம் எங்கே? நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங் கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம். ஆமென்! (எசேக் 37=23-28, தானி 12=1,3,13, ஏசா 25=8, யோவா 5=28, I கொரி 15=53-57, லூக் 14=14.)



## 12 கட்டளைகள்

67.1.சுவிசேஷம்:- "நீங்கள் உலகமெங்கும் போய் சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" .(மாற் 16=15)

சுவிசேஷம் என்பது நற்செய்தி என்று மிகஎளிதாக சொல்லிவிடுகிறோம். நல்லது! எது நல்ல செய்தியென்றுதான் இதுவரை நமக்கு தெரியவில்லை. நாம் சுவிசேஷம் அறிவிப்பதில் இன்னும் தெளிவானவர்கள் இல்லை. நமது சுவிசேஷம் என்பது நமது ஆண்டவர்தான். அவரைப்பற்றி நாம் அறிவிப்பது இல்லை. அதற்கு பதிலாக அருவருப்பான பாவக்கிரியைகளை பகுத்துப் பிரித்து அறிவிக்கவும் தேவையற்ற வீண்கதையடிப்பதிலும் பிற மதங்களை தூஷிக்கவும் நாம் படித்திருக்கிறோம். இதன் விளைவாக நாம் நமது தேசத்தில் புறக்கணிக்கப்பட்டிருக்கிறோம். நமக்குண்டான பாடுகளுக்கு அளவில்லை. இவைகளையெல்லாம் கர்த்தருக்காக அனுபவித்ததாக நம்மை நாமே மெச்சிக் கொள்கிறோம். எவர்கள் நம்மிடத்தில் வந்து மீட்கப்பட வேண்டுமோ அவர்கள் நமக்கு விரோதிகளாக இருக்கிறார்கள். ஏன்?

"கிறிஸ்தவர்கள் மாட்டிறைச்சியை தின்று சாராயம் குடித்துவிட்டு தெருக்களில் வந்து பிற மதங்களை தூசிக்கிறார்கள்" (காந்திஜி - சத்திய சோதனை)

உயிர்த்தெழுந்த கர்த்தரை விட்டு நாம் விலகி இருக்கிறபடியால் அவரை அறிவிக்ககூடிய வல்லமை நம்மில் இல்லை. நாம் சபைகளுக்கும் ஜனங்களுக்கும் அதிக கேடுகள் உண்டாக்கிக் கொண்டிருக்கிறோம். நாம் அறிவோடும் ஞானத்தோடும், ஆவியோடும் பிரசங்கிக்கிறதாக நினைத்துக் கொள்கிறோம். ஆனால் ஜனங்களிடத்தில் மனந்திரும்புதல் இல்லை. கர்த்தரைப் பற்றும் அறிகிற அறிவு இல்லை. அப்போஸ்தலர்கள் பிரசங்கிக்கும் போது தேவனுடைய மகிமையான சுவிசேஷமென்றும் கிருபையின் சுவிசேஷமென்றும் ராஜ்யத்தின் சுவிசேஷமென்றும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷமென்றும் அறிவித்தார்கள். நமக்கு இவ்விதமான சுவிசேஷம் என்பது தெரியுமா? என்பது யோசிக்க வேண்டிய காரியமாகும்.

68.2.ஜாதிகள்:- "சகல ஜாதிகனையும் சீஷராக்குங்கள்..." (மத்தே 28=19)

கர்த்தருடைய மீட்பின் திட்டத்திற்குள் சகல கோத்திரத்தாரரும் பாஷைக்காரரும், ஜனங்களும், ஜாதிகளும் அடங்குவர். பலஜாதிகளிலிருந்து மீட்கப்பட்டவர்கள் வரும் போது ஓரே ஆவியானால் பரிசுத்தமாக்கப் பட்டிருக்கிறோம் என்பதை மறந்து போகக் கூடாது. ஆனால் இன்றைய தினம் கிறிஸ்து மதத்தில் பறகிறிஸ்தவன், சங்கிலிகிறிஸ்தவன், வேளாளகிறிஸ்தவன், உடையார் கிறிஸ்தவன், நாயுடு கிறிஸ்தவன், நாடார் கிறிஸ்தவன், பார்ப்பன கிறிஸ்தவன் என்கிற பாகுபாடுகளும் குடியிருப்பு வசதி வித்தியாசங்களும், சர்ச்சு முதலிய பிரார்த்தனை இடங்கள் வித்தியாசமும் காணப்படுவதைப் பார்த்தால் நன்றாய் தெரியவரும். (பெரியார் களஞ்சியம் பக் 186)

இவைகளை எண்ணுகிறதிற்கே வெட்கமாய் இருக்கிறது. உயிர்த்தெழுந்த கர்த்தர் மறுபடியும் சிலுவைக்கு போக வேண்டுமோ என்று எண்ணத் தோன்றுகிறது. மீட்கப்படாதவன் கூட சேர்ந்திருப்பதே நமக்கு அருவருப்பு மீட்கப்பட்டவர்கள் யாராயினும் ஒரேகுடும்பத்தின் ஐக்கியத்தைப் போல சேர்ந்திருந்து மகிமைப் படுத்துவோமாக! சுவிசேஷ ஊழியத்திலும் இக்கவனம் இருப்பது நல்லது!

69.3.பாவமன்னிப்பு:- ...."மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் பிரசங்கிக்கப்பட வேண்டியது" (லூக் 24:47) பாவமன்னிப்பைப் பற்றி பரியாசமாக எண்ணப்படும் இந்நாட்களில் பாவத்தைப்பற்றியும் அருவருப்புகளைப் பற்றியும் ஒவ்வொன்றாக விவரிப்பது சுவிசேஷமல்ல. பாவத்தினிமித்தம் சின்னபின்னமாக்கப்பட்ட நமதாண்டவரின் மரணத்தின் பேரிலே மன்னிப்பு என்பதை விவரிப்போமாக! பாவம் என்றால் என்ன என்று எல்லா ஜனங்களுக்கும் தெரியும். அப்படியிருக்கும்போது நாமும் அதன் அருவருப்புகளைக் கூறி பாவமறியா பிஞ்சு உள்ளங்களை கெடுக்காதிருப்போமாக.

70.4.விசுவாசமும், இரட்சிப்பும்:- "விசுவாசம் உள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்"...... (மாற் 16:16) இரட்சிப்பு என்ற பாதுகாப்பை அறிவிப்பதே விசுவாசத்திற்குள் நடத்த நல்ல

வழியாகும். நமதாண்டவர் உயிரோடிருக்கிறபடியால் நமது ஆத்மா நரக தண்டனையிலிருந்து இரட்சிக்கப்பட்டது. நமது ஜீவியமோ பொல்லாத எல்லாக் காரியங்களிலிருந்தும் இரட்சிக்கப்படுகிறது. நமது சரீரமோ மறுமையின் வாழ்க்கைக்காக இரட்சிக்கப்பட போகிறது. இவைகளை நாம் விவரித்து அறிவித்தால் ஜனங்களுக்கு மனந்திரும்புதலும், விசுவாசமும், மீட்பும் உண்டாகும் என்பதில் சந்தேகமே இல்லை. இவ்விதமாக செய்ய வேண்டும் என்ற கட்டளையை கவனித்துச் செய்ய விழிப்பாயிருப்போமாக!

71.5.தேவராஜ்யம்:- "ராஜ்யத்தினுடைய இந்த சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப் படும்" (மத் 24=14)

"தேவனுடைய ராஜ்யத்திற்குரியவைகளை அவர்களுடனே பேசி, அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்கு தம்மை உயிரோடிருக்கிறவராக காண்பித்தார்". (அப்போ 1=3)

இப்போது நடைபெறுகின்ற சுவிசேஷ ஊழியத்தின் நோக்கம் தேவராஜ்யத்திற்கான குடிமக்களைச் சேர்ப்பதாகும். சுவிசேஷ ஊழியம் செய்யக் கூடிய நாம் தேவராஜ்யங்களின் திட்டங்களை தெளிவாக அறிந்தவர்களாக நமது மகிமையின் இராஜாவை சுவிசேஷமாக அறிவிக்க வேண்டும். மறுமையில் கர்த்தர் மகிமையின் ராஜ்யத்தை ஸ்தாபிக்கும் போது நாம் தகுந்த பலனை பெறுவோம்.

72.6.சபை:- "சீஷராக்கி ஞானஸ்நானம் கொடுத்து... உபதேசம் பண்ணுங்கள்" (மத் 28=19,20) வரப்போகும் தேவராஜ்யத்தின் முன்மாதிரிதான் சபை. சபை என்பது ஒரு ஆவிக்குரிய ராஜ்யம். இதற்குள் பிரவேசிக்கிற மக்கள் தகுதியானவர்களாக இருக்க வேண்டும் என்று தான் நமதாண்டவர் ஊழிய ஒழுங்கை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார். அதாவது முதலாவது சீஷராக்குதல், இயேசுவானவரை அறிந்து விசுவாசத்தில் மீட்கப்பட்டவர்கள் சீஷர்களாக மாற்றப்படுகிறார்கள். இவர்களே இரட்சிக்கப் பட்டவர்கள். இவ்வித நிலமைகளில் வந்தவர்களுக்கு அடுத்தபடியாக ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும். தற்கால கிறிஸ்தவத்தில் ஞானஸ்நானம் முதற்படியாக இருக்கிறது.

அவர்களுக்கு மீட்பு என்றால் என்ன என்று தெரிவதில்லை. ஏதோ உலக நன்மைக்காக பக்கவழியில் நுழைந்தவர்கள் மனிதருடைய புகழ்ச்சிக்காகவும் தகுதியற்ற சகாயத்திற்காகவும் ஊழியம் செய்பவர்கள் ஞானஸ்நானம் பெற்றோர் எண்ணிக்கையை காட்டும்படி பலவித தவறுகளை அறிந்தே செய்கின்றார்கள். இவ்விதமாக கர்த்தருடைய கட்டளையை மாற்றத்துணிவது தன்னுடைய கழுத்துக்கு தானே சுருக்குக் கயிறு மாட்டுவது போலாகும். எனவே மீட்கப்பட்டவர்களுக்கே ஞானஸ்நானம் கொடுக்கவேண்டும். மூன்றாவது : அவர்களை சபையாகக் கூட்டி கர்த்தரின் கட்டளையை உபதேசிக்க வேண்டும். இது மிகப்பெரிய உத்திரவாதமான வேலையாகும். இக்காலத்தில் அநேகர் நியாயப்பிரமான போதகர்களாக இருக்க விரும்புகிறார்கள். நல்லது! ஆனால் என் சகோதரரே அதிக ஆக்கினையை அடைவோம் என்று அறிந்து உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக! (யாக் 3=1)

அப்படியானால் சபையின் வேலைகளை எப்படி உத்திரவாதமாக செய்ய முடியும்? நமக்கு முன்பே உள்ள ஒரு ஊழியரின் அறிக்கையை இங்கே கவனிப்பது நல்லது!

**73.தேவஊழியரான நமக்கொரு வார்த்தை:-** சபையாரை குறைகூறி நாம் தப்பித்துக் கொள்ள முடியாது.... நாம் நிற்கும் ஸ்தானம் மகாபயபக்திக்குரியது. நமது உத்திரவாதமும் பெரியது. நமது ஜீவியத்தாலும் ஊழியத்தாலும் அநேகரை ஆண்டவரிடம் நடத்துவதற்கு அவர் நம்மை ஏற்படுத்தி இருக்கிறார். அவர்களுடைய ஆசீர்வாதத்திற்கோ. கேட்டுக்கோ நாம் காரணமாயிருக்கலாம்... நமது சபை சிறியதோ பெரியதோ அதிலுள்ள ஒவ்வொருவரும் ஆண்டவரை அறிந்து பற்றிக் கொள்ளும்படி பிரயாசப்பட வேண்டும். கிறிஸ்துவே எப்பொழுதும் நமது பிரசங்கப் பொருளாயிருப்பாராக!....( ஏழுவார்த்தைகள் - பக் 170, 171)(பரமானந்தம், டிசம்பர் 1941)

**74.7.வாக்குத்தத்தம்:-** ..... "வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.... இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்".... ஆமென் (மத் 28=18-20)

இவ் வாக்குத்தத்தங்களைப் பெற்ற ஏழை அப்போஸ்தலர்களான சீஷர்களும் பரிசுத்த ஆவியானவர் தங்களோடு வந்த பின்பு பதினொருவரும் எழுந்து நின்று ஒருமித்து தங்கள் ஆண்டவர் உயிர்த்தெழுந்தார் என்று தைரியமாக சாட்சி கூறினர். அவர்கள் தொகை பெருகிய போது எருசலேமை விட்டு சிதறடிக்கப்பட்டு அவர்கள் சிதறிய இடங்களிலெல்லாம் தங்கள் ஆண்டவரை அறிவித்தனர். இவ்விதமாக ரோமராஜ்ய எல்லையெங்கும் கிறிஸ்துவின் அடியார்கள் நிறைந்தார்கள். இவர்கள் உலகத்தை கலக்குகிறவர்கள் என்று பழிச்சொல்லுக்கு ஆளாகி ரோமர்களால் சின்னபின்னமாக்கப்பட்டார்கள். முடிவு : ரோமராஜ்யம் ஒழிந்தது. கிறிஸ்துவோடு கிறிஸ்துவின் அடியார்களும் தங்கள் இரத்தத்தை சிந்தி நிலைநிறுத்திய ஆவிக்குரிய ராஜ்யமாகிய தேவனுடைய சபை இன்று உலகமெங்கும் வியாபித்திருக்கிறது எப்படி? உயிர்த்தெழுந்த கர்த்தர் தமது அடியார்களோடு கூட இருக்கிறார். ஒவ்வொரு நூற்றாண்டிலும் கிறிஸ்துவின் அடியார்கள் அடைந்த துன்பத்திற்கு அளவு இல்லை. இக்காலத்தில் ருஷ்யா ருமேனியா நாடுகளில் கிறிஸ்துவின் அடியார்கள் அடைந்த பாடுகளை நினைத்தால் இருதயம் வெடித்துவிடும். அவர்களை வெளியரங்கமாக ஒடுக்க முயன்றார்கள். ஆனால் அவர்களுடைய சிறைக்கூடங்களெல்லாம் ஆராதனைக் கூடங்களாக மாறிவிட்டது. நமது தேசம் சுதந்திரம் பெற்றவுடன் கிறிஸ்தவர்களை ஒடுக்க வேண்டும் என்று சிலர் பிரதமர் நேருஜியை நாடினார்கள். கிறிஸ்தவர்களை நசுக்க முயற்சித்தால் அவர்கள் அதிகமாக பெருகிப் போவார்கள். அவர்கள் சரித்திரத்தில் அப்படியிருக்கிறது என்றார். என் உத்தம சகோதரரே உலகத்தின் கடைசிப் பரியந்தமும் புறப்பட்டு தைரியமாய் போங்கள். நமது ஆண்டவருக்கு வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. பாதாளத்தின் வாசல்கள் நம்மை மேற்கொள்வதில்லை. ஏனெனில் உயிர்த்தெழுந்த நமது நேச ஆண்டவர் நம்மோடு கூட சகல நாட்களிலும் இருக்கிறார். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் ஜெயம் கொடுக்கிற நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம். ஆமென்!

# 75 சிறிய தலைப்புகளின் அகராதி


அடக்கம் பண்ணப்படாதவர்கள் 64
அதிகாரம் 25
அநேகஸ்திரீகள் 4
அப்போஸ்தலர்கள் 62
அவிசுவாசம் 14
ஆண்டவர் 54
இஸ்ரவேல் 66
இயேசுவானவர் 46,59,60,61
இவளை நினைத்தல் 10
இவள் செய்தது 8,
ஊழியம் 27,
ஒலிவமலை 42,
கடிந்து கொள்ளுதல் 15,
கட்டளை 23,
காவல்சேவகர்கள் 48,
கிலேயோப்பா மரியாள் 5,
கேபா 51,
கோபக்கினை 55,
சந்தேகம் 21,24
சபை 72,
சலோமே 2,
ஜனங்கள் 50,
சாட்சி 18,19,
ஜாதிகள் 68,
சிறிய தலைப்புகளின் அகராதி 75,
சுதந்தரம் 56,
சுவிசேஷம் 67,
செய்தி 12,
தரிசனம் 20,
திபேரியா 29,
தூதர்கள் 47,
தெளிவான திருஷ்டாந்தம் 41,
தேவ ஊழியர் 73,
தேவராஜ்யம் 43,71,
நற்கிரியை 7,
நித்திய ஜீவன் 37,
நியாயத்தீர்ப்பு 57,
நினைவுகூர்தல் 34,
பரமேறுதல் 11,28,45,
பவுல் 52,
பழைய ஏற்பாடு 58,
பழைய நிலைமை 32,
பாக்கியவான்கள் 40,
பாவமன்னிப்பு 69,
பிரதான ஆசாரியர் 49,
பின்வாங்குதல் 30,38
புறஜாதிகளின் இரட்சிப்பு 26,
பெத்தானியா மரியாள் 6,
மகதலேனா மரியாள் 1,
மகா உபத்திரவம் 65,
மகிமைப்படுத்துதல் 35,
முதற்பலன் 53,
முந்திக் கொண்டாள் 9,
யோவன்னாள் 3,
வாக்குத்தத்தம் 44,74,
வாரத்தின் முதல்நாள் 36,
விசாரணை 13,
விசுவாசமும் இரட்சிப்பும் 70,
விசுவாசிகள் 63,
விவரித்தல் 16,
வெளிப்படுத்துதல் 17,22,33,39,
வெறுமை 31.



# கர்த்தராகிய இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்து தரிசனமாகுதல்




Copy Right : S.Sakthi Devadoss, 125-19/2, IInd Street, Devaraya Nagar, K.K.Nagar Road, Trichy - [illegible]0 021. (21.06.2010)

# உயிர்த்தெழுதல்கள்!




Copy Right : S.Sakthi Devadoss, 125-19/2, IInd Street, Devaraya Nagar, K.K.Nagar Road, Trichy - 620 021. (21.06.2010)

# என் மீட்பர் உயிரோடிருக்கிறார்!

★ என் அரும்பே; உன் பலவீனம் இன்னதென்று உன் ஆண்டவருக்கு தெரியும், நீ திகையாதே, ஏனெனில் உன் ஆண்டவர் பாவமும், சாபமும், மரணமும், நரகமும், பேயும், நடுங்கிட வெற்றி சிறந்தார். எனவே உன் சஞ்சலம் நீக்கி மகிழ்வாயிருந்து, உன் ஆண்டவரின் பாதத்தில் காத்திரு; உன்னை பெலப்படுத்த அவர் உயிரோடிருக்கிறார்.

★ என் தளிரே! உலகமும் பிசாசும் மாம்சமும் உன்னை கீழ்ப்படுத்த முயற்சிக்கும் போது, நீ பதறாதே, ஏனேனில் உன்னை மீட்கும்படி தன்னையே கொடுத்த உன் ஆண்டவர் உன்னை ஏற்ற சமயத்தில் உயர்த்துவதற்கு அவர் உயிரோடிருக்கிறார்.

★ என் கொடியே! நாசங்களும் சர்வ மோசங்களும் உன்னை மேற்கொள்ளும் போது நீ மிரளாதே, ஏனெனில் ஆண்டவர் அம்பரத்திலிருந்து அருளை பொழிந்து உன்னை காப்பதற்கு அவர் உயிரோடிருக்கிறார்.

★ என் மலரே! கபடனும், துஷ்டனும் அதிகாரமும் துரைத்தனமும் உன்னை நசுக்க முயற்சிக்கும் போது, நீ வாடாதே ஏனெனில் உன் ஆண்டவர் உன்னில் தம் ஆசியை பொழிந்து உன்னை சுகந்த வாசனையாக்க அவர் உயிரோடிருக்கிறார்.

★ என் கனியே! ஓயாப் பிணியும், மிகத் தரித்திரமும் உன் சாரத்தை உறிஞ்சும் போது, நீ வாடாதே, ஏனெனில் உன் ஆண்டவர் உன் கண்ணீரை துடைத்து, உன்னை கைவிடாது உன்னை இனிமையாக்க அவர் உயிரோடிருக்கிறார்.

★ என் அன்பே! இருளின் அழிம்பனும், பொல்லாத துஷ்ட ஆவிகளும் உன்வழியை அடைக்கும் போது, நீ பயப்படாதே ஏனெனில் உன் ஆண்டவர் உனக்காக போரிடவும், உன்னை வெற்றி சிறக்கப்பண்ணவும் அவர் உன்னோடு கூட உயிரோடிருக்கிறார்.

★ என் பிரியமே! உன்பாடுகளில் நீ, கலங்காதே உனக்கு சமாதானம் என் நேசமே உன் இருதயம் வாழும், ஏனெனில் உன் ஆண்டவர் உன் காயங்களைக் கட்டி, உன்னை குணமாக்கி உனக்கு மெய் பாக்கியம் அருள அவர் உயிரோடிருக்கிறார்.

